Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்


www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 114 • 15.10.2017

இலங்கையின்
முதல் தர தமிழ்
வார இதழில் உங்கள்
வணிக விளம்பரங்கள்
நியாயமான விலைகளில்
இடம்பெற வேண்டுமா

உடனே அழையுங்கள்
0768255563, 0214927561

தீபம் எப்பொழும் உங்களுக்கான
தன்னிகரில்லா சேவையை வழங்க முன்னிற்கும்



## மகிந்தவுடன் சேர ஒரு கோடி டீல்!

## ஐ.எஸ் அழிக்கும் இந்து மதம்!

## சீக்கன பட்ஜெட் மட்டக்களப்பில் ஜாலி ட்ரிப்!

## புலிகளின் மெகா ஆயுதக்கடத்தல் இதுதான்!



## எந்த நாட்டில் என்ன படிக்கலாம்?

வைத்தியசாலையில் இருந்து

# மீண்டு வருவாரா விக்னேஸ்வரன்?



Vinmeen Pizza
Vinmeen
Restaurant & Bakery

நான்காவது ஆண்டு வெற்றிப் படியில் காலடி எடுத்து வைக்கும் நாம் நவீன உயர்தர ஐசிங்கேக் ஓடர்களை உடனுக்குடன் செய்து வழங்கி வருகின்றோம். மற்றும் மங்கலகரமான நிகழ்வுகளுக்குத் தேவையான உணவுகளை ஓடர்செய்து பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் நவீன உயர்தர வெதுப்பக உற்பத்திகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



No. 83, Main Street, Nelliadi, Karaveddy.
T.P: 021 226 1051
கிளை: பஸ் நிலையம் முன்பாக (இலங்கை வங்கி அருகில்)
கொடிகாமம் வீதி நெல்லியடி. தொ.பே: 021 226 1354

# கிருபா லேணர்ஸ்
# KIRUBAA LEARNERS

DS.589 அரச அங்கிகாரம் பெற்ற கனரக (A) தர சாரதிப் பயிற்சி பாடசாலை

இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 0777 225 292
071 4546 960

சிறந்ததோர் சாரதி எப்போதும்
வீதி ஒழுங்கு பற்றி
விழிப்புடன் இருப்பார்.




- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவானசாரதி அனுமதிப்பத்திரம்.
- மும்மொழிகளிலும் வாகனப்பயிற்சி.
- இரவு நேர வாகனப்பயிற்சி.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- தவணை முறைக் கட்டணங்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப்பயிற்சி.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

**யாழ்ப்பாணம்**
- 227/6 கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். (மதவடி அருகில்) 021 224 2022, 071 4546 956
- முதலாம் கட்டைச்சந்தி, பருத்தித்துறை. 021 492 3201, 071 4546 961
- 36, கச்சேரி நல்லூர் வீதி, (கச்சேரி அருகில்) யாழ்ப்பாணம். 021 222 6699, 076 722 5292
- ஓம்பிளாசா, பருத்தித்துறை வீதி, ஆவரங்கால். 021 222 6688, 071 777 6969
- கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளைசந்தி, தெல்லிப்பளை. 021 224 3737, 071 4546 959
- கண்டி வீதி, சாவகச்சேரி. (நீதிமன்றம் அருகில்) 021 227 0700, 071 4546 957
- பிரதான வீதி, (போலிஸ் நிலையம் முன்பாக), நெல்லியடி. 021 300 6550, 071 4546 958

**வவுனியா**
- 216, ஏ9 வீதி, வவுனியா. (வசந்தி திரையரங்கு முன்பாக) 024 222 7777, 0777 100 444


**மன்னார்**
- 94, பிரதான வீதி, மன்னார். 023 225 1656, 077 847 2732


**கிளிநொச்சி**
- ஏ9 வீதி, கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக) 021 228 5505, 071 4546 955
- புளியடிச்சந்தி, முள்ளைவீதி, விசுவமடு. 021 320 1515, 077 8585 263
- நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில். 021 300 6544, 070 333 6161
- வாடியடி சந்தி, பூநகரி. 021 320 1818, 070 333 7171



யாழ் புகையிரத நிலையத்துக்கு
அருகாமையில்
சகல வசதிகளுடனும்
அதி உயர்தர வலம்புரி ஹோட்டல்.







Green Grass

# The Valampuri





# TOPAZ
No. 01 Shop in Jaffna





திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை
சுடிதார் மற்றியல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்





ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்





மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச்
சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்

We are specialist in in
Wedding suits, Wedding Sarees , Party Sarees,
Wedding Frocks, Party Frocks and all kinds of Items

| TOPAZ | TOPAZ TAILORING | TOPAZ MALL |
|---|---|---|
| No 72, Grand Bazaar<br>Jaffna<br>Tel 021 222 4743<br>Fax 021 222 7645 | No 80/24, Kasthuriyar Road<br>Jaffna<br>Tel 021 222 4643<br>Email : topazagn@gmail.com | No 195, Power House Road<br>Jaffna<br>Tel 021 222 4933<br>021 221 9933 |



# நோர்சி மீடியா நிறுவனத்தின்

- தீபம் தொலைக்காட்சி
- தீபம் வார இதழ்
- தீபம் இணையத்தளம் (www.deepamtv.asia)

ஆகிய ஊடகங்களில் உங்கள் பிரதேச செய்திகள், ஆலய நிகழ்வுகள், விளையாட்டு நிழ்வுகள் போன்றவை இடம்பெறவேண்டுமெனில்

தொடர்புகளுக்கு
## தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு
நல்லூர், யாழ்ப்பாணம். (கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிடத்தொகுதி)



கே.ராகோத்தமன்

**இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கு மிக ஆழமானது. ராஜிவ் கொலை முயற்சி எப்படி திட்டமிடப்பட்டது, எப்படி அரங்கேற்றப்பட்டது, இந்திய புலனாய்வு அதிகாரிகள் எப்படி அதை துப்பு துலக்கினார்கள், அப்பொழுது நடந்த சம்பவங்கள், சவால்கள் என்ன என்பதை வழக்கின் தலைமை அதிகாரி கே.ரகோத்தமன் விபரமாக எழுதியுள்ளார். முழுமையான ஆதாரத்துடன் தீபம் வெளியிடுகிறது.**



# ராஜிவ் காந்தி கொலை
## எப்படி... என்ன நடந்தது?



கே.ராகோத்தமன்

சம்பவ இடத்தில் கண்டெடுக்கப்பட்ட அந்த கமராவுக்குரிய பையினுள் ஒரு விசிட்டிங் கார்ட் இருந்தது. போட்டோகிராபரின் அடையாள அட்டை கிடைத்தது. அதனை வைத்து, அவர் யார் என்று அடையாளம் காணலாம். அவ்வளவே. ஏற்கெனவே கை அடையாளம் காணப்பட்டு எடுத்துச்செல்லப்பட்டுவிட்டதாகவும் தெரியவந்தது.

அது அந்த கமராமேனாக இருக்கலாம். படம் எடுக்கும்போது குண்டு வெடித்து இறந்திருக்கலாம். அடையாள அட்டையில் அந்த போட்டோகிராபரின் பெயர் ஹரி பாபு என்று தெரிந்தது. அவர், சென்னையில் அன்றைக்கு மிகப் பிரபலமான போட்டோகிராபராக இருந்த சுபா சுந்தரத்தின் ஸ்டுடியோவில் பணியாற்றுகிறார் என்கிற விவரமும் இருந்தது. அவரது கமரா பையில் இருந்த விசிட்டிங் கார்ட் 'வைட் ஆங்கிள்' என்னும் புகைப்பட நிறுவனத்தை நடத்தி வந்த ரவிசங்கரன் என்பவருடையது.

இந்த இரண்டு பெயர்கள்தான் தொடக்கம். சரி, போன் செய்து விசாரிக்கலாமே? சுபா சுந்தரமும் சரி, ரவி சங்கரனும் சரி. பத்திரிகை உலகில் அனைவருக்கும் தெரிந்த பெயர்கள்.

எத்தனையோ பத்திரிகை போட்டோ கிராபர்கள் நிகழ்ச்சிக்கு வந்திருப்பார்கள். அவர்களில் யாரோ ஒருவர் இந்த இருவருக்குத் தெரிந்த நபராக அவர் இருக்கலாம். அல்லது இருவரில் ஒருவரேவா? சந்தேகம் தெளிய போன் செய்ததில், ரவி சங்கரன் சென்னையில் இருப்பது தெரிந்துவிட்டது. சரி, அவர் இல்லை. அவரது விசிட்டிங் கார்ட் எப்படியோ இவரது பையில் வந்திருக்கிறது.

மறுபுறம் சுபா சுந்தரத்தைத் தொடர்பு கொண்டபோதுதான் முதல் நெருடல் உண்டானது. 'ஹரி பாபுவா? என் நிறுவனத்திலா? அப்படி யாரும் இல்லையே' என்று சொல்லியிருந்தார். ரவி சங்கரனை மேற்கொண்டு விசாரித்ததில் சில விஷயங்கள் கிடைத்திருந்தன. ஹரி பாபு அவருடைய நண்பர்தான்.

இருவருமே சுபா சுந்தரத்திடம் பணியாற்றியவர்கள்தாம். தமிழ்நாட்டில்



எந்த ஒரு பத்திரிகையாளரை அல்லது பத்திரிகை புகைப்பட நிபுணரைக் கேட்டாலும் ஹரி பாபு சுபா ஸ்டூடியோவில் பணியாற்றிய விவரம் கிடைத்துவிடும்.

இந்த எளிய பதார்த்தத்தை யோசிக்காமல் சட்டென்று சுபா சுந்தரம், ஹரி பாபுவுக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னதுதான் ஆரம்பம்.

அந்த கமரா, ரவி சங்கரனுடையது.

சொந்தமாக கமரா வைத்துக்கொள்ளும் அளவுக்குக் கூட வசதியில்லாத ஹரி பாபு, ராஜிவ் பொதுக்கூட்டத்துக்காக அதனைத் தனது நண்பர் ரவி சங்கரனிடம் இரவல் வாங்கிச் சென்றிருக்கிறார்.

மே 21ம் தேதி இரவு சம்பவம் நடந்த வினாடி முதல், மைதானத்தில் சிதறிக்கிடந்த ஆதாரங்களைச் சேகரிப்பதும், இறந்த உடல்களை அடையாளம் காண்பதும், காயமுற்றவர்கள், சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தவர்கள் குறிப்பாக சம்பவ இடத்தில் வெகு அருகில் இருந்தவர்களிடம் ஆரம்ப விசாரணை செய்வதுமாக இருந்தார்கள், சி.பி.சி.ஐ.டி. பொலிசார்.

மே 24ம் திகதி இந்த வழக்கு சி.பி.ஐ. வசம் முறைப்படி வந்து சேர்ந்து, அன்று பிற்பகல் நாங்கள் அதனை ஒரு புதிய வழக்காகப் பதிவு செய்தோம்.

ஆனால் 23ம் திகதி இரவே அந்த பிலிம் ரோல் ஹிந்து நாளிதழுக்குச் சென்று சேர்ந்து பிரின்ட் போடப்பட்டு 24ம் திகதி சொல்லக் காத்திருந்த மூன்று பெண்கள் அதில் ஒரு படத்தில் இடம் பெற்றிருந்தார்கள்.

புடைவை கட்டிய பெண் ஒருவர். பச்சையும் ஒரேஞ்சும் கலந்த வண்ணத்தில் சல்வார் கம்மீஸ் அணிந்த பெண் ஒருவர். ஒரு சிறுமி. சல்வார் கம்மீஸ் அணிந்த பெண்ணின் கரங்களில் ஒரு சந்தன மாலை. அவ்வளவுதான். பின்னாளில் உலகப் புகழ் பெற்ற இந்தப் புகைப்படத்தில் வெள்ளை நிற குர்தா, பைஜாமா அணிந்த நபர் ஒருவரும் இருந்த காட்சி உங்கள் மனக்கண்ணில் வருமானால், அது உண்மையே.

ஆனால் ஹிந்து நாளிதழில் வெளியான படத்தில் அந்த குர்தா பைஜாமா நபர் இல்லை. படத்தின் இடது ஓரத்தில் அந்த மூன்று பெண்களை அடுத்து சற்றுத் தள்ளி நின்றிருந்த அந்த நபரின் உருவத்தை ஹிந்து நீக்கிவிட்டு, பெண்களை மட்டும் பிரசுரித்திருந்தது.

மிக எளிய காரணம்தான் அதற்கு.

சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம், சந்தேகத்துக்குரிய நபர்கள் என்னும் அளவில் பிரசுரிக்கப்பட்டிருந்த அந்தப் படத்தில், ஒரு பத்திரிகையாளர் தோற்றத்தில் யாரோ ஒரு நபரும் இருக்கிறார்.

பொதுவாக எந்தப் பத்திரிகையும் காரணமில்லாமல் இன்னொரு பத்திரிகையாளரின் புகைப்படத்தைத் தனது இதழில் வெளியிட விரும்பாது.

எதற்கு அந்த குர்தா பைஜாமா நபருக்கு வீண் விளம்பரம் என்று நினைத்து அவரை மட்டும் நீக்கிவிட்டிருந்தார்கள்!

ஹரி பாபு எடுத்த அந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பத்து புகைப் படங்களும் ஹிந்துவுக்குப் போய்விட்டு, பின்னால் தடய அறிவியல் துறையில் சி.பி.சி.ஐ.டி. பிரிவினர் மூலம் பிரின்ட் போடப்பட்டு முறைப்படி எங்களுக்கும் வந்து சேர்ந்தபோதுதான், அதே படத்தின் இடது ஓரம் குர்தா பைஜாமா நபர் ஒருவரும் இருக்கும் விஷயத்தைக் கண்டோம்.

யார் அவர்?

யோசித்துக்கொண்டிருந்த வேளையில், ஸ்ரீபெரும்புதூர் நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த பகவான் சிங் என்ற பத்திரிகையாளர் சம்பந்தப்பட்ட புகைப்படத்தைப் பார்த்து விட்டு, ஒரு தகவலை எங்களுக்குச் சொன்னார். பொதுக்கூட்ட மைதானத்தில் அவர் ஹரி பாபுவுடன் அந்த குர்தா பைஜாமா அணிந்த நபரைப் பார்த்திருக்கிறார். யார் அவர் என்று விசாரித்தபோது, 'இவர் வைட் ஆங்கிள் ரவிசங்கரனின் பார்ட்னர்' என்று ஹரி பாபு சொல்லியிருக்கிறார்.

பொதுக்கூட்டத்தில் காவலுக்கு இருந்த சப் இன்ஸ்பெக்டர் அனுசுயா, குண்டு வெடிப்பில் அடிபட்டு மருத்துவமனையில் இருந்தார். அவரிடம் அந்தப் புகைப் படங்களைக் காட்டியபோது, அவர்களைப் பொதுக்கூட்ட மைதானத்தில் பார்த்ததை நினைவுகூர்ந்தார்.

சரி. இதுதான். இவ்வளவுதான். ஹரி பாபு படமெடுத்திருக்கிறார். பத்துப் படங்கள் இருக்கின்றன. இதிலிருந்து எதாவது துப்புக்கிடைத்தால்தான் உண்டு.

அது பிறகு. ஹரி பாபுவின் உறவினர்களுக்குத் தகவல் சொல்லியாகிவிட்டதா? அவர்கள் உடலைப் பெற்றுச் சென்று விட்டார்களா?

காஞ்சிபுரம் அரசுப் பொது மருத்துவமனையில் உடலை அடையாளம் சொல்லி, பெற்றுக்கொண்டு அங்கேயே இறுதிச் சடங்குகளை முடித்துவிட்டு அவர்கள் சென்னைக்குப் போய்விட்டார்கள் என்று சொல்லப்பட்டது.

குழப்பமாக இருந்தது. அப்படியா? என்ன அவசரம்? வீட்டுக்குக் கூட எடுத்துச் செல்ல விரும்பமாட்டார்களா? சரி. ஒருவேளை சிதைந்திருந்த உடலை எடுத்துச் செல்ல வேண்டாம் என்று கருதியிருக்கலாம்.

நான் சில விசாரணை அதிகாரிகளுடன் சைதாப்பேட்டையில் இருந்த ஹரிபாபுவின் வீட்டுக்குப் புறப்பட்டேன்.

பார்த்ததுமே ஏழைமை தெரியும் எளிய குடிசை அது. மிகச் சிறிய குடிசை. ஒரு சில தட்டுமுட்டுச் சாமான்கள். அழுக்குத் துணிகள். சுவரில் கண்ணாடி. அலுமினியப் பாத்திரங்கள். தாழ்வான வாசல். ஒரே பையன். நிகழ்ச்சியைப் படமெடுக்கப் போனான்.

இப்படி அவனே படமாகிவிட்டானே. அழுகைகள், வருத்தங்கள், சோகம். அப்போதும் எங்களுக்குத் தெரியாது. அவனிடமிருந்துதான் இந்த வழக்கே ஆரம்பமாகப்போகிறது என்பது.

(தொடரும்)

# அரசியல் கைதிகளை மனிதாபிமானத்துடன் அணுகுங்கள்!

**மட்டக்களப்பு, ஒக்.15**

தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தை அரசாங்கம் மனிதாபிமான ரீதியில் நோக்கி அவர்களின் விடுதலைக்கான நியாயமான தீர்வொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் கூறியுள்ளார்.

காலங்காலமாக தமிழ் அரசியல் கைதிகள் தொடர் உண்ணாவிரதப் போராட்டங்களை முன்னெடுப்பதும் அவர்களுக்கு வாக்குறுதிகள் வழங்கப்படுவதும் வாடிக்கையாகியுள்ள நிலையில் இது தற்போது முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டிய தேவையுள்ளதாக முன்னாள் முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் குறிப்பிட்டார்.

அனுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் முன்னெடுத்துவரும் உண்ணவிரதப் போராட்டம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்,

நாட்டில் யுத்தம் முடிந்து 8 ஆண்டுகள் கடந்து விட்டன.ஆனால் அரசியல் கைதிகளின் விடுதலை மீள்குடியேற்றம் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் உட்பட பல விடயங்கள் தொடர்பில் இதுவரை எவ்விதமான தீர்க்கமான தீர்வுகளும் வழங்கப்படவில்லை.

ஏற்கனவே நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாமல் அனைத்து சமூகங்களும் புரிந்துணர்வுடனும் நல்லிணக்கத்துடனும் வாழ வேண்டும் என்பதே எமதனைவரதும் ஆசையாகும்.

அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவது வரவேற்கத்தக்கது என்ற போதிலும் தமிழ் அரசியல் கைதிகளுக்கான விடுதலையை மனிதாபிமான ரீதியில் அரசாங்கம் வழங்க முன்வரும் பட்சத்தில் அது அரசாங்கத்தின் பாரிய நல்லிணக்க சமிஞ்சையாக சிறுபான்மை சமூகம் சர்வதேச சமூகத்தால் பார்க்கப்படும் என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே விசாரணைகள் இன்றியும் தம்மீதான தண்டனைக்காலத்துக்கு அதிகமாகவும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை சிறுபான்மையினர் மத்தியில் மேலும் அரசாங்கம் மீதான நம்பிக்கையை வலுப்படுத்த உதவும் என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

தமது பிள்ளையை பிரிந்து,தந்தையைப் பிரிந்து,கணவனை பிரிந்து மற்றும் சகோதரரைப் பிரிந்து உறவுகள் படும் வேதனை மனிதாபிமான ரீதியில் நோக்கப்பட வேண்டும் என்பதை அரசாங்கத்தின் சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்துக்கு பொறுப்பாக இருக்கின்ற அமைச்சர் மனோ கணேசன் போன்றோர் அரசாங்கத்துக்கு வலியுறுத்த வேண்டும். நாட்டில் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட வேண்டுமானால் அது மக்கள் மனங்களூடாகவே கட்டியெழுப்பப்பட வேண்டும்.

நம்பிக்கையிழந்த மக்கள் மனங்களில் நாம் நல்லிணக்கத்தை விதைக்க முடியாது,ஆகவே பாதிக்கப்பட்ட மக்கள் மனங்களில் நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாக தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் நியாயமான தீர்வொன்று வழங்கப்பட்டு சிறுபான்மை மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கை விதைக்கப்படுவதன் ஊடாக மாத்திரமே நல்லிணக்கத்தை வளர்க்க முடியும் என கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் கூறினார்.



## அதாஉல்லாவுடன் இணைந்தார் அன்வர் முஸ்தபா!

**கல்முனை, ஒக்.15**

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக கடந்த பொதுத்தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்டவரும் சிம்ஸ் கல்வி நிறுவனத்தின் தலைவருமான அன்வர் முஸ்தபா, தேசிய காங்கிரஸில் இணைந்துகொண்டார்.

கட்சியின் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லாவின் முன்னிலையில், கல்முனை அல் றூபி ஹோட்டேல் கேட்போர் கூடத்தில்கடந்ததிங்கட்கிழமை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் வைத்து, தேசிய காங்கிரசில் இணைந்து கொண்டமையினை அன்வர் முஸ்தபா உறுதிப்படுத்தினார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில், தேசிய காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் கிழக்குமாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவருமான எம்.எஸ். உதுமாலெப்பை, தேசிய கொள்கைபரப்புச் செயலாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான முகம்மட் எம்.எம். பஹீஜ்,கிழக்கு மாகாண கொள்கைபரப்புச் செயலாளர் அகமட் புர்கான் மற்றும்கலாநிதி எஸ்.எல்.றியாஸ் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## காதித தொழிற்சாலைக்கு உயிர்கொடுக்கும் இந்தியர்கள்!

**வாழைச்சேனை, ஒக்.15**

வாழைச்சேனை கடதாசி ஆலையை இந்திய பொறியியலாளர் குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை (06) பார்வையிட்டுள்ளனர். காகித ஆலையை புனரமைத்து மீள இயங்க வைக்கும் நோக்கத்துடன் இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டது. இந்தியாவின் எஸ்வீ தொழிற்சாலையினரே புனரமைப்பு பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், இந்திய எஸ்.வீ தொழிற்சாலையின் பொறியியலாளர் குழாம் மற்றும் ஆலையின் முன்னாள் தவிசாளர் மங்கள சீ செனரத் ஆகியோர் தொழிற்சாலையை பார்வையிட்டனர்.

இங்கு உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் "இக்கடதாசி ஆலை இருமுறை தொழில் விருதுகளை வென்ற ஒரு பழம் பெரும் தொழிற்சாலையாகும். ஏராளமானவர்களிற்கு தொழில் வாய்ப்பு பெற்றுத் தந்த இடம். கடதாசி ஆலையை மீள இயக்குவதற்கு உதவிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமரின் சிரேஷ்ட ஆலோசகர் பாஸ்கரன், கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியூதின், எதிர்கட்சி தலைவர் இரா.சம்பந்தன், பெரிய முதலீட்டை நாட்டிற்கு கொண்டு வந்த முன்னாள் தவிசாளர் தேசமான்ய மங்கள சீ செனரத் ஆகியோருக்கு நன்றியை தெரிவிக்கிறேன்.

தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த எஸ். வீ. கைத்தொழில்சாலையின பிரதம பொறியிலாளர் எஸ்.பழனியப்பன் கருத்து தெரிவிக்கையில் "இத்தொழிற்சாலையை கிட்டத்தட்ட எட்டு மாதங்களுக்கும் இங்குள்ள இயந்திரங்களை திருத்தி அமைத்து சுமார் இருபது வருடங்களுக்கு பயன்படுத்துவதற்கேற்ற முறையில் மாற்றுவோம். இங்குள்ள இயந்திரங்கள் மிகவும் உறுதி வாய்ந்த மீள பயன்படுத்தக்கூடிய ஆயுட்கால உத்தரவாதம் கொண்ட ஜேர்மன் வோய்த் இயந்திரமாகும்.

இவ்வியந்திரங்களை திருத்துவதன் மூலம் சுமார் 100 மெட்றிக் காகிதங்களை ஒரு நாளைக்கு உற்பத்தி செய்ய முடியும். ஒரு நாளைக்கு முப்பது லட்சம் பெறுமதியான காகிதங்கள் உற்பத்தி செய்யப்படும். இதன் காரணத்தினால் 2000 குடும்பங்கள் பயன்பெறும்" என்றும் அவர் தெரிவித்தார்.

## ரவிக்கு மீண்டும் சிக்கல்?

**கொழும்பு, ஒக்.15**

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவின் மேலும் பல மோசடிகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. தனக்கு நெருக்கமான மூன்று நிறுவனங்களிலிருந்து வாகனங்களைக் குத்தகைக்கு பெறுமாறு, அரச நிறுவனங்களுக்கு அவர் உத்தரவிட்டதாக அறிய முடிகிறது.

பணம் செலுத்தி வாகனங்களைக் கொள்வனவு செய்வதை விடவும், மேற்கூறப்பட்ட நிறுவனங்களிடமிருந்து குத்தகைக்கு வாகனங்களைப் பெற்றுக் கொண்டமை மூலம் அரசாங்கத்துக்கு நட்டத்தை ஏற்படுத்தியதாகவும், அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் அமைச்சரவையில் பேசப்பட்டபோது அமைச்சர்களான எஸ்.பி. திஸாநாயக்க மற்றும் தயாசிறி விஜேசேகர ஆகியோர், இது குறித்து கடுமையான விமர்சனங்களை முன்வைத்ததாகவும் அறிய முடிகிறது. இதன்போது, ரவி கருணாநாயக்க மோசடி செய்தார் எனும் குற்றச்சாட்டினை ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டார் எனவும் கூறப்படுகிறது.

மத்தியவங்கி பிணைமுறி மோசடியுடன் ரவி கருணாநாயக்க தொடர்புபட்டார் எனக் கூறப்பட்டதையடுத்து அவருடைய நிதியமைச்சுப் பதவி பறிக்கப்பட்டது. பின்னர் அவர் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்ட போதும், அவர் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து பாரிய விமர்சனங்கள் எழுந்தமையினால், தனது அமைச்சுப் பதவியை ரவி ராஜினாமா செய்திருந்தார்.


## லைற் போட தெரியாதவர்களிற்கு அபிவிருத்தி தெரியுமா?

**திருகோணமலை, ஒக்.15**

கிழக்கு மாகாணத்தில் முதலீட்டுக்கு உகந்த காணிகள் பல பயன்படுத்தப்படாமல் இருப்பது முதலீட்டுக்கு உந்துசக்தியாகஇருப்பதாககிழக்குமாகாண ஆளுனர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாண ஓய்வூதியதின நிகழ்வுகள் கடந்த 08ம் திகதி திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடந்தபோதே இதனை தெரிவித்தார். திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.புஷ்பகுமார தலைமையில் இந்த நிகழ்வு நடந்தது.

இதில் கலந்துகொண்டு ஆளுனர் மேலும் உரையாற்றுகையில் "ஓய்வுபெற்றவர்கள் கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு தமது பங்களிப்பை வழங்க வேண்டும். தனியார் துறையில் இணைந்து செயற்படல், தொழில் முயற்சிகளை ஆரம்பித்தல் மூலம் இதற்கான பங்களிப்பை வழங்கலாம்.

உள்ளூராட்சி மன்றங்களை மேற்பார்வை செய்ய குழுவொன்று அமைக்கப்படவேண்டும்.சில உள்ளூராட்சி மன்றங்களில் ஒளிராமல் இருக்கின்ற மின்விளக்குகள் உள்ளன. அவற்றை மாற்ற முடியாத செயலாளர்களால், அங்குள்ள ஏனைய பிரச்சனைகளை எப்படி முகாமைத்துவம் செய்ய முடியும்? இதனால் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாட்டை மேற்பார்வை செய்ய பல்துறை நிபுணர்களை கொண்ட குழுவொன்று அமைக்கப்படவுள்ளது" என்றார்.



# மீண்டு வருவாரா முதலமைச்சர்?

## அடுத்தடுத்த சத்திரசிகிச்சைகள்... வைத்தியசாலையின் மூடிய அறை மர்மங்கள்

நம்மாழ்வார்

கடந்த பத்து, பதினைந்து நாட்களில் வடக்கில் நடந்த பல பொது நிகழ்வுகளில் முதலமைச்சர் கலந்து கொள்வதாக திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் முதலமைச்சர் கலந்து கொள்ள வில்லை. முதலமைச்சர் க.வீ.விக்னேஸ் வரனிற்கான ஆசனம் வெற்றிடமாக இருக்கவே நிகழ்வுகள் நடந்து முடிந்திருக்கின்றன. சாதாரண மக்கள் கூட பேசிக்கொள்கிறார்கள் முதலமைச்சரிற்கு என்னவோ ஆகிவிட்டது என. பல நாள் சிகிச்சையின் பின்னர் இப்பொழுதுதான் வீட்டிற்கு திரும்பியிருக்கிறார் என்ற செய்தி வர, அதை முந்திக்கொண்டு, மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டார் என்ற செய்தி வருகிறது. முதலமைச்சர் வீட்டிலிருக்கிறாரா, வைத்தியசாலையில் இருக்கிறாரா என்பது பெரும்பாலான மக்களிற்கு தெரியவில்லை. முதலமைச்சரிற்கு ஏதோ பிரச்சனையென்பதை மட்டும் எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள்.

யாழ்ப்பாண போதனா வைத்திய சாலைக்கு இந்த வருடத்தில் இதுவரை ஏழுக்கும் மேற்பட்ட தடவைகள் சிகிச் சைக்காக சென்றுவிட்டார். சின்னதும் பெரியதுமாக நடந்த சிகிச்சைகளில் சில நாள் தொடக்கம் பல நாள் வரை தங்கியிருந்திருக்கிறார். இந்தமுறை ஒரு வாரத்திற்கும் மேலாக வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருகிறார். முதலமைச்சருக்குஎன்ன ஆகிவிட்டதென்ற மக்களின் கேள்விக்கும் யாரும் பதில் சொல்லவில்லை. முதலமைச்சருக்கு ஏதும் பிரச்சனையாகி விட்டதா என்ற கேள்விக்கும் மக்களிற்கு பதில் தெரியவில்லை.

### முதலமைச்சரிற்கு என்ன ஆகிவிட்டது?

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இருதய நோய் சத்திரசிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட முதலமைச்சர் எப்படி இருக்கிறார்? அவருக்கு என்ன ஆகிவிட்டது? உண்மையிலேயே ஏதாவது ஆபத்தான கட்டத்தில் இருக்கிறாரா? என்பதெல்லாம் மிக முக்கியமான கேள்விகள். ஆனால், அதுபற்றி வெளியில் யாரும் அறிந்துகொள்ள கூடாதென்பதில் முதலமைச்சர் அலுவலக, வைத்தியசாலை வட்டாரங்கள் முயற்சிக்கின்றன. முதலமைச்சரின் சிகிச்சை தொடர்பான எந்த தகவலொன்றாலும், முன் அனுமதியின்றி வழங்ககூடாதென்ற அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்கலாமோ என்னவோ, முதலமைச்சர் என்றதுமே எல்லோருமே "எங்களுக்கு எதுவுமே தெரியாது" என சொல்லிவைத்ததை போல சொல்கிறார்கள்.

முதலமைச்சர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த காலத்தில் மிக முக்கிய அதிகாரிகள் மட்டுமே அவரை சந்திக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர். முதலமைச்சரின் கீழ் இயங்கும் திணைக் களங்களின் அதிகாரிகள், ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள் போன்ற சிலர்தான் முன் அனுமதியின் பின் சந்திக்க அனுமதிக்கப்பட்டிருந்த அதிகாரிகள். இதுதவிர, அமைச்சர்கள், முதலமைச்சரிற்கு நெருக்கமான வடமா காணசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். ஆனால், இவர்களும் கடுமையான கண்காணிப்பு வலயத்தை கடந்தே முதலமைச்சரை பார்வையிட்டுள்ளனர்.

முதலமைச்சரை பார்வையிட செல்பவர்கள் இரண்டு பாதுகாப்பு வலயத்தை கடக்க வேண்டியிருந்தது. முதலில் முதலமைச்சரின் உதவியாளர்களை கொண்ட வட்டம். பொதுவாகவே முதலமைச்சர் எல்லோரையும் விட தூரமாக இருப்பவர். பெரும்பாலான மற்றைய அரசியல் தலைவர்கள் முன் அனுமதி யில்லாமல் சந்தித்து கொள்வது கூட வழக்கமானதுதான். ஆனால் முதலமைச் சரை அப்படி யாரும் சந்திப்பது சிரமம்.

முதலமைச்சர் எங்கு நிற்கிறார்? அலுவலகத்திற் நிற்கிறாரா? என்பதை தெரிந்தால் தான் நேரில் சென்று சந்திக்கலாம்.

ஆனால், இதில் ஒரு சிக்கல் உள்ளது. தொலைபேசி அழைப்புக்களிற்கு முதலமைச்சர் பதிலளிக்கமாட்டார். அண்மைய சில மாதங்களில் இதில் சிறிய மாற்றம் நிகழ்ந்திருந்தாலும், இன்னும் முதலமைச்சரை பெரும்பாலானவர்களால் தொலைபேசியில் தொடர்புகொள்ள முடியாமலிருப்பதே யதார்த்தம்.மிக நெருங்கிய வட்டத்தில் உள்ள சிலரது அழைப்புக்களிற்குத்தான் பதிலளிப்பார்.

அப்படியானால்எப்படி முதலமைச்சரை சந்திக்கிறார்கள்?

இப்போது நாம் சொல்லும் தகவல் சிலருக்கு சுவாரஸ்யமாக இருக்கலாம். சிலருக்கு எரிச்சலாக இருக்கலாம். முதலமைச்சரின் செயலாளர், உதவி யாளர்கள், அலுவலக பணியாளர்களின் தொலைபேசி இலக்கங்களிற்கு தொடர்பு கொண்டு, முதலமைச்சர் நிற்கிறாரா என்பதை அறிந்த பின் சென்று சந்திக்கிறார்கள். கூட்டமைப்பின் ஒரு முக்கியஸ்தர் முதலமைச்சரின் சமையல்கார பெண்மணியிடம்தான் முதலமைச்சர் நிற்கிறாரா என்பதை கேட்டறிந்து விட்டு, நேரில் சென்று சந்திக்கிறார். இன்னொரு முக்கியஸ்தர் முதலமைச்சரின் தனிப்பட்ட தட்டச்சு உதவியாள பெண்ணிடம் கேட்கிறார்.



சாதாரணமாகவே முதலமைச்சரிற்கு கடுமையான அரண் அமைத்து நிற்கும் உதவியாளர்கள், வைத்தியசாலையில் இன்னும் கறாராக இருக்க மாட்டார்களா? இவர்களையும், பின்னர் வைத்தியசாலை கண்காணிப்புவளையத்தையும்கடந்துதான் முதலமைச்சரை சந்திக்கலாம்.

கடந்த பத்து நாட்களின் முன்பாக முதலமைச்சர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். ஏற்கனவே இதயத்தில் சில சிக்கல்கள் ஏற்பட்டு சத்திர சிகிச்சை செய்திருந்தார். இப்பொழுது இதயத்தில் சாதாரண தொற்று ஏற்பட்டிருந்ததால் அனுமதிக்கப்பட்டிருந்தார். ஓரிரு நாட்களில் வைத்தியசாலையிலிருந்து திரும்பி கோவில் வீதியிலுள்ள தனது உத்தியோகபூர்வ வீட்டில் ஓய்வெடுத்து வந்தார் சிலநாளிலேயே சிறுநீருடன் இரத்தம் வெளியேற தொடங்க, மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். குருதியமுக்கம் காரண மாகவும் குருதி வெளியேறியிருக்க வாய்ப் புள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. எனினும், தெளிவான காரணத்தை யாரும் சொல்லவில்லை. கடந்த திங்கட்கிழமையும் அவருக்கு ஒரு சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

வைத்தியசாலையில் முதலமைச்சர் அனுமதிக்கப்பட்டிருந்த காலத்தில் மிக மிக முக்கிய கோப்புக்கள் என்றால் மாத்திரமே முதலமைச்சரின் பார்வைக்கு அனுப்பப்பட்டது. முதலமைச்சர் அலுவலகத்தை அவரது செயலாளர் நிமலன் கார்த்திகேயனே நேரடியாக கவனித்து வந்ததால், அனேக விடயங்களை அவரே கையாண்டார். முதலமைச்சருக்கு போதிய ஓய்வு அவசியமென வைத்தியர்கள் அறிவுறுத்தியிருப்பதால் இந்த ஏற்பாடு என்றார் முதலமைச்சர் அலுவலக அதிகாரியொருவர்.

முதலமைச்சரை நேரில் சென்று பார்த்தவர்கள் சொல்லும் தகவல்கள் அவ்வளவு மகிழ்ச்சியளிப்பதாக இல்லை.

தொடர்ச்சி 7-ம் பக்கம்...

# ஐஎஸ் பயங்கரவாதிகளால் அழிக்கப்படும் ஈராக்கின் 'இந்து' மதம்


கலையரசன்

ஈராக்கில், கிறிஸ்தவ, இஸ்லாமிய, யூத மதங்களுக்கு காலத்தால் முந்திய யேசிடி மதத்தை பின்பற்றும் மக்களைப் பற்றி, நீண்ட காலமாக உலகம் அறிந்திருக்கவில்லை. ஏன், மத்திய கிழக்கிலும், அந்த மக்களின் தேசமான ஈராக்கிலும் பலருக்கு அவர்களைப் பற்றித் தெரியாது. 2014 ம் ஆண்டு, ஐ.எஸ். அல்லது ISIS என்ற இஸ்லாமிய மத அடிப்படைவாத இயக்கம், அந்தப் பிரதேசத்தை ஆக்கிரமித்து யேசிடிக்களை படுகொலை செய்த பின்னர்தான், உலகின் கவனம் அவர்கள் மேல் திரும்பியது.

யார் இந்த யேசிடிக்கள்?

வட ஈராக்கில் வாழும், குர்திய மொழி பேசும் இந்தோ ஆரிய இன மக்கள். அவர்கள் பின்பற்றும் யேசிடி மதம் இஸ்லாத்திற்கு முந்தியது. அரேபியப் படையெடுப்புகள் காரணமாக, இன்றைய ஈராக் முழுவதும் இஸ்லாமிய மயமாகிய போதிலும், யேசிடி மக்கள் புராதன மத நம்பிக்கைகளை கைவிடவில்லை. பெரும்பாலான குர்தியர்கள் காலப்போக்கில் இஸ்லாமியராக மதம் மாறிய போதிலும், இவர்கள் மட்டும் தமது பழைய மதத்தை பின்பற்றினார்கள்.





உதாரணத்திற்கு இப்படி ஒன்றைக் கற்பனை செய்து பார்ப்போம். தமிழர்களில் பெரும்பான்மையானோர் கிறிஸ்தவர்களாக, அல்லது இஸ்லாமியராக மாறி விட்ட பின்னர், சில ஆயிரம் பேர் மட்டும் இந்துக்களாக தொடர்ந்தும் இருக்கின்றனர். இதே மாதிரியான நிலைமை தான் ஈராக்கி குர்திஸ்தானில் உள்ளது. இதுவே அண்மைக் காலத்தில் அங்கு நடந்த அரசியல் பிரச்சினைகளின் அடித்தளமும் ஆகும்.

பொதுவாக, ஈராக்கில் உள்ள இஸ்லாமியர்கள் மத்தியில், யேசிடிகள் பற்றிய அறியாமை நிலவுகின்றது. அவர்கள் பேய், பிசாசை வழிபடுவதாக பலர் நம்புகிறார்கள். ஆனால், அது உண்மை அல்ல. யேசிடி மதத்தில் பிசாசு, அல்லது சாத்தான் என்ற ஒன்று கிடையாது. அதை ஓரளவுக்கு இந்து மத நம்பிக்கையுடன் ஒப்பிடலாம். "இந்து" என்பது கூட, இந்தியாவில் இருந்த புராதன மதங்களுக்கான பொதுப் பெயர்தான். ஆகவே, யேசிடியையும் அந்தக் கண்ணோட்டத்தில் பார்ப்பதில் தவறில்லை என நினைக்கிறேன்.

யேசிடிக்கள் தினந்தோறும் சூரிய வணக்கம் செய்ய வேண்டும். ஆகையினால், அவர்களை "ஒளியின் குழந்தைகள்" என்றும் அழைப்பார்கள். அதே நேரம், ஏழு அல்லது எட்டு தெய்வங்களையும் வழிபடுகிறார்கள். மயில் தெய்வம் மிகவும் முக்கியமானது. அதைப் பற்றி ஒரு புராணக் கதையும் உள்ளது. இறைவன் ஆதாம் என்ற முதல் மனிதனை படைத்து விட்டு, அனைத்து ஜீவராசிகளையும் வணங்குமாறு சொன்னாராம். ஆனால், மயில் மட்டும் மறுத்து விட்டதாம். அந்தக் கதை கூட பிற்காலத்தில் வந்ததாக இருக்கலாம். அதாவது, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதப் பரம்பலுக்கு எதிர்வினையாக உருவாகி இருக்கலாம். ஏனென்றால், "ஆதாமுக்கு அடிபணியாத மயில் தேவதைக் கதை" இன்றைக்கும் யேசிடிகளின் மதப் பெருமிதங்களில் ஒன்று.

ஆச்சரியப்படத் தக்கவாறு, யேசிடிக்கள் இன்று வரைக்கும் சாதியக் கட்டமைப்பை பேணி வருகின்றனர். இதுவும், அவர்களுக்கு இந்திய இந்துக்களுடன் உள்ள ஒற்றுமையைக் காட்டுகிறது. திகைக்காதீர்கள்! நான் சரியாகத் தான் எழுதி இருக்கிறேன். அது சாதி அமைப்பு தான். குறிப்பாக மூன்று வகையான பெரிய சாதிப் பிரிவுகள் உள்ளன. பூசாரிகள் சாதி. இந்தியாவில் பிராமணர்கள் மாதிரி, யேசிடிகள் மத்தியிலும் பூசாரிகள் சாதியில் பிறந்த ஒருவர் மட்டுமே கோயில் பூசாரி ஆகலாம். அதற்கு அடுத்த படியாக கோயில்களுக்கான பல்வேறு பணிவிடைகள் செய்வோர் தனியான சாதியாக உள்ளனர். மூன்றாவது சாதியாக உடல் உழைப்பாளிகள் உள்ளனர்.

சாதிகளுக்குள் உட்பிரிவுகள் உள்ளன. அதாவது, இந்தியாவில் பிராமணர்களுக்கு இடையில் ஐயர், ஐயங்கார், ஆச்சாரி என்றெல்லாம் கோத்திரங்கள் இருப்பதைப் போன்றது. இவற்றை விட, வர்க்க வேறுபாடுகள் தனியானவை. அது எல்லா சாதிகளிலும் ஊடுருவி உள்ளது. வர்க்கப் பிரிவினையானது நவீன காலத்திற்கு உரியது என்பதால், ஒவ்வொரு சாதியிலும் இரண்டு வர்க்கங்கள் இருக்கலாம்.

இங்கே குறிப்பிடப் பட வேண்டிய முக்கியமான விடயம்: திருமணம். யேசிடிகள் தத்தமது சாதிக்குள் மட்டுமே திருமணம் செய்து கொள்வார்கள். அதற்குள்ளும் குலம், கோத்திரம், வர்க்க வேறுபாடுகளை பார்ப்பதுண்டு. மேலும் ஒருவர் யேசிடி தாய், தந்தையருக்கு பிறப்பதால் மட்டுமே அந்த மதத்தை சேர்ந்தவராக இருக்கலாம். யாரும் மதம் மாறி வர முடியாது.

நான் மேலே குறிப்பிட்ட தகவல்களை நினைவில் வைத்திருங்கள். ஏனென்றால், அண்மைக் கால அசம்பாவிதங்கள், எவ்வாறு யேசிடி சமூகத்தை பாழ்படுத்தியது என்பதைப் புரிந்து கொள்ள அது உதவும். மிகக் கடுமையான சமூக மதக் கட்டுப்பாடுகளை பின்பற்றிய யேசிடிகள், யுத்த அனர்த்தத்தால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டனர். அண்மைய யுத்தமானது தீராத வடுக்களை ஏற்படுத்தினாலும், இன்னொரு பக்கத்தில் சமூக சீர்திருத்தங்களையும் கொண்டு வந்துள்ளது. அது பற்றிப் பின்னர் பார்ப்போம்.

ஈராக்கில் யேசிடிகளின் வாழ்விடமான சின்ஜார் மலைப் பிரதேசம், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் உள்ளது. வடக்கே இஸ்லாமிய குர்தியர்கள், தெற்கே இஸ்லாமிய அரேபியர்கள். இரண்டுக்கும் நடுவில் தனித் தன்மை பேணும் யேசிடிக்கள். இது எவ்வளவு கடினமான விடயம் என்று சொல்லத் தேவையில்லை. யேசிடிகள் மொழி அடிப்படையில் குர்தியர்கள். ஆகையினால், குர்திஸ்தான் பாதுகாப்புப் படையான பெஷ்மேர்கா வீரர்கள் தமது பிரதேசத்தை காவல் காப்பதை ஏற்றுக் கொண்டிருந்தனர்.

அதே நேரம், யேசிடி பிரதேசத்தில் கணிசமான அளவு அரேபியர்கள் வாழ்ந்தனர். அவர்களது வீடுகளும் அருகருகே இருந்தன. யேசிடிகளும், அரேபியரும் ஒரே பள்ளிக்கூடங்களில் படித்தார்கள். ஒரே இடத்தில் சேர்ந்து வேலை செய்தார்கள். மற்றைய சமூக வணிகர்களின் கடைகளில் பொருட்களை வாங்கினார்கள். பண்டிகைக் காலங்களில் ஒருவருக்கொருவர் உணவு பரிமாறிக் கொண்டனர். இவ்வாறு சகோதர உணர்வுடன், மிகவும் அன்னியோன்யமாக வாழ்ந்து வந்தனர். ஆனால், 2014 ம் ஆண்டு நடந்த ஐ.எஸ். படையெடுப்பு எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றியது.

அப்போது ஐ.எஸ். இயக்கம் ஈராக்கின் மொசுல் நகரை கைப்பற்றி கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. குர்திய பெஷ்மேர்கா காவல் காப்பதால், தமது பிரதேசத்திற்கு ஐ.எஸ். வரமாட்டாது என்று யேசிடி மக்கள் நம்பினார்கள். ஆனால், நடந்ததோ வேறு. ஒரு நாள் இரவோடு இரவாக ஐ.எஸ். போராளிகள் யேசிடி கிராமங்களுக்குள் ஊடுருவினார்கள். காலையில் எழுந்து பார்த்தால், காவல் கடமையில் இருந்த பெஷ்மேர்கா வீரர்களை காணவில்லை. தமது சொந்த இனத்தவர்களே தமக்கு துரோகம் செய்து விட்டனர் என்பதை உணர அதிக நேரம் எடுக்கவில்லை.

ஐ.எஸ்., யேசிடி கிராமங்கள், நகரங்களை கைப்பற்றியதும், சிலர் தற்காப்பு நடவடிக்கையாக தம்மிடம் இருந்த துப்பாக்கிகளை எடுத்து சுட்டனர். இந்த சண்டைகள் நடந்து கொண்டிருந்த குழப்பகரமான சூழ்நிலையை பயன்படுத்தி, ஏராளமானோர் சின்ஜார் மலைகளின் மேல் ஓடித் தப்பினார்கள். அங்கு உணவு, தண்ணீர் இன்றி பலர் உயிரிழந்தனர். நாட்கணக்காக எந்தவொரு உதவியும் வரவில்லை. பழமைவாதிகளின் குர்திஸ்தான் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இறுதியில், சிரியாவில் இருந்த PKK/YPG குர்திய படையணிகள் வந்துதான் காப்பாற்றினார்கள். அவர்கள் ஒரு பாதை அமைத்து, அதன் வழியாக யேசிடி மக்களை சிரியாவில் உள்ள தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு கொண்டு சென்றனர். இங்கே ஒரு கேள்வி எழலாம். ஏன் ஈராக்கி குர்திஸ்தான் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை? ஈராக்கி குர்திஸ்தான் அரசியல் தலைமையானது பழமைவாத தேசியவாதிகளின் கைகளில் உள்ளது. ஆகவே, ஒரு பிற்போக்கான பழைமைவாத அரசாங்கம், "வேற்றினமாக நடத்தப்பட்ட" யேசிடிகளுக்கு உதவ மறுத்ததில் வியப்பில்லை.

ஒரேமொழிபேசும், ஒரே இனத்தைசேர்ந்த மக்களாக இருந்தாலும், அவர்களுக்கு இடையில் மத வெறுப்புணர்வும் இருந்துள்ளது. அதாவது, இஸ்லாமிய குர்தியர்கள் யேசிடி குர்தியர்களை வெறுத்தனர். குர்தியர்கள் என்றால் இஸ்லாமியர் மட்டுமே என்பதும், ஒரே மொழி பேசினாலும் யேசிடிகள் வேறு இனம் என்பது போலவும் நடந்து கொண்டனர். இது ஈழத்தில் தமிழர் முஸ்லிம் வெறுப்புணர்வு போன்றது.

அதற்கு மாறாக, PKK/YPG இயக்கத்தினர், மதச்சார்பற்ற சோஷலிசவாதிகள். அதனால் தான் தக்க சமயத்தில் வந்து உதவினார்கள். இன்றைக்கும் சின்ஜார் மலைப் பகுதி, PKK போராளிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. இதனால், யேசிடிகளின் பிரதேசம், எதிர்கால அரசியல் உரிமை கோரல்களுக்கு காரணமாக வாய்ப்புண்டு.

ஐ.எஸ். கைப்பற்றிய யேசிடி கிராமங்கள், நகரங்களில் அகப்பட்டுக் கொண்டவர்கள் இனப்படுகொலைக்கு ஆளானார்கள். ஆயிரக் கணக்கான ஆண்கள் சுட்டுக் கொல்லப் பட்டு, புதைகுழிகளுக்குள் போட்டு மூடப் பட்டனர். பெண்கள் அடிமைகளாக விற்கப் பட்டனர். இளம் பெண்கள் மட்டுமல்லாது, குழந்தைகளுடன் இருந்த திருமணமான பெண்களும் பண வசதி படைத்த ஐ.எஸ். முக்கியஸ்தர்களால் அடிமைகளாக வாங்கப்பட்டனர். அவர்கள் பாலியல் அடிமைகளாகவும், வீட்டு வேலையாட்களாகவும் கொடுமைப் படுத்தப்பட்டனர். (தொடரும்)








▶ அலிக்கம்பை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் சிறுவர் தின நிகழ்வு அதிபர் எஸ்.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.இராஜேஸ்வரன் கலந்து கொண்டிருந்தார்.

# நிகழ்வுகள்



▶ கடந்த 09ம் திகதி உலக அஞ்சல் தின நிகழ்வு பரந்தன் பிரதம அஞ்சல் அலுவலகத்தில் தேசிய கொடி மற்றும் அஞ்சல் கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் இடம் பெற்றது.






▶ வதிரியில் புதிதாக அமைக்கப்பட்ட Rohini Speaking English Accademy நிறுவனத்தின் திறப்புவிழா வடக்கு மாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சு.வரதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. நிறுவனத்தின் கட்டிடத்தினை கல்விமான் எதிர்வீரசிங்கம் திறந்து வைத்தார். நிறுவுனர் Dr.D.S.ரவீந்திரன், வடமராட்சி வலய ஆங்கில கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் ஐ.செல்வராஜா ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.





▶ நீர்வேலி சி.சி.த.க பாடசாலையில் ஆசிரியர்தின நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது. முன்னாள் விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டிருந்தார்.





▶ உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரியின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்கள் அடங்கிய ஊர்வலம் இடம்பெற்றது. பத்தனை சந்தியிலிருந்து ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரி வளாகம் வரை சென்ற இந்த ஊர்வலத்தில் தமிழ் மற்றும் சிங்கள மொழி பாடசாலை மாணவர்கள், ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரியின் நிர்வாகிகள், பீடாதிபதி, உப பீடாதிபதி, விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், கல்வியற் கல்லூரியின் மாணவர்கள், பத்தனை பொலிஸார் என பலரும் கலந்து கொண்டனர்.

5-ம் பக்க தொடர்ச்சி...

முன்னரைவிட சற்றுதியாகதளர்ந்துவிட்டார்; நன்றாக இளைத்து விட்டார், அதிகம் பேச சிரமப்படுகிறார் என்கிறார்கள்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சமயத்தில் முதலமைச்சருக்கு அதிக கவலையை ஏற்படுத்தக்கூடாதென்று, மாகாண நிர்வாகம் குறித்த தகவல்களை அதிகம் முதலமைச்சரிற்கு வழங்கவில்லை. நன்றாக ஓய்வெடுத்த முதலமைச்சர் சில கதைப்புத்தகங்களை படித்துக்கொண்டிருந்திருக்கிறார். தனது ஆலோசகர் நிமலன் கார்த்திகேயன் அனைத்தையும் கவனித்து கொள்வார் என முதலமைச்சர் நம்புகிறார். முதலமைச்சரால் மட்டுமே கையாளப்படக்கூடியவை என்ற நிலையிலுள்ள அதிஅத்தியாவசிய சேவைகள் மாத்திரமே அவரது பார்வைக்கு செல்கிறது.

கடந்த மாத இறுதியில் முதலமைச்சர் வைத்தியசாலைக்கு செல்கிறார் என்ற தகவல், அவர் வைத்தியசாலைக்கு செல்வதற்கு ஓரிரு நாட்கள் முன்னதாகவே அனைவருக்கும் தெரிந்திருந்தது. இடைக்கால அறிக்கை தொடர்பான கேள்வியொன்றிற்கு பதிலளிக்கும்போது, வைத்தியசாலைக்கு செல்வதால் அதை முழுமையாக படிக்க முடியவில்லை என பதிலளித்திருந்தார். தமிழர்களின் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் வயதாகி நோய்வாய்ப்பட்டவர்கள்தான். ஆனால் யாருமே தமது உடல் பலவீனத்தை பகிரங்கப்படுத்துவதில்லை. வைத்தியசாலைக்கு செல்வதை மிக இரகசியமாக வைத்திருப்பார்கள். ஆனால், விக்னேஸ்வரன் அதை சொல்லியுள்ளார்.

தமது தலைவர்கள் நோய்வாய்ப்பட்டவர்களாக, உடலில் முதிர்ச்சி வெளிப்பட தொடங்கி விட்டவர்களாக இருப்பதை மக்கள் அவ்வளவாக விரும்புவதில்லை. அரசியல் தலைவர்கள் தமது பிம்ப உருவாக்கத்தில் இதை போன்ற பல விடயங்களில் மிக அவதானமாக இருந்து, தம்மை பற்றிய பிம்பங்களை கட்டியெழுப்புவார்கள். மருந்து வில்லைகளும் கையுமாக வாழ்க்கை நடத்தும் தமிழர்களின் தலைவர்கள் பலர் இருக்கிறார்கள். கொஞ்சம் தம் கட்டி பேசினாலே பலருக்கு நாடித்துடிப்பு அடங்கிவிடும். ஆனால் இதெல்லாம் வெளியில் தெரியாமல் பக்காவாக அரசியல் செய்கிறார்கள். விக்னேஸ்வரனிற்கு இந்த உத்தி கைவரவில்லை. அவர் தன்னை நோயாளியாக காட்டி, தன்னை சூழ ஒரே பிரச்சனைகள் இருக்கிறதென காட்டி அனுதாபத்தை சம்பாதிக்க விரும்புகிறாரோ தெரியவில்லை.

அண்மைக்காலமாக அவரது உடல் அவ்வளவாக ஒத்துழைக்காமல் சிரமப்படுவதாகவும் கூறுகிறார்கள். இதய, சிறுநீரக சிக்கல்கள் இருப்பதால் அவருக்கு அதிக ஓய்வு தேவைப்படுகிறது. வேலைப்பளு, அண்மையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள்தான் அவரை இப்பொழுது அதிகமாக பாதித்துள்ளது என்கிறார்கள் அவரது உதவியாளர்கள். இதிலிருந்து மீள அவருக்கு நீண்ட ஓய்வு தேவையாக இருக்கும்.

தனது உடல்நிலை இனி தீவிர அரசியலுக்கு அவ்வளவாக ஒத்துவராதென்ற அபிப்பிராயமும் முதலமைச்சரிடம் மெல்லமெல்ல ஏற்பட தொடங்கி விட்டதென அவருக்கு நெருக்கமானவர்கள் சொல்கிறார்கள். இன்னும் ஒரு வருடத்தை சமாளித்து மாகாணசபை பதவிக்காலத்தை முடித்துவிட்டால், வீட்டுக்கு சென்று நீண்ட ஓய்வு எடுப்பதுதான் முதலமைச்சரின் இப்போதைய திட்டம் என்கிறார்கள் அவர்கள். முதலமைச்சரின் குடும்பத்திலிருந்தும் இதேவிதமான கருத்துக்கள்தான் வருகிறதாம்.

இப்பொழுது முதலமைச்சரின் உடல் நிலை எப்படியிருக்கிறதென்பது கிட்டத்தட்ட ஓரளவு மர்மமாகவே இருக்கிறது. அவருக்கு ஏதோ உடல்நலமில்லையென்ற தகவல் முதலமைச்சர் ஊடாகவும், அவருக்கு நெருக்கமானவர்கள் ஊடாகவும் வெளியில் வந்திருக்கிறது. ஆனால், அவருக்கு என்ன பிரச்சனை, எத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்கிறதென்ற விபரங்கள் வெளியில் வரக்கூடாதென்பதில் சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் மிக கவனமாக இருக்கிறார்கள். முதலமைச்சர் அலுவலகம், வைத்திய சாலையிலுள்ள அதிகாரிகள், முதலமைச்சரின் உடல்நிலை பற்றி விசாரிக்கும்போது அவசரகதியில் "எமக்கு ஒன்றும் தெரியாது" என பதற்றத்துடன் மறுத்து, தொலைபேசி தொடர்பை துண்டிக்கிறார்கள்.

முதலமைச்சருக்கு ஏற்பட்டுள்ள இதய, சிறுநீரக பாதிப்புக்கள் படிப்படியாக அதிகரித்தபடி சென்று கொண்டிருப்பதால், அவர் அடுத்து என்ன முடிவெடுக்க போகிறார்? அவரால் முன்னரை போல மீண்டும் தீவிர அரசியலில் ஈடுபட முடியுமா? எப்பொழுது வைத்தியசாலையிலிருந்து வந்து முன்னரை போல நடமாடி பொதுநிகழ்வுகளில் பங்கேற்கப்போகிறார்?

அரசியலில் தொடர்வது இருக்கட்டும், அடுத்த ஒரு வருடத்திலும் கட்சிக்குள்ளும், அரசியலிலும், நிர்வாகத்திலும் உள்ள சிக்கல்களை சமாளிக்க முடியுமா என்பதே இப்போதுள்ள பெரிய கேள்வி.

# ஏம்மா... மின்னலு!


## புயலாக வந்து போன சசிகலா

✐ விஜயானந்த்

ஐந்து நாள் அவசரப் பரோலில், சிறைவாசத்திலிருந்து விடுபட்டு சிறிய விடுமுறையில் வந்து போயுள்ளார் சசிகலா. இது தற்காலிக விடுபடுதல் என்றாலும் 'இச்சுதந்திரக் காற்றை மகிழ்ச்சியோடே அனுபவித்தார் சசிகலா' என்கின்றனர் அவரைச் சுற்றியுள்ள உறவினர்கள்.

"பெங்களூரிலிருந்து காரில் சென்னைப் பயணத்தை மேற்கண்ட அந்தக் கணத்திலேயே அவர் முகத்தில் ஏகப்பட்ட உற்சாகம். நடு சீட்டில் அமர்ந்திருந்தவர் ஜன்னலோர கண்ணாடியில் முகம் புதைத்து இயற்கை காட்சிகளை ரசித்தபடியே வந்துள்ளார். வழியெங்கும் ஆதரவாளர்கள் தேங்காய், பூசணி உடைத்தும், பூக்கள் தூவியும் வரவேற்பு கொடுத்தனர். வழியில் டீ கடையில் நிறுத்தியபோதும், 'ஹே சசிகலா' எனப் பொதுமக்கள் ஆர்வத்தோடு பார்த்துள்ளனர். சசிகலா கார் பயணம் முழுக்கவே ஆதரவாளர்கள் சாரை சாரையாக ஆதரவைத் தெரிவிக்க, "போன முறை இதே சாலை வழியாகத்தான் கைதாகி சிறைக்குச் சென்றேன். அப்போது என்னைப் பல இடங்களில் கடுமையாகத் திட்டினார்கள். ஆனால், தற்போது இந்தளவுக்கு ஆதரவு தெரிவிப்பது என்னை உருகச் செய்கிறது" என தினகரனிடம் தம் எண்ணங்களைப் பரிமாறியுள்ளார்.





அந்தளவுக்கு அவருக்குக் கிடைத்த வரவேற்பில் உத்வேகம் பெற்றுள்ளார்" என்கின்றனர் கார் பவனியில் உடன் வந்தவர்கள்.

**நடரசனை சந்தித்த சசிகலா:**

சென்னையிலுள்ள இளவரசியின் மகள் கிருஷ்ணபிரியா வீட்டுக்கு இரவு 10.10க்கு தான் வந்தார் சசிகலா. தூங்கும் நேரமானதால் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு உறங்கச் சென்றவர், அடுத்தநாள் கணவர் நடராசனைச் சந்திக்க ஆயத்தமானார். காலையிலேயே மிக நெருக்கமான உறவினர்கள், கிருஷ்ணபிரியா வீட்டில் குழுமத் தொடங்கினர். அவர்களின் நல விசாரிப்புகள் முடிந்தபின், 11 மணியளவில் குளோபல் மருத்துவமனைக்குச் சென்றார் சசிகலா. முதல் தளத்தில் உள்ள தமது கணவர் நடராசனை காலை 11.55க்குச் சந்தித்தார். சிறுநீரகம் மற்றும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருந்ததால் அபாய கட்டத்திலிருந்து மீளவில்லை நடராசன்.

கணவரின் நிலை கண்ட அந்தக் கணம் உடைந்து போனார் சசிகலா. கண்கள் குளமாகின. பலகீனமாக இருந்தாலும் சுயநினைவோடு நடராசன் இருந்ததால், கைகள் உயர்த்தி சைகைகள் மூலம் இருவரும் பேசிக்கொண்டனர். 15 நிமிட சந்திப்புக்குப் பிறகு அங்கிருந்து கிளம்பினார் சசிகலா. 'ட்ரக்கியோடமி' கருவி பொருத்தப்பட்டிருந்ததால் நடராசனால் பேச இயலாது. எனவே, தொடர்ந்து மூன்று நாளும்(ஒக் 7 ஒக் 9 ம் திகதி ) கணவனைச் சந்தித்த சசிகலா, உணர்வுமொழியிலேயே கணவனிடம் பேசிக்கொண்டார். அவர் நலமோடு வீடு திரும்ப கோட்டூர்புரம் சித்தி விநாயகர் கோயிலில் வேண்டிக்கொண்டார் என மொத்தத்தையும் விளக்குகின்றனர் குளோபல் மருத்துவமனைக்குச் சசிகலாவுடன் சென்ற உறவினர்கள்.

**அரசியல் கலந்துரையாடல் :**

"அரசியல், பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்கக் கூடாது, வீடு, மருத்துவமனையில் பார்வையாளரைச் சந்தித்து பேசக் கூடாது' எனக் கடுமையான கட்டுப்பாடுகள் போடப்பட்டுள்ளதால், அதை இதுவரை முறையாகவே கடைபிடித்து வருகிறார் சசிகலா" என்கின்றனர் அபிபுல்லா சாலையில் வட்டமிடும் உளவுப்பிரிவினர். அதேநேரம் சசிகலாவுக்கான உதவிகளை விவேக் செய்து வருகிறார். கிருஷ்ணபிரியா சிலவற்றை பகிர்ந்தாலும் அவரின் தலையீட்டை, சசிகலா அதிகம் விரும்ப வில்லை. திவாகரன் மகன் ஜெய்ஆனந்த், தினகரன் குடும்பத்தினர் சிறிது நேரம் அருகிலிருந்து அவருடன் பேசிக்கொண்டி ருக்கின்றனர்.

கணவர் நடராசனுடன் பேசமுடிய வில்லை என்ற கவலையை அவ்வப்போது சசிகலா வெளிப்படுத்தி வர, 11ம் திகதி எப்படியும் பேசிவிடலாம் என உறவினர்கள் ஆறுதல் கொடுத்தனர். உரையாடல் அரசியல் பக்கமும் திரும்பியது. எடப்பாடி பழனிசாமி ஓ.பன்னீர்செல்வம் இணைப்பு, திவாகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்கம் போன்ற சமகால அரசியல் அசைவுகளை, அவரவர் கோணத்தில் ஒவ்வொருவரும் விளக்கியபடியே இருந்தனர். 'நீங்கள் வளர்த்துவிட்டவர்களே இன்று உங்களுக்கு எதிராக வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசுகிறார்கள்' என்றும் பகிர, அனைத்தையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்ட சசிகலா, ஒருகட்டத்தில், "நான் பார்க்காத சோதனையா? நான் அம்மாவிடம் (ஜெயலலிதா) அரசியல் கற்றவள். ஒருவர் பதவியில் இருந்தால் எப்படி நடந்துகொள்வார்கள், இல்லாதபோது எப்படி நடந்துகொள்வார்கள் என்பதை நான் அறிவேன். யாரை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என்பதையும் நான் அறிவேன். இனி என் அரசியல் காய்நகர்த்தல்களைப் போகப் போக பாருங்க" என்று பதிலளித்துள்ளார். குரல் உடைந்திருந்தாலும் உறுதி குறையவில்லை" என விவரித்தார்கள் மன்னார்குடியிலிருந்து வந்திருந்த சசிகலாவுக்கு மிக நெருக்கமான உறவினர்கள்.

இதே கருத்துகளை, தினகரன் ஆதரவு (தகுதி நீக்கம் செய்யப்பட்ட) எம்.எல்.ஏக்கள் சிலரும் உறுதிப்படுத்தினர், "அரசியல் ரீதியாக சில வியூகங்களை வகுத்து, எங்களுக்கு சசிகலா வழிகாட்டுவார்" என்கின்றனர்.

இடையில் தன்னை ஆதரிக்கும் அணி முக்கியஸ்தர்களுடன் சில சுற்று ஆலோசனைக் கூட்டங்களும் நடத்தினார். இந்த கூட்டங்களில் தினகரனும் உடனிருந்தார். அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட கூடாதென்ற நிபந்தனை இருந்ததால், இந்த சந்திப்புக்கள் பற்றிய யாரும் வாய் திறக்கவில்லை. ஐந்துநாளும் சசிகலாவிற்கு ஐந்து நொடியாக கரைந்து விட்டது என்பதே உண்மை. கட்சி யிலும், ஆட்சியிலும் இவ்வளவு சிக்கல்கள் வந்தபின், ஐந்து நாள் அல்ல ஐந்து மாதம் விடுப்பு எடுத்தாலும் தீர்க்க முடியாது. ஏனெனில் இடியப்ப சிக்கலை விட பெரிய சிக்கலில் அதிமுக இப்போது சிக்கியுள்ளது. தினகரன் உள்ளிட்ட சில முக்கியஸ்தர்களிடம் சில அசைன்மென்ட்களை கொடுத்துவிட்டு, மீண்டும் சிறைக்கு கிளம்பினார்.

சசிகலாவின் அரசியல் எதிரிகளோ, "பரோல் முடிந்தது. கட்சிக்கு வழிகாட்டுவது இருக்கட்டும், சிறைக்கு கிளம்புங்கள்" என பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறைக்குச் சசிகலாவுக்கு வழிகாட்டினார்கள். ●





▶ UN-Habitat நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் மன்னார் திருக்கேதீஸ்வரம் கௌரி அம்பாள் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலை வகுப்பறைத் தொகுதி திறந்து வைக்கப்பட்டது. வடமாகாண கல்வியமைச்சர் க.சர்வேஸ்வரன் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்.

# சாட்சிக்கு மட்டுமல்ல, சந்தேகநபருக்கும் உரித்துண்டு!

இனப்பிரச்சனைக்கு தீர்வை காணும் முக்கிய கட்டத்தில் நுழைந்துள்ளோம் என பிரதமர் அறிவித்துள்ள காலப்பகுதியில், யார் தடுத்தாலும் தேசிய இனப்பிரச்சனையை தீர்ப்போம் என ஜனாதிபதி அறிவித்துள்ள காலப்பகுதியில், புதிய அரசியலமைப்பு உருவாக்க பணிகள் அவதானத்துடன் முன்னெடுக்கப்பட்டு வருவதாக எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்துள்ள காலப்பகுதியில், அனுராதபுரத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கிட்டத்தட்ட இருபது நாட்களாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். அரசியல் கைதிகள் விவகாரத்தில் இந்த அரசும் ஒரு முடிவை எடுக்கவில்லையென்பதற்கு அப்பால், கைதிகளின் வழக்கு விசாரணையை கூட தமிழ் பகுதிகளில் நடத்த விடாத அரசியல் நிகழ்ச்சி நிரலில் இயங்கிக் கொண்டிருக்கிறார்களா என்ற கேள்வி எழுகிறது.

ஆட்சியாளர்களும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் இணைந்து இனப்பிரச்சனை தீர்விற்கு முயன்றுகொண்டிருக்கும் காலகட்டம் இது. இரண்டு இனங்களிலும் அதிக ஆதரவைப்பெற்ற தலைமைகள் ஒன்றிணைந்து செயற்படுவது யுத்தத்திற்கு பின்னர் இப்பொழுதுதான் முதற்தடவை. இரு தரப்பிற்குமிடையில் நல்ல புரிந்துணர்வும் உள்ளது. ஆனால் இந்த சூழல் அனைத்து மட்டங்களிற்கும் பரவ வில்லை. இரு அரசியல் தலைமைகளுக்கமிடையிலான இணைக்க சூழல் வேறு, தமிழ் மக்களின் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் சூழல் வேறு. தாங்கள் பகைமுரணாக அணுகப்படுவதாக பாதிக்கப்பட்டவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். அதுதான் இன்றைய அரசியல் சூழ்நிலை.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு, காணாமல் போனவர்கள் விவகாரங்களை தீர்க்காமல் இனப்பிரச்சனை தீர்வு அல்லது பகைமறப்பு நடவடிக்கைகள் எதனையும் செய்யவே முடியாதென்பதை ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளோம். உடலில் உள்ள நாள்பட்ட புண்களை போன்ற விடயங்கள் இவை. அவை எப்பொழுதும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தியபடியே இருக்கும்.

இப்பொழுது உணவு தவிர்ப்பு போராட்டத்தல் ஈடுபட்டுள்ள மூன்று அரசியல் கைதிகளின் வழக்கும் வவுனியாவில் இருந்து, அனுராதபுரத்திற்கு மாற்றுவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் முடிவுசெய்து விட்டது. அனுராதபுரத்திற்கு வழக்கை மாற்றுவது குற்றம்சாட்டப்படுபவர்களிற்கு இழைக்கப்படும் அநீதியாகும் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் சட்டமாஅதிபருக்கு தெரியப்படுத்தியிருக்கிறார். ஆனால் சட்டமாஅதிபரின் முடிவு மாறவில்லை.

**தீபம்**

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிட தொகுதி)
ஆசிரியர்பீடம்: 0214927562
அலுவலகம்: 0214927561
விநியோகம்: 0214927542
விளம்பரம்: 0768255560
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com

அந்த வழக்கை அனுராதபுரத்திற்கு மாற்றுவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் சொல்லும் காரணங்கள் தர்க்க அடிப்படையிலும், அறவுணர்வின் அடிப்படையிலும் நியாயமானவை அல்ல. அனுராதபுரத்தில் வழக்கை நடத்தினால்தான் சாட்சிகள் ஆஜராவார்கள், வவுனியாவில் சாட்சிகளிற்கு பாதுகாப்பில்லை என்ற வாதம், அரசு இன்று இலங்கையை பற்றி கூறும் கருத்துக்களிற்கு நேர் எதிரானது.

அனுராதபுரத்தில் பாதுகாப்பை உணரும் சாட்சியொருவர், அதற்கு சிறிது தொலைவில் உள்ள வவுனியாவில் எந்தவிதமான அச்சுறுத்தலை எதிர்கொள்கிறார்? இலங்கையில் இன்று பயங்கரவாத அச்சுறுத்தல் இல்லை, ஒன்றுபட்ட இலங்கையை உருவாக்கி விட்டோம் என ஆட்சியாளர்கள் அனைவரும் சொல்கிறார்கள். பிறகென்ன அச்சுறுத்தல்?

பயங்கரவாத அச்சுறுத்தல் இல்லாமல், வேறுவிதமான பாதுகாப்பின்மை இருந்தால், சாட்சிகளை பாதுகாப்பது அரசின் கடமையல்லவா? அரசு தனது கடமையை செய்ய மக்களை விலைகொடுக்க கோருவது எந்தவகையில் நியாயம். சாட்சியின் பாதுகாப்பை மட்டுமே கருத்தில் கொண்டு வழக்கு முடிவுகளை எடுக்கலாமா? குற்றம்சாட்டப்பட்டவருக்கு தன்னை நிரூபிக்க சந்தர்ப்பம் வழங்காத தன்மையல்லவா இது.

அரசியல்கைதிகள் விவகாரம் அரசியல் நோக்குடன் கையாளப்பட வேண்டிய விடயம். அதை தனியே நீதிபொறிமுறையினூடாக கையாள்வது அதிருப்தியையும், முரணையுமே வளர்க்கும். அரசியல் கைதிகளை விடுதலை செய்வது, அது முடியாத பட்சத்தில் கைதி களிற்கு நெருக்கடியில்லாத வழக்கு விசாரணை சூழலை ஏற்படுத் திக்கொடுக்க வேண்டும். தமிழ் பிரதேசங்களில், தமிழ் நீதிபதிகளை கொண்டு வழக்கு நடத்தலாம். மொழி புரிதல் அங்கு இருக்கும்.

சாட்சிகளின் பாதுகாப்பை மட்டும் கவனத்தில் கொள்ளும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கையில், அரசியல்கைதிகள் குற்றவாளிகள் குற்றவாளிகளை போலத்தான் அவர்களை அணுகலாம் என்ற தொனி தெரிகிறது. சாட்சிகளிற்கான வாய்ப்பை உருவாக்கி கொடுப்பது எவ்வளவு முக்கியமோ, அதேயளவு முக்கியம் சந்தேகநபர்கள் தாம் நிரபாராதிகள் என நிரூபிக்க வாய்ப்பேற்படுத்திக் கொடுப்பதும்.

அரசியல்கைதிகளின் வழக்கை இடமாற்றம் செய்வது, அறவுணர்வின் அடிப்படையிலும் நியாயமாகாது. அரசியல்கைதிகளாக உள்ளவர்கள் அனைவருமே சம்பவங்களில் நேரடியாக ஈடுபட்டவர்கள். அவர்களை வழிநடத்திய, சம்பவங்களை திட்டமிட்டவர்களை அரசு விருந்தாளிகளாக வைத்துக்கொண்டு, அவர்களின் கட்டளைகளை செயற்படுத்தியவர்களை விடாப்பிடி அணுகுமுறையுடன் கையாள்கிறது. அரசியல்கைதிகளின் வழக்குகள் நீண்டகாலமாக இழுபட்டு வருகின்றன. வழக்கு நடக்கும் இடங்களிற்கு உறவினர்கள் சென்றுவர, வழக்கு செலவிற்கு என பெருமளவு பணம் தேவை. கைதிகளின் உறவுகளின் பொருளாதார நிலைமை என்னவென்பது அரசியல் கைதிகளை விடுவிக்க கோரும் போராட்ட புகைப்படங்களை பார்த் தால் நன்றாக தெரியும். அந்த மக்களை மேலும் மேலும் சிரமப் படுத்துவது நல்லதல்ல.

மூன்றாவதாக, அரசியல் கைதிகள் விவகாரத்தில் அரசு நடந்துகொள்ளும் முறை, அரசியல்ரீதியாகவும் சரியான அணுகு முறையல்ல. ஏற்கனவே சொன்னதை போல, இது அரசியல்ரீதியாக கையாளப்பட வேண்டிய விடயம். இனப்பிரச்சனை தீர்வுடன் தொடர்புடைய விவகாரம். தென்னிலங்கை அரசியல் குழப்பங்கள், மகிந்தவின் மீள் எழுச்சி போன்றவற்றுடன் பொருத்திப்பார்த்து குழப்ப வேண்டியதில்லை.

அரசியல் கைதிகள் விவகாரத்தில் பொருத்தமான தீர்மான மொன்றை அரசு உடனடியாக எடுக்க வேண்டும். இனப்பிரச்சனையை தீர்க்க முயற்சிப்பதாக கூறிவரும் அரசாங்கம், அரசியல்கைதிகள் விவகாரத்தில் நடந்துகொள்ளும் முறை ஏமாற்றம் தருவதாக உள்ளது. அரசியல்கைதிகள் விவகாரத்தை வெறும் குற்ற விவகாரமாக, போரில் தோல்வியடைந்த தரப்பின் கோரிக்கையாக அரசு அணுகுகிறது. சில வேளைகளில் அரசு விரும்பாமல். தென்னிலங்கை நெருக்கடி களிற்காக இப்படி நடந்து கொள்ளலாம். அரசியல்கைதிகள், காணாமல் போனவர்கள், நிலவிடுவிப்பு போன்றவற்றில் தமிழ் மக்களின் எதிர் பார்ப்புக்களிற்கு மாறா கவே தென்னி லங்கை எதிர் பார்ப்புக்கள் இருக் கிறது, அதை அரசுகள் பிரதி பலிக்கிறதென்றால், எப்படி இந்த நாட்டில் நல்லிணக்க முயற்சிகள் வெற்றியடையும்?

## அக்கம் பக்கம்

நந்தனார்

# 13வது திருத்தமே போதுமாம்!

அரசியலமைப்பு உருவாக்க வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்தில் விரைவில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. நாடாளுமன்றம் எப்படி அறிக்கையை கையாளப்போகிறது என்பது முக்கியமான கேள்வி. இடைக்கால அறிக்கை வெளியானதிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கிடையில் அறிக்கை முக்கிய பேசு பொருளாக மாறிவிட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசும்போது அது தெரிந்தது. அதைவிட சுவாஸ்யமான இன்னொரு விடயமும் உள்ளது.

நாடாளுமன்றத்திற்குள் இதுவரை 13வது திருத்தம் பற்றி முழுமையான சாதகமான அபிப்பிராயம் உருவாகியிருக்கவில்லை. காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றி அதில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. 13வது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டாலே முக்கால்வாசி ஈழம் உருவாகிவிடும் என்றுதான் தென்னிலங்கையில் பலர் நினைக்கிறார்கள். ஆனால், இடைக்கால அறிக்கையின் பின்னர், 13வது திருத்தம் பற்றி அனேகமானவர்கள் பேச ஆரம்பித்து விட்டனராம். மகிந்த அணியினர்தான் இதில் முன்னிலையில் இருந்தாலும், மற்றைய கட்சி உறுப்பினர்களின் உள்ளார்ந்த ஆர்வமும் 13வது திருத்த பக்கமே உள்ளதாக தெரிகிறது. அண்மையில் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் பேசியபோது அவர் ஒரு முக்கியமான விடயத்தை சொன்னார். "அரசியலமைப்பு மாற்றம் எவ்வளவு பொருத்தமாக இருக்கும் தெரியவில்லை. 13வது திருத்தம்தான் தமிழர்களிற்கு பொருத்தமாக இருக்கும். அதை பெறுவதற்கு முயற்சியுங்கள்" என்றார்.

சுதந்திரக்கட்சியின் மூத்த தலைவர்கள் பலரிடமும் இதேவிதமான அபிப்பிராயம்தான் உள்ளது. பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனையவற்றுடன் 13வது திருத்தத்தை தமிழர்கள் ஏற்றுக்கொள்ளலாம் என நினைக்கிறார்கள். 13வது பிளஸ் பற்றிய பேச்சு எழும்பட்சத்தில், 13வதில் உள்ள ஆளுனர்களின் அதிகாரத்தை குறைக்கலாம் என்றும் நினைக்கிறார்கள். அரசியலமைப்பு உருவாக்கத்தில் சுதந்திரக்கட்சியின் குரல் எடுபடுவதை விட, ஐக்கிய தேசியக்கட்சியின் குரல்தான் எடுபடுபவதால் சுதந்திரக்கட்சியினரால் பெரிதாக தாக்கம் செலுத்த முடியவில்லை.

முஸ்லிம்களின் நிர்வாக அலகு பற்றிய ஏற்பாடுகளை செய்து, 13 பிளஸை பெற்றுக்கொள்ளலாமென்று முஸ்லிம் கட்சிகளிடமும் அபிப்பிராயம் உள்ளது.

இடைக்கால அறிக்கை வெளித்தெரியாத சமஷ்டி கட்டமைப்பொன்றை உருவாக்க முயல்கிறதென தெற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரிடம் அபிப்பிராயம் உள்ளது. தேர்தல் சட்ட திருத்தம், அதிகார பரவலாக்கல், நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பு ஆகிய மூன்றையும் உள்ளடக்கி ஆரம்பிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு உருவாக்க பணியில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதென்ற நிலைப்பாட்டிலிருந்து சு.க பின்வாங்கி சென்று பல மாதங்களாகி விட்டது. தேர்தல் சட்ட திருத்தத்தை மேற்கொள்ள இரண்டு பிரதான கட்சிகளும் தயாராக இருந்தாலும், தேர்தலை சந்திக்க சு.க தயாராக இல்லாததால், புதிய புதிய காரணங்களை கண்டறிந்து தேர்தலை பின்தள்ள வேண்டிய நெருக்கடி. ஆக, இப்பொழுது அதிகார பரவலாக்கல் மட்டுமே எஞ்சியுள்ளது.

13வது திருத்தம் மாற்றம் செய்யப்பட முடியாத ஒரு ஏற்பாடு, அரசியலமைப்பை மாற்றினால், தமிழர்கள் பலமாக உள்ள சமயங்களில் அரசியமைப்பு மாற்றப்படலாமென மகிந்த அணியிலுள்ளவர்கள் பலர் கருதுகிறார்கள்.

அண்மையில் நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் தமிழ் உறுப்பினர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்த உதய கம்மன்பில அறிக்கை பற்றிய அச்சவுணர்வை வெளிப்படுத்தியுள்ளார். "முதற்கட்டமாக கிடைப்பதை பெறுவோமென்கிறீர்கள். அப்படியானால் இரண்டாம் கட்டம்?" என கேட்டாராம்.

# தமிழர்களை யார் காப்பாற்றுவது?

தமிழரசுக்கட்சியின் யாழ் மாவட்ட கூட்டம் அண்மையில் நடந்தது. இந்த கூட்டம் வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலை எதிர்கொள்வது பற்றியும் கலந்துரையாடப்பட்டிருந்தது. சீ.வீ.கே. சிவஞானம், குலநாயகம், கனகசபாபதி போன்ற முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில், கட்சியின் கிளை குழு பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டிருந்தனர். வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழரசுக்கட்சி தனித்து போட்டியிட வேண்டுமென்ற அபிப்பிராயம் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது. கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளுடன் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் காரணமாக தனித்து போட்டியிடுவதே சிறந்தது என்பதுதான் அபிப்பிராயத்தின் உள்ளடக்கம்.

கூட்டமைப்பின் ஒற்றுமையென்பது தலைவர்களின் ஐக்கியம் என்பதை கடந்து, தொண்டர்களின் ஒற்றுமையாக இருப்பதே தமிழ் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும். தலைவர்களின் முகங்களிற்காக வேண்டாவெறுப்பாக கூட்டணியில் நீடிப்பதென்பது முறையான அரசியல் செயற்பாடாக அமையாது. ஆனால் பெரும்பாலான கட்சிகளின் தொண்டர்களிடம் இந்த இயல்பு இருப்பதில்லை. எவ்வளவு பெரிய அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தாலும் தமிழர்களிற்குள் அரசியல் விழிப்புணர்ச்சி போதுமானளவில் இல்லை, அப்படியானவர்கள் அரசியல் கட்சிகளின் அங்கத்தவர்களாகவும் இருக்கிறார்கள் என்பது வெட்கக்கேடானது.

தமிழ் அரசியலின் சீத்துவத்தை விளக்க நீண்டகாலமாக ஒரு கதை சொல்லப்படுவதுண்டு. பல நாட்டு கைதிகள் உள்ள சிறையில், எல்லா நாட்டு கைதிகளையும் அறைகளிற்குள் அடைத்து பலமான பூட்டு போட்டு விட்டார்களாம். தமிழர்களை மட்டும் மூடப்படாத குழியொன்றிற்குள் விட்டுவிடுவார்களாம். அதற்கு காரணம், ஏறி தப்ப முயல்பவனை கூட இருப்பவனே இழுத்து கீழே விழுத்திவிடுவான் என்ற நம்பிக்கைதான் காரணமாம்.

தமிழர்களின் அரசியல் பலமென்பது தமிழ் தேசிய கூட்டமைப்புதான். இரா.சம்பந்தன் பலமுறை அதை சொல்லாலும், செயலாலும் புரிய வைத்தும், கட்சிகளின் கீழ் மட்ட உறுப்பினர்களுக்கு அது புரிவதாக இல்லை.

1970வரை பரமவைரிகளாக இருந்தவர்கள் தந்தை செல்வாவும், ஜீ.ஜீ.பொன்னம்பலமும். ஆனால் அன்றைய அரசியல் சூழலை கருதி, ஜீ.ஜீயின் வீட்டிற்கு நேரில் சென்றார் தந்தை செல்வா. செல்வநாயகம் நேரில் வந்துவிட்டாரே, என்ன தேவையாக இருக்குமென பதறிய ஜீ.ஜீ, நான் என்ன செய்ய வேண்டுமென்றுதான் கேட்டார். இந்த அரசியல் நாகரிகம் இன்று கிடையாது. அந்த ஒற்றுமை எண்ணமும் கிடையாது. கட்சிகள் தனித்தனியாக தேர்தலில் நின்றால் ஆசனங்கள் அதிகரிக்கும், நாமும் போட்டியிடலாமென்பதுதான் எல்லோருடைய எண்ணமும்.

இவ்வளவுதான் நமது கட்சி உறுப்பினர்களின் அரசியல் விழிப்புணர்வென்றால், தமிழர்களை கடவுளாலும் காப்பாற்ற முடியாதென்பதே யதார்த்தம்.

# ஏன் குறிவைக்கப்படுகிறார் சிவநேசன்?

புவனேஸ்

வடக்குவிவசாய அமைச்சர் க.சிவநேசன் அப்படியென்ன சொல்லிவிட்டார்?

வடக்கில் உள்ள கிராமப்புற பாடசாலைகளை மூடி, நகரப்புறத்தில் உள்ள பாடசாலைகளுடன் இணைத்தால் மாத்திரமே, கல்வி நடவடிக்கைகளை சிறப்பாக நடத்தலாம் என கூறியிருந்தார். சிவநேசன் ஏதோ சொல்லக்கூடாததை சொல்லிவிட்டார் என்பதை போல, சிலர் வானத்திற்கும் பூமிக்குமாக குதிக்கும் வேடிக்கை நடக்கிறது.

உண்மையில் சிவநேசனிற்கு எதிராக மேற்கொள்ளப்படுவது திட்டமிட்ட பிரச்சாரம்தான். ஏதோ காரணத்திற்காக அவரை “அடிக்க” வேண்டும் என திட்டமிட்டு, அடிக்கிறார்கள். அவ்வளவுதான்.

விவசாய அமைச்சர் சிவநேசன் சொன்னது உண்மையில் தவறான கருத்தல்ல. தற்போதைய சீரழிவை சீராக்க ஒரு உடனடி முதலுதவி. அவ்வளவுதான். நீண்டகால நோக்கில் அவரது கருத்து சரியானதா என்றால், இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். கிராமப்புறங்களிற்கும் வளப்பங்கீடு சீராக அமைந்து, கிராமப்புற பாடசாலைகளையும் வளர்த்து, வடக்கு கல்வியை மேல்நோக்கி கொண்டு செல்லும் பெரிய வேலைத்திட்டத்தைதான் நாம் செய்ய வேண்டும். இந்த நீண்டகால நோக்கில் பார்த்தால் விவசாய அமைச்சரின் கருத்து பொருத்தமற்றது.

ஆனால், நம்மிடம் அப்படியான செயற்திட்டம் இருக்கிறதா? குறைந்தபட்சம் இப்படியான வேலைத்திட்டங்களை செய்யும் ஆற்றலாவது இருக்கிறதா? இரண்டுமே இல்லை. அப்படி இல்லாத போது, விவசாய அமைச்சரின் கருத்தை எப்படி தவறென்பது?

வடமாகாணசபை அமைந்ததன் பின்னர், வடக்கில் நியமனம் பெற்ற ஆசிரியர்கள் பலர் சுலபமான இடமாற்றம் பெற்றனர். கிராமப்புற, தூர இடங்களிற்கு செல்லாமல், அரசியல்வாதிகளின் காலடியில் விழுந்து, அருகிலுள்ள நகரப்பட சாலைகளிற்கு இடம் மாற்றம் பெற்றனர். அருகிலுள்ள சிறந்த பாடசாலை திட்டத்தை கல்வியமைச்சு செய்ய, அருகிலுள்ள நகரபாடசாலை திட்டத்தை ஆசிரியர்கள் அமுல்படுத்த அரசியல்வாதிகள் உதவினார்கள். யார் இந்த அரசியல்வாதிகள்?

யதார்த்தம் கசப்பானதுதான். ஆனால் சொல்லித்தானே ஆகவேண்டும். முன்னாள் இராணுவ ஆளுனர் சந்திரசிறியை இந்த இடத்தில் பாராட்டியே ஆக வேண்டும். வெற்றிடமுள்ள இடத்திற்கு ஆளணி வளத்தைபங்கிட்டு, அதுசீராகஇயங்குவதை உறுதிசெய்தார். உருட்டல், மிரட்டல் பாணியில் அவர் நிர்வாகம் செய்தபோது, அரசஅலுவலகர்கள் கப்சிப் ஆக வேலை பார்த்தனர். (இது இராணுவ ஆளுனரை வெள்ளையடிக்கும் வேலையல்ல. ஆனால், நம்மவர்கள் எப்படியான அணுகுமுறையை கையாண்டால் வேலை செய்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட குறிப்பிடப்பட்டது)

வடமாகாணசபை அமைந்த பின்னர் அதிபர் இடமாற்றம், ஆசிரியர் இடமாற்றத்தில் அரசியல் சந்துபொந்தெல்லாம் புகுந்து விளையாடியது. தமது கட்சியின் முக்கியஸ்தர்களான பல பாராளுமன்ற உறுப்பினர்களின் விருப்பங்களை நிறைவேற்றப்போய், இறுதியில் குருகுலராஜாவின் தலை உருண்டதுதான் மிச்சம்.

வடக்கில் எந்த மாகாணத்திலும் இல்லாத மோசமான இடமாற்றங்கள் நடந்தன. விவசாய அமைச்சரே ஒரு உதாரணம் சொல்லியிருந்தார். கொக்கிளாய் பாடசாலைக்கு நியமனம்பெற்ற ஆசிரியர், பேரூந்தில் வந்து இறங்கி கையெழுத்து வைத்து விட்டு, உடனே புறப்பட்டு சென்றுவிட்டார். பாடசாலை பக்கமே அதன் பின்னர் வரவில்லை. ஒரு அரசியல்வாதியை பிடித்து பூநகரிக்கு இடமாற்றம் பெற்று சென்றுவிட்டார்.

கிராமப்புற பாடசாலைகள் பெரும் அபாயத்தை சந்திக்கும் காலமிது. எல்லா பிரதேசங்களிலும் நகரத்திலுள்ள ஓரிரண்டு பாடசாலைகளில்தான் மாணவர்கள் குவிகிறார்கள். கிராமப்புற பாடசாலைகள் வெறிச்சோடுகின்றன. ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள பத்துபாடசாலைகளில்ஏழுபாடசாலைகள் மாணவர் தொகையில் மோசமான நிலையில் உள்ளன.

யாழ் மாவட்டத்தில் 56, கிளிநொச்சி மாவட்டத்தில் 8, மன்னாரில் 6, முல்லைத்தீவில் 3, வவுனியாவில் 20 என 93 பாடசாலைகள் வடக்கில் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இதற்கு ஒரே காரணம், மாணவர் தொகை போதாமை.

இந்த வீழ்ச்சி நிகழ்ந்து கொண்டிருக்கும் போது இதுவரை எதையும் செய்யாமல் இருந்த தொழிற்சங்கங்கள் குறிப்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் போன்றவை விழுந்தடித்துக் கொண்டு கருத்து தெரிவித்திருப்பதுதான் வேடிக்கையானது. ஏதோ நோக்கத்தின் அடிப்படையில் அவர்களின் கருத்து அமைந்திருக்கவும் வாய்ப்புண்டு. ஏதோ அவசரகதியில், ஒப்பேற்றப்பட்ட நாடகத்தை போலிருந்தது அவர்களின் கண்டனம். அதற்கு ஒரு உதாரணம் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் விழுந்தடித்துக் கொண்டு ஊடகங்களிற்கு அனுப்பிய மின்னஞ்சல். அதில் இப்படி தலைப்பிடப்பட்டிருந்தது வடக்கு மாகாண விசாய அமைச்சர் தவநாதனின் முட்டாள்தனமான கருத்தை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது!

வடக்கில் உள்ள தேசிய பாடசாலைகளை தவிர மிகுதியான அனைத்து பாடசாலைகளும்வடக்குகல்வி அமைச்சின் கீழ்தான் உள்ளன. கிட்டத்தட்ட வடக்கின் 90 வீதத்திற்கும் அதிகமான பாடசாலைகளை மாகாண நிர்வாகம் கையாள்கிறது. நியமனம், இடமாற்றம், சலுகை, மானியம் அனைத்தையும் எப்படி பங்கிடுவதென்பதை மாகாண நிர்வாகம்தான் முடிவு செய்ய வேண்டும். இப்படியிருக்கும்போது, கிராமப்புற பாடசாலைகள் ஏன் நலிவடைகின்றன? இதில் குற்றவாளிகள் யார்? விவசாய அமைச்சரா?

விவசாய அமைச்சரின் கூற்று, சிக்கலிற்கான தற்காலிக தீர்வே தவிர, குற்றம் சாட்டப்படக்கூடிய கூற்றல்ல. உண்மையில் இந்த சீரழிவிற்கு யார் காரணமென்பதை புரிய ஒரேயொருவிடயத்தை குறிப்பிடலாம். உள்ளூராட்சிசபை, மாகாணசபை, பாராளுமன்ற உறுப்பினர்களின் குடும்பத்தில், உறவுகளில்... அரச அதிகாரிகள், செல்வந்தர்களின் குடும்பங்களில் இருந்து எவ்வளவு தூரத்தில் பாடசாலைக்கு சென்று வருகிறார்கள் என்பதை கவனியுங்கள். அது மாணவர்களாக இருக்கட்டும், ஆசிரியர்களாக இருக்கட்டும். இதை புரிந்து கொண்டால் வளச்சமனின்மைக்கான காரணம் புரிந்துவிடும்.

வளத்தை சரியாக பங்கிட்டு, கிராமப்புற பாடசாலைகளின் தரத்தை உயர்த்தினாலே மாணவர்கள் இயல்பாக அந்த பாடசாலைகளிற்கு செல்வார்கள். இதற்கான முழு பொறுப்பு மாகாண நிர்வாகத்திற்கே உள்ளது. மாகாண நிர்வாகம் சில சமயங்களில் சரியான நடந்து கொண்டாலும், பாராளுமன்ற உறுப்பினர்கள் தலையீடு செய்வது பிரச்சனையாக இருக்கிறது. கடந்த கல்வியமைச்சரின் காலத்தில் இது அதிகமாக இருந்தது. இதில் பொறுப்பாக நடக்க வேண்டியது, மாகாண நிர்வாகமும், பாராளுமன்ற உறுப்பினர்களுமே. அது நடக்காத பட்சத்தில் விவசாய அமைச்சர் ஒரு தற்காலிக தீர்வை கூறியிருக்கிறார்.

வடமாகாணசபையால் வளப்பங்கீட்டை சமச்சீராக செய்து, கிராமப்புற பாடசாலைகளை கட்டியெழுப்ப முடியாதெனில், விவசாய அமைச்சரின் கருத்து மட்டுமே மிகச்சரியானதாகிவிடும்.

ஆனால், விவசாய அமைச்சரின் கருத்தை அரசியல் குரோதங்களிற்காக பயன்படுத்தும் முயற்சிதான் நடக்கிறது. இதற்கு சோ கோல்ட் தொழிற்சங்கங்கள் துணை போவதுதான் வேடிக்கை. அண்மைக்காலமாக விவசாய அமைச்சரை குறிவைத்து தாக்கும் அரசியல் போக்கு அதிகரித்துள்ளது. அவர் வன்னி பிரதேசத்தை சேர்ந்தவர் என்பதாலோ, இயக்க பாரம்பரியத்தில் இருந்து வந்தவர் என்பதாலோ அல்லது வேறு காரணங்களினாலோ குறிவைத்து தாக்கப்படுகிறார். இதனால்தான் அதன் அரசியல் நோக்கத்தை மறைக்க முடியாமலிருக்கிறது. ●







► மன்னார் மாவட்ட விவசாயிகள், விவசாய திணைக்கள அதிகாரிகளுடன் வடமாகாண விவசாய அமைச்சர் அண்மையில் சந்திப்பு நடத்தினார். இதில் இளையோர் விவசாயிகள் கழகங்களிற்கு நவீன விதையிடும் கருவியும், சேதன பசளை தயாரிப்பிற்கு உதவும் வெட்டுக்கருவியும் வழங்கப்பட்டது. இதில் விவசாய அமைச்சு செயலாளர் சத்தியசீலன், மாகாண பணிப்பாளர் சிவகுமார், மாவட்ட பிரதி பணிப்பாளர் சி. அஜந்தா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வாகனேரிக்கு தேவை அணைக்கட்டு





மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகனேரி நீர்பாசன திட்டத்தின் கீழ் காணப்படும் முறுக்கன்தீவு அணைக்கட்டினால் முருக்கன்தீவு, பள்ளிமடு, ஓட்டுவெளி என மூன்று கண்டங்களும் பயனடைகின்றது. இதன் மூலம் சுமார் இரண்டாயிரத்து மேற்பட்ட ஏக்கருக்கு நீர்பாய்ச்சப் பயன்படுகின்றது. இவ் அணைக்கட்டு கதவு 1990ம் ஆண்டு ஏற்பட்ட யுத்தத்தின் காரணமாக சேதமாக்கப்பட்டது. ஆனால் இதுவரை இவ் அணைக்கட்டு கதவு இன்னும் புனரமைப்பு செய்யப்படவில்லை. விவசாயிகள் ஒவ்வொரு போகத்திற்கும் ஆயிரத்துக்கு மேற்பட்ட மண் மூடைகளை கொண்டு அணையைக் கட்டி விவசாயச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

பகலில் இரண்டு கண்ட விவசாயிகள் அணைக்கட்டை கட்டி வயலுக்குநீர் பாய்ச்சி விட்டு சென்றால். இரவில் வரும் மற்றைய கண்ட விவசாயிகள் இதனை உடைத்து தமது வயலுக்கு நீர் பாய்ச்சுகின்றனர். இதனால் விவசாயிகளுக்கு இடையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றது. இவ்விடயமாக பலமுறை நீர்ப்பாசன அதிகாரிகளுக்கு அறிவித்தும், எந்தவிதமான பலனும் ஏற்படவில்லையென விசாயிகள் தெரிவிக்கின்றனர்.

2013ம் ஆண்டு சந்தியாற்றுவெளி ஆற்றில் இருந்து உப்பு ஆறு வ்ரை பள்ளவெளி ஆறு புனரமைப்பு செய்யப்படும் என்று விவசாயிகளுக்கு ஓட்டுவெளி விவசாய அமைப்பால் வாக்குறுதியளிக்கப்பட்டதாகவும், அதற்குரிய மதிப்பீட்டு அறிக்கை எடுக்கப்பட்டதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் 2000 ஏக்கர் நீர்ப்பாய்ச்சல் தேவைப்பட்ட முருக்கன்தீவு அணைக்கட்டு கதவை விட்டு விட்டு 70 ஏக்கருக்கு இலிப்பையடியில் ஒரு அணைக்கட்டு கதவும், அதே பகுதியில் 700 மீற்றருக்கு அப்பால் உள்ள மற்றுமொரு அணைக்கட்டு கதவும் புதிதாக நிர்மானித்துள்ளனர்.

முருக்கன்தீவு அணைக்கட்டு கதவை புனரமைத்து தருமாறு கமத்தொழில் அமைச்சுக்கு விவசாயிகளால் கோரிக்கை விடப்பட்டு, நிதி ஒதுக்கப்பட்டதாக தங்களுக்கு கடிதம் கிடைக்கப்பெற்றும், ஒதுக்கிய நிதியை கொண்டு மட்டக்களப்பு மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்தினர் அணைக்கட்டை அமைக்க நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றார்கள் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

முருக்கன்தீவுக்கு செல்லக் கூடிய பாதை மிகவும் சேதமடைந்து காணப்படுவதால் முருக்கன்தீவு அணைக்கட்டை எவரும் பார்வையிட வரவில்லை. அந்தளவுக்கு அப்பாதை மிகவும் மோசமாக காணப் படுகின்றது.

வருடத்தில் ஒரு தடவை விவசாய அமைப்புக்களோடு நீர்ப்பாசன அதிகாரிகள் வருவார்கள், முருக்கன்தீவு அணைக்கட்டை புனரமைப்பு செய்வதற்கு மதிப்பீடு செய்யப் போகின்றோம் என்று அளந்து விட்டு போவார்கள். ஆனால் இவ்விடயமாக பின்னர் எந்தவித பதிலும் வழங்குவதில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதனோடு சம்பந்தப்பட்ட பாதைதான் பள்ளிமடு பாதை. இது ஓட்டமாவடி பிரதேசசபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ளது. காவத்தமுனையில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது.

இப்பாதையினூடாக ஓட்டுவெளி கண்டம், பள்ளிமடு கண்டம், கக்கரிமடு கோழிப் பண்ணை என பல பாதைகளாக பிரிந்து செல்லும் இப்பாதை சுமார் 3 கிலோற்றர் ஆகும். இப்பாதை ஆரம்ப காலத்தில் அமைக்கப்பட்டத்தில் இருந்து இன்று வரை புனரமைப்பு செய்யப்படாமல் உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இப்பாதையின் வழியாக சுமார் மூவாயிரம் ஏக்கருக்கு மேல் விவசாயம் செய்யும் விவசாயிகள் நாளாந்தம் பயணம் செய்கின்றனர். இப்பாதை கரடு முரடாக சேதமடைந்து உள்ளதால் வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் உள்ளது. மேலும் ஒரு வாகனம் இப்பாதையால் வந்தால் மற்றைய வாகனம் இது போகும் வரை சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்தில் நிற்க வேண்டியுள்ளதாக வாகன சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் நெல் பசளை போன்ற வற்றை முழுமையாக கொண்டு செல்ல முடியாமல் சிறிது சிறிதாக கொண்டு செல்கின்றனர். இதனால் அதிகமான பணங்கள் செலவு செய்ய வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுகின்றார் என்று விவசாயிகள் கவலை தெரிவிக் கின்றனர்.

அத்தோடு இப்பாதையோரத்தில் உள்ள கோழிப் பண்ணையில் இருந்து ஒரு நளைக்கு இரண்டாயிரம் முட்டைகளை வியாபாரத்திற்கு கொண்டு செல்லும் போது வீதி சீரின்மை காரணமாக அதில் நூறுக்கு மேற்பட்ட முட்டைகள் உடைந்து விடுவதால் எனது தொழில் பாதிக்கப்படுவதாக பண்ணை உரிமையாளர் தெரிவிக்கின்றார்.

எனவே முறுக்கன்தீவு அணைக்கட்டு மற்றும் பள்ளிமடு வீதி ஆகியவற்றை புனரமைத்து தந்து விவசாயிகள் வாழ்க்கையில் ஒளியேற்றி வைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை விவசாயிகள் கேட்டுக் கொள்கின்றனர்.

முறுக்கன்தீவு அணைக்கட்டு மத்திய அரசாங்கத்தின் கீழ் காணப்படுவதால் இதனை எந்த அரசியல்வாதிகளும் கண்டு கொள்ளாமல் உள்ளனர். ஆனால் கிழக்கு மாகாணசபையின் கீழ் காணப்படும் அணைக்கட்டுகள் புனரமைக்கப்பட்டு காணப்படுகின்றது.

கிழக்கு மாகாண சபையின் கீழ் காணப்படும் அணைக்கட்டுகள் புனரமைக் கபட்டுகின்றது. ஆனால் மத்திய அரசின் கீழ் காணப்படும் அணைக்கட்டுள் சில புனரமைக்கப்படாமல் காணப்படு கின்றது. தற்போது ஆட்சியில் இருக்கும் அரசியல்வாதிகள் இதில் கூடிய கவனம் செலுத்தி உடனடி நடவடிக்கை மேற் கொள்ளுமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்கின்றனர்.

### இருப்பதை பயன்படுத்தாத நிர்வாகம்

வவுனியா வடக்கு கால்நடை வளர்ப் போர் கூட்டுறவு சங்கம் இயங்காமல் இருப்பதால், இது யாருக்காக அமைக்கப்பட்டதென்ற கேள்வி எழுகிறது.

பிரதேசத்தில் உள்ள பால்; உற்பத்தியாளர்களின் பாலை பதப்படுத்து வதற்காக சேவா லங்கா நிறுவனத்தினால் 4 இலட்சம் ருபா பெறுமதியான யூஸ் பதனிடும் இயந்திரமும், சந்தைப்படுத்து வதற்கு வாகனமும் வழங்கப்பட்டது. எனினும், ஐந்து வருடமாக இயந்திரம் பாவனை இல்லாமல் காணப்படுகிறது.

கூட்டுறவு சங்கத்தின் அசமந்த போக்கி னாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் குற்றம் சுமத்துகிறார்கள்.

பண்ணை வளர்பிற்கென அரச சார் பற்ற நிறுவனங்களினால் அமைத்து கொடுக்கப்பட்ட கட்டிடங்களும் கைவிடப் பட்ட நிலையில் காணப்படுகிறன. சம்மந்தப் பட்ட திணைக்களங்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.







இந்திய இலங்கை உடன்படிக்கையின் பின் ஆயுத ஒப்படைப்பு காலத்தில் இந்தியா தரப்பிலிருந்து எமக்கு வாக்குறுதியொன்று தரப்பட்டது. ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு அரசியல் கட்சியாக பதிவு செய்யுங்கள், இனி ஆயுதம் தூக்கி போராட தேவையில்லை, இந்தியா உங்களிற்கான தீர்வை பெற்றுத்தரும் என்றார்கள். அப்போது றோவின் ஆசிய பொறுப்பாளராக இருந்த சந்திரன், இந்திய தூதர் ஜே.என்.டிக்சிற், ரெமேஷ் பண்டாரி, ஜெய்சங்கர் (இப்போதைய இந்திய வெளிவிவகார செயலாளர்) போன்றவர்களே இந்த வாக்குறுதியை தந்தார்கள்.

ரெலோ அரசியல் கட்சியாக பதிவு செய்து, அரசியல் செயற்பாட்டில்தான் ஈடுபட்டு வருகிறது. இந்தக்காலத்தில் நானும் அரசியல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகிறேன். ஆரம்பத்தில் கொழும்பிலிருந்த எமது அலுவலகத்தில் இருந்து செயற்பட்டு வந்தேன்.


1990 காலப்பகுதியில் வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பும் ஏஜென்ஸிகாரர்கள் கொழும்பில் கொடி கட்டி பறந்தார்கள். இவர்களில் பலர் இளைஞர், யுவதிகளை வெளிநாட்டுக்கு அனுப்புவதாக பணம் வாங்குவார்கள். வெளிநாட்டுக்கு அனுப்ப படாதவர்கள், பணத்தை கேட்டால் விடுதலைப்புலிகள் என சி.ஐ.டியிடம் காட்டிக்கொடுத்து விடுவார்கள். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் எமது அலுவலகத்திற்குவந்து முறைப்பிடுவார்கள். இப்போது வடமாகாணசபை உறுப்பினராக உள்ள ஒருவரும் அப்பொழுது ஏஜென்ஸி வேலை செய்து, அவர் பற்றிய முறைப்பாடுகளும் எமக்கு வந்திருந்தன.

அப்பொழுது ரெலோவின் தலைவராக துன்னாலையை சேர்ந்த குகன் சாப் (வினோதலிங்கம்) இருந்தார். 1994 பாராளுமன்ற தேர்தலில் செல்வம் அடைக்கலநாதன் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், கட்சி மாநாட்டின் ஊடாக குகன் சாப் தலைவராக தேர்வுசெய்யப்பட்டார். ஏஜென்ஸிகாரர்களால் ஏமாற்றப்பட்டவர்களின் முறைப்பாட்டை தீர்த்து வைக்குமாறு தலைவர் உத்தரவிட்டிருந்தார். இதன்படி எமக்கு வரும் முறைப்பாடுகளை தீர்த்து வைப்போம்.

இப்படியான முறைப்பாடொன்று ஒருமுறை வந்தது. ஏஜென்ஸிகாரருடன் பேசி பிரச்சனை என்னவென பார்க்கும்படி, தலைவர் குகன் சாப் உத்தரவிட்டார். வாகனமொன்றில் கட்சி முக்கியஸ்தர்கள் பலர் போனோம். சிறீரெலோ கட்சியின் இப்போதைய தலைவர் உதயராசா, களுவா சங்கர், கரீம், லிங்கம் உள்ளிட்ட ஏழு பேர் அந்த ஏஜென்ஸிகாரரால் ஏமாற்றப்பட்டவர்களின் விபரங்களை எடுத்துக்கொண்டு சென்றோம்.

நாம் அங்கு சென்றபோது, அந்த ஏஜென்ஸிகாரர் சி.ஐ.டிக்கு தகவல் கொடுத்து விட்டார்கள். பொலிசார் செய்யும் வேலையை நீங்கள் எப்படி செய்யலாம் என சி.ஐ.டி எம்மை சுற்றிவளைத்து கைது செய்துவிட்டனர். பின்னர் சட்டத்தை கையில் எடுத்தோம் எனவழக்கு தொடுக்கப்பட்டு சிஆர்பி சிறையில் இரண்டு வருடம் தடுப்பில் இருந்தேன். சுட்டுக்கொல்லப்பட்ட சரத் அம்பேபிட்டியதான் அந்த வழக்கில் நீதிபதி. பின்னர் மேல்நீதிமன்றத்தில் முறையிட்டு

**மக்கள் பிரதிநிதிகள், பொதுவாழ்வில் உள்ளவர்களின் அறியப்படாத பக்கங்களை புரட்டும் பகுதி இது. வாழ்வில் நடந்த, அடிக்கடி நினைக்கும், மெய்சிலிர்க்கும் நிகழ்வுகளை இந்த பகுதியில் ஒவ்வொரு வாரமும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளார்கள் அவர்கள். மனதின் மூலைக்குள் மறைத்து வைத்திருந்த சம்பவங்களை முதன்முறையாக அவர்கள் அச்சில் பேசவுள்ளனர். நீங்கள் இதுவரை கேட்காத கதைகள் இவை.**




# மகிந்தவுடன் வேலை செய்ய ஒரு கோடி டீல் பேசினார்கள்!

## வடமாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்னத்தின் அனுபவங்கள்-2

விடுதலையானேன். அந்த வழக்கில் நான் விடுதலையாகிவிட்டேன். வழக்கில் சம்பந்தப்பட்ட மற்றைய அனைவருக்கும் 23 வருடங்களாக இப்போதும் பிடிவிறாந்து உள்ளது.

1998இல் இருந்து ஐந்து வருடம் வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகத்தில் உறுப்பினராக இருந்தேன். 2000ஆம் ஆண்டு சிறிகாந்தா, சிவாஜிலிங்கம் ஆகியோருடன் இணைந்து ரெலோ சார்பாக சுயேட்சைக்குழுவாக பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டேன். தேர்தல் பிரசாரத்திற்காக நெடுந்தீவிற்கு ஒருமுறை போனேன். என்னுடன் முப்பது பேரளவில் வந்திருந்தனர். அப்போது தீவகம் முழுமையாக ஈ.பி.டி.பியின் கட்டுப்பாட்டில் இருந்தது. எங்கள் வீட்டில் இருந்தபோது திடீரென ஈ.பி.டி.பியினர் சுற்றிவளைத்து சுவரொட்டிகளை கிழித்தெறிந்து அட்டகாசம் செய்தனர். என்னை மட்டும் வீட்டைவிட்டு வெளியில் வருமாறு கூறினார்கள். அவர்கள் சுட முயற்சிக்கிறார்கள் என கூறி, என்னை தனியே வெளியே செல்ல யாரும் விடவில்லை. முப்பது பேரும் வந்தார்கள். எங்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு சென்றார்கள்.

மறுநாள் காலையில் வள்ளத்திற்காக காத்திருந்த போது, எங்களை சுற்றிவளைத்து வீடியோ எடுத்தனர். இனி இங்கு வந்தால் சுட்டுவிடுவதாக எச்சரித்தனர்.

2001ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் தீவகத்திற்கு பிரசாரத்திற்கு சென்றோம். சிவாஜிலிங்கம், ரவிராஜ் ஆகியோரும் எம்முடன் வந்தனர். சிங்கள மகாவித்தியாலயத்திற்கு பக்கத்தில் எமது அலுவலகம் இருந்தது. பக்கத்து வீட்டை சேர்ந்த கமல் ஸ்ரோன் என்ற மாணவன் விளையாட வந்து எல்லோருடனும் நன்றாக பழகிவிட்டார். நாங்கள் புறப்படுவதை கண்டுவிட்டு, எங்கு போகிறோம் என கேட்டார். விடயத்தை சொல்ல, தானும் வரப்போகிறேன் எனவாகனத்தில் ஏறிவிட்டார். சகோதரகளிற்கு அப்பம் வாங்க சென்றவர் எங்களுடன் வந்து விட்டார்.

ஊர்காவற்றுறை நாரந்தனை பொன்னாச்சி கடை சந்தியை நெருங்கியபோது வெள்ளை நிற கன்ரரில் வந்த அறுபதிற்கும் மேற்பட்ட ஈ.பி.டி.பியினர் எம்மை சுற்றிவளைத்து தாக்கினர். எனக்கு ஒரு பக்கத்தில் இருந்த கமல் ஸ்ரோன் காயமடைந்து வைத்தியசாலையில் மரணமானார். ஏரம்பு பேரம்பலமம் காயமடைந்து மரணமானார். நான், மாவை சேனாதிராஜா, சிவாஜிலிங்கம் உள்ளிட்ட 21 பேர் காயமடைந்தோம்.

2005 இல் பளையில் ஒரு கூட்டத்திற்கு விடுதலைப்புலிகள் அழைப்பு விடுத்திருந்தார்கள். தமிழ் காங்கிரசில் இருந்து அப்பாத்துறை விநாயகமூர்த்தி, தமிழர் விடுதலைக்கூட்டணியில் ரவிராஜ், ரெலோ சார்பில் நான் சென்றேன். புலிகளின் அரசியல்துறையை சேர்ந்த தங்கன், இளம்பரிதி, பரா போன்றவர்கள் வந்திருந்தனர். ஜனாதிபதி தேர்தலில் எப்படி செயற்படுவதென்பது பற்றி ஆலோசிக்கவே அந்த கூட்டம்.

நீங்கள் என்ன முடிவெடுக்கிறீர்களோ, அதை செய்கிறோம் என ரவிராஜ், விநாயகமூர்த்தி, ஈ.பி.ஆர்.எல்.எவ் பிரதிநிதி சொன்னார்கள். நான் சொன்னேன் "மகிந்த ராஜபக்ச இனவாத கட்சிகளுடன் சேர்ந்து நிற்கிறார். மகிந்தவும், ரணிலும் இரண்டு பிசாசுகள்தான். இதில் யாரோ ஒருவர்தான் வெற்றிபெற போகிறார். இருவரையும் எங்களால் தோற்கடிக்க முடியாது. அதனால் எதை ஆதரிப்பது? எதை தோற்கடிப்பது என்பதில் சரியாக முடிவெடுக்க வேண்டும். சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தபோது ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்து உங்களின் தடையை நீக்கி, சமாதான உடன்படிகை செய்தவர், ஏ9 வீதியை திறந்தவர், இராணுவகட்டுபாட்டு பகுதிக்குள் உங்களை அரசியல் செய்ய அனுமதித்துள்ளார். ரணிலை ஆதரிப்பது சரியென எனக்கு தோன்றுகிறது. மகிந்த வந்தால் ஒப்பந்தத்தை முறித்து போரை தொடங்குவார். அல்லது தமிழ் மக்கள்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

விரும்பியவர்களிற்கு வாக்களிக்கலாமென விடலாம்" என்றேன்.

இளம்பரிதியும் தங்கனும் இதை ஏற்கவில்லை. ரணில் எமது இயக்கத்தை பிரித்தவர், சூழ்ச்சிகரமானவர், அவரை வெற்றிபெற அனுமதிக்க முடியாதென்றார்கள். "இது பொல்லைக் கொடுத்து அடிவாங்குவதாக இருக்ககூடாது" என நான் சொல்ல, ரவிராஜ் எனது கையை பிடித்து "பேசாமல் இரு" என சொல்லிக்கொண்டிருந்தார். தேர்தலை புறக்கணிப்பதென ஏற்கனவே புலிகள் முடிவெடுத்திருந்ததால், அந்த கூட்டத்தில் வேறு முடிவு எடுக்கவில்லை.

இறுதியில் ரணில் விக்கிரமசிங்க சிறிய வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

2007 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறீரெலோ யாழ்ப்பாணம் ஆரியகுளத்தில் அலுவலகம் அமைத்து இயங்கியது. தம்முடன் இணையுமாறு பலமுறை என்னை வற்புறுத்தினார்கள். தாய் இயக்கத்தை விட்டு விலகமாட்டேன் என மறுத்துவிட்டேன்.

சிறீரெலோவினர் யாழ்ப்பாணத்தில் பணஅறவீட்டில் ஈடுபட்டிருந்தனர். பாதிக்கப்பட்டவர்கள் ரெலோதான் இந்த அறிவீட்டை செய்கிறதென நினைத்து என்னிடம் வந்து முறையிட்டனர். இது எனக்கு சங்கடமான நிலையை ஏற்படுத்தியது. நான் அவர்களை தொடர்பு கொண்டு சில சமயங்களில் பேசியிருக்கிறேன். இப்படியான செயற்பாடுகளினாலோ என்னவோ யாரோ என்னை பற்றி இல்லாதது பொல்லாதது எல்லாவற்றையும் இராணுவ புலனாய்வாளர்களிடம் அள்ளிவைத்து விட்டனர். அதில் ஒன்று நான் விடுதலைப்புலிகளின் புலனாய்வு பிரிவுடன் சேர்ந்து இயங்குகிறேனாம்.

இந்த நிலையில் 512 வது படை பிரிவினர் என்னை விசாரணைக்கு அழைத்தனர். நான் அவர்களின் முகாமிற்கு போக, கண்ணை கறுப்பு துணியால் மூடிக்கட்டி, கைகளை பின்னால் விலங்கிட்டு ஒரு கதிரையில் உட்கார வைத்தனர். அப்பொழுது அங்கு வந்த தமிழ் துணைக்குழு ஒன்றின் உறுப்பினர்கள் சிலர் என்னை சுடுமாறு சொன்னார்கள். குரலை வைத்து அவர்களை அடையாளம் கண்டேன்.


செல்வம் அடைக்கலநாதன் தந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் இருபது பேரை ரெலோ அடையாள அட்டை கொடுத்து வைத்திருக்கிறேனா என்றுதான் விசாரணை நடந்தது. நான் அதை மறுத்தேன். அப்பொழுது ஒரு இராணுவ அதிகாரி வந்தார். என்னை விசாரித்தவர்கள் சத்தமில்லாமல் நின்றனர்.

நான் சிங்களத்தில் அவரிடம் விடயத்தை சொன்னேன். இங்கு இயக்கமொன்று கப்பம் அறிவிடுகிறது. அதை நான் பலமுறை கண்டித்தேன். தம்முடன் என்னை இணையுமாறு கேட்டனர். அதையும் மறுத்துவிட்டேன். இந்த ஆத்திரத்தில் நான் என்னைப்பற்றி பொய் கூறியிருக்கிறார்கள். என்னை சுடுவதென்றால் சுடுங்கள். ஆனால் அநீதியான வேலையை செய்யப் போகிறீர்கள் என்றேன். அவர் சில விடயங்களை கேட்டவிட்டு, என்னை அவிழ்த்து விட சொன்னார். கண் கட்டை அவிழ்த்த பின்னர் பார்த்தேன், என்னை அவிழ்த்து விட சொன்னவர் கப்டன் தர அதிகாரி. கைலாகு தந்துவிட்டு, நீங்கள் போகலாம் என்றார்.

2009 இல் யாழ் மாநகரசபை தேர்தலில் என்னையும் ஒரு வேட்பாளராக போட்டியிடுமாறு ரெலோ கேட்டது. நான் விரும்பவில்லை. அப்போது கட்சி எம்.பியாக இருந்த சிறிகாந்தா உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள் என்னை போட்டியிடுமாறு வலியுறுத்தினார். தேர்தலில் மூன்றாவது அதிகூடிய வாக்கு எனக்குத்தான். தேர்தல் தினத்தன்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் வாக்குகள் அதிகளவில் உள்ள பிரதேசங்களில் ஒன்பது இடங்களில் குண்டுகள் வெடித்தன. அல்பிரட் துரையப்பாவின் பின் தமக்கு வேண்டப்பட்ட ஒருவர் மேயராக வேண்டுமென மகிந்த விரும்பியிருந்தார். உயிரச்சுறுத்தலான காலம் இது. அச்சுறுத்தலிற்கு மத்தியில் போட்டியிட்டுத்தான் வெற்றிபெற்றோம்.

மாநகரசபை நிர்வாகத்தில் நிறைய முறைகேடுகள் நடந்தன. இதை நான் தொடர்ச்சியாக விமர்சித்து வந்தேன். 2010 இல் முள்ளிவாய்க்கால் அழிவின் முதலாவது நினைவுதினத்தை மாநகரசபையில் அனுட்டித்தோம். தீபம் ஏற்றும்போது இராணுவ புலனாய்வாளர்கள் உள்ளே வந்து எங்களை படம் எடுத்தார்கள். நல்லூர் பிரதேசத்தையே இராணுவம் சூழ்ந்து நின்றது. இப்படியான காரணங்களால் என்னை கொல்ல வேண்டுமென்பதற்காக நகரிலிருந்து இராணுவப் புலனாய்வாளர்கள் திட்டமிட்டனர். என்னுடைய வீட்டை இரண்டொருமுறை தாக்கினார்கள். ஒருமுறை நானும் மனைவியும் நெல்லியடிக்கு செல்லும்போது புலனாய்வாளர்கள் என்னை சூழ்ந்து கொண்டார்கள். ஒருவிழியாக அவர்களிடமிருந்து தப்பித்தேன்.

பின்னர் கொழும்புத்துறைக்குள் வைத்து துரத்தினார்கள். அவர்கள் சூட்டு எல்லைக்குள் வரவிடாமல் வேகமாக மோட்டார்சைக்கிளில் ஓடினேன்.



2015 ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் சிலர் தொடர்பு கொண்டு நகரத்திலுள்ள ஹொட்டல் ஒன்றிற்கு பேசுவதற்கு வரச்சொன்னார்கள். மகிந்த ராஜபக்ச விற்காக வேலை செய்வதாக அறிமுகப் படுத்திவிட்டு, கடந்த தேர்தலில் பொன் சேகாவிற்கு தமிழர்கள் வாக்களித்தார்கள். அப்படியொரு நிலைமை இம்முறை வரக்கூடாது.

கைத்துப்பாக்கியால் சுட்டார்கள். அவர்களிடமிருந்து தப்பித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்குள் சென்று தப்பித்தேன். இது தொடர்பாக மனிதஉரிமைஆணைக்குழு கடிதங்கள் எழுதியுள்ளது. பாராளுமன்றத்தில் வினோநோகராதலிங்கம் பேசியுள்ளார்.

2013 வடமாகாணசபை தேர்தல் சமயத்தில் தீவகத்தில் போட்டியிட்டேன். ஏற்கனவே தீவகத்தில் ஈ.பி.டி.பியினரால் பலமுறை தாக்கப்பட்டிருந்தும், இம்முறையும் துணிந்து சென்றேன். தீவகத்தில் எனது பிரச்சாரங்களிற்கு சிறிதரன் எம்.பி பெரிதும் துணையாக இருந்தார். கிழக்கிலிருந்து இந்திரகுமார் பிரசன்னா, ஹென்றி மகேந்திரன் போன்றவர்களும் இங்கு வந்து பிரசாரத்தில் ஈடுபட்டனர். பதின்மூன்று இடங்களில் எம்மீது நாக்குதல் நடந்தது.

புங்குடுதீவில் பிரசாரத்திற்கு சென்று கொண்டிருந்தபோது, இறுபிட்டி பகுதியில் கிராமமக்கள் நூறு பேர் வரை திரண்டு ஆக்ரோசமாக வந்தார்கள். எம்மை சூழ்ந்து நின்று திட்டி, திரும்பி போக சொன்னார்கள். தமக்கு இதுவரை என்ன செய்திருக்கிறோம் என்றும் கேட்டனர். "சரி நாங்கள் போகிறோம். நீங்கள் விரும்பிய கட்சிக்கு வாக்களியுங்கள்" என்றேன். "விரும்பிய கட்சியில்லை. நாங்கள் விந்தனிற்குதான் வாக்களிப்போம்" என்றார்கள். விந்தன் கனரட்ணம் நான்தான் என்றேன். உடனே இரண்டு தரப்பும் ஐக்கியமாகி விட்டோம்.

தேர்தலில் தீவக மக்கள் எனக்கு அதிகமாக வாக்களித்திருந்தனர். 24 வருடத்திற்கு பின்னர் ஈ.பி.டி.பி கோட்டையாக இருந்த தீவகத்தில் 9,000 வாக்குகளை பெற்று வெற்றியடைந்த கூட்டமைப்பின் வேட்பாளர் நான்தான்.

யாழ்ப்பாணத்தின் மற்றைய எல்லா இடங்களிற்கும் மாகாணசபை உறுப்பினர்களின் உதவி செல்கிறது. தீவகத்திற்கு அது கிடைப்பதில்லை. அதனால்தான் அங்கு அதிகமாக எனது திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறேன்.

2015 ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் சிலர் தொடர்பு கொண்டு நகரத்திலுள்ள ஹொட்டல் ஒன்றிற்கு பேசுவதற்கு வரச்சொன்னார்கள். மகிந்த ராஜபக்சவிற்காக வேலை செய்வதாக அறிமுகப் படுத்திவிட்டு, கடந்த தேர்தலில் பொன்சேகாவிற்கு தமிழர்கள் வாக்களித்தார்கள். அப்படியொரு நிலைமை இம்முறை வரக்கூடாது. மகிந்தவிற்கு வாக்களிக்குமாறு அறிக்கைவிட வேண்டும் என கேட்டார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து மேலும் மூவர் அறிக்கைவிட தயாராக உள்ளதாக கூறி பெயரை சொன்னார்கள். நான் மறுத்தபோது, இரண்டு பெரிய கட்சிகளிற்கும் வாக்களிக்ககூடாது என்றாவது பத்திரிகையாளர் சந்திப்பில் கூறவேண்டும், ஒரு கோடி ரூபா தருவோம், முதலில் ஐம்பது இலட்சம் ரூபா தருவோம் என்றார்கள். நான் மறுத்துவிட்டு எழுந்து வந்துவிட்டேன். வெளியில் நின்று லிங்கநாதனிற்கு தொலைபேசியில் அழைத்து, நீங்களும் மகிந்தவிற்கு ஆதரவாக அறிக்கைவிட தயாராக இருப்பதாக சொல்கிறார்கள், உண்மையா? என கேட்டேன். தனக்கும் பெரிய நச்சரிப்பாக இருக்கிறது, நாங்கள் அப்படியானவர்கள் இல்லைத்தானே என்றார். அப்பொழுது பத்திரிகைகளிலும் இது பற்றி செய்திகள் வெளியாகியிருந்தன.

2015 ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேனாவிற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவளித்தது. பிரச்சாரத்திற்கு தீவகத்திற்கு நாங்கள் சென்றபோது ஈ.பிடி.பியினர் எம்மை வழிமறித்து எனது வாகனத்தை உடைத்து, துண்டு பிரசுரங்களையும் கிழித்தெறிந்தனர். அந்த சம்பவத்தில் ஈடுபட்ட ஈ.பி.டி.பியினரை கைது செய்த பொலிசார் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். நீதிபதி லெனின்குமார் அவர்களால் வழக்கு விசாரிக்கப்பட்டு, ஈ.பி.டி.யினர் குற்றவாளிகள் என தீர்ப்பு வழங்கப்பட்டு, கடுமையான எச்சரிக்கப்பட்டனர். உடைக்கப்பட்ட வாகனத்திற்கு நட்டஈடும் வழங்கினர். ஈ.பி.டி.பியின் ராம் தோழர், நாகராசா பிரதீபன் உள்ளிட்ட நால்வர் இதில் சம்பந்தப்பட்டிருந்தனர்.

அண்மையில் மாகாணசபையில் குழப்பங்கள் நடந்தபோது, அமைச்சரவை மாற்றம் நிகழ்ந்தது. இதன்போது என்னையும் ஒரு அமைச்சுக்கு கட்சி சிபாரிசு செய்தது. கட்சி உயர்பீடம் கூடி இதுபற்றி முடிவெடுத்துவிட்டு, முதலமைச்சரை சந்தித்து கட்சி முடிவை முதலமைச்சரிடம் கூறிவிட்டு பத்திரிகைக்கு சொல்லுங்கள் என பொறுப்பளித்தது. ஆனால் அவர் முதலமைச்சரிடம் என்னை பற்றி தவறாக சொன்னதாக தகவல் கிடைத்தது. யாருக்கு கிடைத்தாலும் எனக்கு கிடைக்ககூடாதென்றுதான் அவர் நடந்து கொண்டார். இப்பொழுது வேறு ஒருவர் அமைச்சராகியுள்ளார்.

மாநாகரசபை, மாகாணசபை தேர்தலில் போட்டியிடுமாறு கட்சி கேட்டபோது முதலில் மறுத்திருந்தேன். வேறு யாருக்கும் அந்த வாய்ப்பை கொடுக்குமாறு சொல்லியிருந்தேன். பதவிகளிற்கு நான் ஆசைப்பட்டதில்லை. முப்பத்துமூன்று வருடங்களாக நான் கட்சியிலேயே இருக்கிறேன். இயக்கத்தை விட்டு பிரிந்து சென்றவர்களும், விடுதலைப்புலிகளுக்கு பயந்து ஓடியவர்களும், இயக்கத்திற்கு துரோகம் செய்து மகிந்தவுடன் சேர்ந்து தனி இயக்கம் ஆரம்பித்து எம்மையும் தமிழ் மக்களையும் துன்புறுத்தியவர்களும், இயக்கத்தில் இருந்து கொள்ளையடித்துக் கொண்டு ஓடியவர்களும் மீண்டும் ரெலோவிற்குள் நுழைந்து, இப்போது அவர்களே ரெலோவின் தலைவிதியை தீர்மானிப்பவர்களாகவும், எமது விதியை எழுதுபவர்களாகவும் மாறிவிட்டார்கள். இதுதான் இன்று கட்சியின் துயர நிலை.

இன்றைய காலத்தில் புதியதொரு அரசியல் போக்கு உருவாகியிருக்கிறது. மக்களின் விடுதலைக்காக போராட புறப்பட்ட எம்மை ஆயுதக்குழு என கூறுகிறார்கள். போராட்டத்திற்கு ஒரு கிளாஸ் தண்ணீர் தராதவர்கள், போராட்டத்திற்கு ஒரு ரூபா பங்களிக்காதவர்கள், எந்த போராட்டத்திலும் கலந்து கொள்ளாதவர்கள் பலர் 2009 இன் பின் அரசியலுக்கு வந்துள்ளார்கள். தாங்கள்தான் தமிழர்களின் காவலர்கள் என்பதை போல பேசுகிறார்கள். இதுதான் இன்றைய துயர அரசியல்.

# சின்னத்திரை

## ஸ்லோமோசன் பார்வதி

விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் தமிழ் கடவுள் முருகன் தொடரில் பார்வதியாக நடிப்பவர் பிரியா. பார்வதியாக நடிப்பதெனில் உடல் எடையை குறைக்க வேண்டுமென இயக்குனர் சொன்னாராம். உடனே உடல் இளைத்து பார்வதியாகி விட்டாராம். சாதாரண சீரியல்களில் வேகவேகமாக பேசிக்கொள்வதை போல பேச முடியாமல் இருப்பதும், அனைத்து அக்சன்களையும் ஸ்லோமோசனிலேயே செய்வதும்தான் சிரமமாக இருந்ததாம். ஆனால் போகபோக எல்லாம் சரியாகிவிட்டதாம்.


பிரியா

## ஓவியாவின் குறும்பு

பிக்பொஸ் நிகழ்ச்சியின் தயாரிப்பாளர்களில் ஒருவர் ரோஸ் மெர்லின். பிக்பொஸ் நிகழ்ச்சி முடிந்ததன் பின்னர், அங்கு நடந்த சுவாரஸ்ய சம்பவமொன்று பற்றி குறிப்பிட்டுள்ளார். ஒருநாள் இரவு 10.30 அளவில் ஓவியா கமராவின் முன் நின்று பேசிக்கொண்டிருந்தாராம். அன்று வெளியில் சரியான புயல், மழையாம். தான் பேயுடன் பேச வேண்டும், விளக்குகளை நிறுத்துங்கள் என ஓவியா கூறியிருக்கிறார். தயாரிப்பாளர் குழு அவரை கவனித்துக்கொண்டிருந்திருக்கிறது. அப்பொழுது யாரும் எதுவும் செய்யாமல் திடீரென ஒருமுறை கரண்ட் கட் ஆகி மீண்டும் விளக்கு எரிந்திருக்கிறது. ஏன் விளக்குகள் கட் ஆனதென ரோஸ் மெர்லின் பணியாளர்களுடன் கோபப்பட, யாரும் எதுவும் செய்யாமல் கரண்ட் கட் ஆகியிருக்கிறது. கரண்ட் வந்தபின் ஓவியாவை கமராவின் முன் காணவில்லையாம். எங்கே போய்விட்டார் என தேடினால், தனது படுக்கையில் ஓடிப்போய் படுத்துவிட்டாராம்.


ஐஸ்வர்யா ராஜேஷ்

## பிக்பாஸ் வீட்டுக்குள் அடிதடி

இந்தியில் பிக்பாஸின் 11வது சீசன் நடந்து வருகிறது. போனவாரம் அங்கு பிக்பாஸ் வீட்டுக்குள் பெரிய கலவரமே நடந்து முடிந்திருக்கிறது. விகாஸ் குப்தா, ஆகாஷ் டட்லனி, பிரியங்கா சர்மா ஆகியோர் வாக்குவாதப்பட்டு கைகலப்பில் ஈடுபட்டனர். இதனால் பிரியங்கா சர்மா பிக்பாஸ் வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் சல்மான் கான் படு பயங்கரமாக கோபப்பட்டு பேசினார். கெட்ட வார்த்தை, மதம், பாலினம் பேசுவது பிக்பாஸ் ஒப்பந்தத்தில் கிடையாது. அதை மீறியவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என சல்மான் எச்சரித்துள்ளார்.

## கட்டிப்பிடித்ததற்கு காரணம் இதுதான்

பிக்பாஸ் வீட்டுக்குள் பிரபலமான விடயங்களில் ஒன்று சினேகனின் கட்டிப்பிடி வைத்தியம். பெண்களை அதிகம் கட்டிப்பிடிக்கிறார் என்ற விமர்சனங்களும் அதிகமாக வந்தன. பிக்பாஸ் நிகழ்ச்சி முடிந்த பின்னர் வெளியில் வந்ததன் பின்னர்தான் இதையறிந்துள்ளார். உடனடியாக வீடியோ மூலம் விளக்கம் கொடுத்துள்ளார். அதில் அன்பு தேவைப்படும் போது அணைத்தேன். இதை புரியாமல் கட்டிப்பிடிப்பதற்காக நான் அங்கு சென்றிருப்பதாக சிலர் சொன்னார்கள். சுலபமாக ஒருவரை தொட்டுவிட முடியாது. அன்பின் வெளிப்பாடாகத்தான் அணைத்தேன் என கூறியுள்ளார்.

## சூட்டிங் ஸ்பொட்



மெர்சல்




பக்கா

## கிசுகிசு

- தமிழ் சினிமாவில் ஒருசில படங்களில் மட்டுமே நடித்திருக்கும் அந்த நடிகையின் படங்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய படங்களே வெற்றி பெற்றிருக்கிறது.

  தமிழ், தெலுங்கு சினிமாவில் முன்னணி நாயகியாக வரமுடியாததால் தற்போது பாலிவுட் பக்கம் கவனம் செலுத்தி இருக்கும் அந்த நாயகியின் நடிப்பில் தமிழ் பிக்பாஸில் பலரால் கலாய்க்கப்பட்ட ஒருவரது பெயரைக் கொண்ட படம் ஒன்று தயாராகி இருக்கிறது. நாயகி தமிழில் நடிக்கும் போதே ஓரளவு தாராளமாய் கவர்ச்சியைக் காட்டி வந்த நிலையில், பாலிவுட்டில் தனது உச்ச கவர்ச்சியால் அனைவரையும் தற்போது வாய்ப் பிளக்க வைத்துள்ளாராம்.

  முன்னதாக கிரிக்கெட்டின் கூல் கேப்டனுடன் டேட்டிங் சென்றதாக நாயகி கிசுக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது பாலிவுட் மாடலும் நடிகருமான ஒருவருடன் அடிக்கடி டேட்டிங் செல்வதாக கூறப்படுகிறது.

- எம்மனசு தங்கமான நடிகை, சில நாட்களாக கவர்ச்சியான படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவு செய்தாராம். இந்த புகைப்படத்தால் நடிகைக்கு பல பட வாய்ப்புகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்தாராம். ஆனால், எந்த வாய்ப்பும் கிடைக்க வில்லையாம். இதனால், படம் இயக்கும் எண்ணத்தில் இருக்கிறாராம் நடிகை!

  இதற்குமுன் ஒரு பேட்டியில், படம் இயக்குவது என்னுடைய ஆசை என்று கூறியிருக்கிறாராம். தற்போது பட வாய்ப்புகள் இல்லாததால், படத்தை இயக்க இருக்கிறாராம். இதையறிந்த சில நடிகைகள், நடிகைக்கு நடிப்பு திறனை வெளிப்படுத்தும் எந்தப் படமும் அமையவில்லையாம். அதற்குள் படத்தை இயக்க வந்துவிட்டார். எதற்கு இந்த விபரீத ஆசை என்று பலரும் பேசி வருகிறார்களாம்.

- ஆரம்பத்தில் பல படங்களில் சின்ன சின்ன ரோல்களில் நடித்து வந்த சுமார் மூஞ்சி நடிகர், காற்று படம் மூலம் ஹீரோவானாராம். இவர் தனது நடிப்பு மூலம் ரசிகர்களை எளிதாக கவர்ந்து வந்தாராம். ஹீரோவாக நடித்தாலும் பல படங்களில் கெஸ்ட் ரோலில் நடித்து வந்தாராம். தினமும் அவரிடம் வந்து யாராவது என் படத்தில் கெஸ்ட் ரோல் பண்ணிக்கொடுங்க என கேட்பது வழக்கமாம். அவரும் கேட்பவர்களுக்கெல்லாம் நடித்து கொடுத்து வந்தாராம். ஆனால் அவரை ஹீரோவாக வைத்து படம் எடுப்பவர்கள் இது வேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ளார்களாம்.

  இதனால் இனி சுமார் மூஞ்சி நடிகர், கெஸ்ட் ரோலில் நடிப்பதில்லை என முடிவு செய்துள்ளாரம். இதனால் திரையுலகினர் பலரும் அதிர்ச்சியில் இருக்கிறார்களாம். பெரிய ஹீரோவாக இருந்தாலும் சின்ன ரோலில் கேட்டபோதெல்லாம் நடித்து கொடுத்தவர் தற்போது அதற்கு தடை போட்டது திரையுலகில் உள்ள பலருக்கு அதிர்ச்சி அளித்துள்ளதாம்.




மனாலி ரத்தூட்

## பெயரை மாற்றிய நயன்தாரா!

நயன்தாரா சினிமாவில் வெற்றிக்கொடி நாட்டினாலும், தனிப்பட்ட வாழ்வில் நிறைய தடுமாற்றங்களை சந்தித்தவர். முதலில் சிம்புவை காதலித்து பிரிந்தார். பிறகு பிரபுதேவாவுடன் நெருக்கமாக இருந்தார். இந்த சமயத்தில் தனது கையில் பிரபு என பச்சை குத்தினார். பிரபுவும் பிரிந்த பின்னர், தன்னைவிட ஒரு வயது குறைந்த விக்னேஷ் சிவனுடன் ஒன்றாக வாழ்ந்து வருகிறார். இருவரும் இரகசிய திருமணம் செய்துவிட்டார்கள் என்ற செய்தியும் உலாவி வருகிறது. இந்தநிலையில் தனது கையில் பிரபு என பச்சை குத்தியிருந்ததை நயன்தாரா அழித்து விட்டார். இப்பொழுது பொசிட்டிவ் என பச்சை குத்தியுள்ளார்.

## தொப்புளில் பம்பரம் விட்ட ஜீவன்

காக்க காக்க படத்தில் வில்லனாக அறிமுகமான ஜீவன், பின்னர் ஹீரோவாகினார். திருட்டு பயலே, நான் அவனில்லை உள்ளிட்ட அவரது சிலபடங்கள் வெற்றியடைந்தன. ஆனால் பின்னர் படவாய்ப்புக்கள் இன்றி இருந்தார். நீண்டகாலத்தின் பின் தரமணி, ஹரஹர மகாதேவகி படங்களை தொடர்ந்து ஜெயிக்கிற குதிர படமும் விரைவில் வெளியாகவுள்ளது. இதில் டிம்பிள் சோப்டே, சாஷி அகர்வால், தம்பி ராமையா நடிக்கிறார்கள். படத்திற்கு தணிக்கைகுழுவினர் ஏ சான்றிதழ் வழங்கியுள்ளனர். அடுத்த மாதம் படம் திரைக்கு வரவுள்ளது. இந்தப்படத்தில் நடிகையின் தொப்புளில் பம்பரம் விடும் காட்சியிலும் நடித்திருக்கிறாராம் ஜீவன்.

## 5 இலட்சம் செலவழித்தால் நடிகையுடன் டேட்டிங்காம்!

தமிழ், தெலுங்கில் சில படங்களில் நடித்து விட்டார் ராஷ்மி கவுதம். ஆனால் அதிர்ஷ்டம் இன்னும் அவரது கதவைத் தட்டவில்லை. ஒரு படமாவது ஹிட்டாகிவிட்டால் தனது மார்க்கெட்டே மாறிவிடும் என நினைக்கிறார். இதற்காக இவர் நடித்த நெக்ஸ்ட் நுவ்வு படம் விரைவில் திரைக்கு வரவுள்ளது. இந்தப்படத்தை ஐயாயிரம் முறை பார்ப்பவர் தன்னுடன் டேட்டிங் செய்யலாமென கூறி பரபரப்பை கிளப்பியுள்ளார். இதனால் சில ரசிகர்கள் உற்சாகமாகியுள்ளனர். ஒரு ரிக்கெட் 100 ரூபாய் என்றாலும் ஐந்து இலட்சம் தேவை என கணக்கு பார்க்க தொடங்கியுள்ளனர். அவர்களிற்கு ஒரேயொரு சந்தேகம் ஐயாயிரம் முறை படத்தை பார்த்தால் ராஷ்மி டேட்டிங் வருவாரா என்பதே.

## ஒரே படம், ஓஹோவென்ற வாழ்க்கை

தமிழில் சில படங்களில் நடித்தார் ரகுல் பரீத் சிங். அந்த படங்கள் அவ்வளவாக வரவேற்பை பெறவில்லை. இதன்பின் தெலுங்கிற்கு போய் முன்னணி நடிகையானார். அண்மையில் மகேஷ்பாபுவுடன் ஸ்பைடர் படத்தில் நடித்ததுடன், தமிழுக்கு திரும்பி வந்தார். படம் செம ஹிட். இப்பொழுது கார்த்தியுடன் தீரன் அதிகாரம் ஒன்றில் நடித்துள்ளார். இதையடுத்து ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடிக்கும் புதிய படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இதுதவிர, கார்த்தியின் புதிய படமொன்றிலும் ஒப்பந்தமாகியுள்ளார்.

## காதலன் இல்லாததால் லட்சுமி ராய்க்கு கிடைத்த வாய்ப்பு

தனக்கு காதலன் யாரும் இல்லாமல் இருந்தது நல்லதாக போய்விட்டதென சந்தோஷப்பட்டுள்ளார் ராய் லட்சுமி. இந்தியில் ஜூலி 2 படத்தில் கவர்ச்சியை காட்டு காட்டு என்று காட்டியிருந்தார். காதலன் இருந்திருந்தால் இப்படி நடிக்க விட்டிருக்கமாட்டார். உடலை காட்ட வேண்டுமென திட்டமிட்டு காட்டவில்லை, கதைக்கு தேவையாக இருந்ததால் அப்படி நடித்ததாக கூறியிருக்கிறார். தமிழில் தனது திறமைக்கு ஏற்ற வேடங்கள் கிடைக்கவில்லை, சும்மா வந்து போகும் வேடங்களைத்தான் தந்தார்கள், தமிழ் இயக்கு னர்களிற்கு நடிகைகளின் திறமை தெரியாது என வறுத்தும் எடுத்துள்ளார். ஜூலி 2 படத்தில் சீரியல் நடிகர் சாஹிலுக்கு உதட்டு முத்தம் கொடுத்திருந்தார். இது பற்றியும் பேசியிருக்கிறார். "சாஹில் தனது நல்ல நண்பனென். அறிமுகமற்றவர்களுடன் இப்படியான காட்சிகளில் நடிக்கலாம். நெருங்கியவர்களுடன் நடிக்க முடியாது. நிறைய கஸ்ரப்பட்டுத்தான் நடித்து முடித்தேன்" என்றுள்ளார்.

## விஜய் அதுக்கு சரிப்பட்டு வரமாட்டாராம்

பாஸ்கர் ஒரு ராஸ்கல் மூலம் மீண்டும் தமிழுக்கு வந்திருக்கிறார் மலையாளத்தின் ரொப் மோஸ்ட் டைரக்டர் சித்திக். மலையாளத்தில் இருந்து அவர் தமிழுக்கு கொண்டு வந்த படங்கள் எல்லாமே பாக்ஸ் ஆபிசை அதகளம் செய்தவை. அரங்கேற்றவேளையில் தொடங்கி ப்ரெண்ட்ஸ், காவலன் வரை ஏராளம் படங்கள் இந்த பட்டியலில் உள்ளன. தமிழில் காவலன் என எடுத்ததை இந்தியில் பொடிகார்ட் என எடுத்தார். அங்கும் தாறுமாறாக ஓடியது. மலையாளத்தில் மம்முட்டி, நய்னதாராவை வைத்து எடுத்ததை, தமிழில் அரவிந்த்சாமி அமலாபாலை வைத்து பாஸ்கர் ஒரு ராஸ்கல் என எடுத்துள்ளார். இவரது அபிமான நடிகர் விஜய் இந்த பாத்திரத்திற்கு பொருந்தமாட்டார் என்பதால் அரவிந்சாமியை நடிக்க வைத்தாரம். இந்த பாத்திரத்தில் முதலில் ரஜினிதான் நடிக்க இருந்தார். எனினும், பின்னர் ஏதோ குழப்பத்தால் அது நடக்கவில்லை. நவம்பரில் இந்த படம் வெளியாகுமாம்.



# பிரபாகரனை குறிவைத்து 'சேர்ஜிக்கல் ஒப்ரேசன்'!

## வல்லரசு வாங்கிக்கட்டிய கதை

ஸ்ரான்லி பிருந்துவி

**1987 ஒக்ரோபர் 03ம் திகதி.**

புலேந்திரன், குமரப்பா உள்ளிட்ட பன்னிரண்டு விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் கடலில் வைத்து கடற்படையினரால் கைதாகினர்.

இதற்கு சில நாட்களின் முன்னர்தான் இலங்கையரசு பொதுமன்னிப்பு அறிவித்தலொன்றை விடுத்திருந்தது. 1987 ஓகஸ்ட் 30ம் திகதிக்கு முன்னர் கைதானவர்கள், வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டவர்களிற்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்ற அந்த அறிவித்தல், இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் எழுதப்படாத ஒரு சரத்து என்றுதான் கூற வேண்டும். தமிழ் ஆயுத இயக்கங்களை ஜனநாயக நீரோட்டத்திற்குள் இழுத்து வரும் திட்டத்திற்கு இந்த அறிவித்தல் முக்கியமென இந்தியா கருதியதால், இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து பொதுமன்னிப்பு திட்டத்தை அறிவிக்க வைத்தனர்.

ஆனால் ஒக்ரோபர் 03ம் திகதி கைதான புலிகளின் தளபதிகளிற்கு பொதுமன்னிப்பு சலுகை கிடைக்காதென ஜே.ஆர் அரசு வாதிட்டது. அதுதவிர, கைதான புலேந்திரன் அனுராதபுரத்தில் சிங்களவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுடன் தொடர்புடையவர், வடக்கு கிழக்கிற்கு வெளியில் நடந்த சம்பவங்களிற்கு பொதுமன்னிப்பளிக்கப்படவில்லை என்றார்கள்.

அனுராதபுரத்தில் சிங்கள மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுடன் புலேந்திரன் தொடர்பானவர், அவரை கொழும்பிற்கு கொண்டு வந்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துவது இழந்து போன தமது பிம்பத்தை மீட்டெடுக்க உதவுமென லலித் அத்துலத்முதலியும், ஜே.ஆரும் நினைத்தனர். இந்திய இலங்கை உடன்படிக்கையினால் சிங்கள மக்கள் மத்தியில் வீழ்ச்சியடைந்திருந்த தமது செல்வாக்கை உயர்த்த கிடைத்த வாய்ப்பாக இதனை பார்த்தார்கள்.

ஒக்ரோபர் 04ம் திகதி பலாலி படைத்தளத்திற்கு பதினேழு போராளிகளும் கொண்டு வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். பலாலிவிமான நிலையம் இந்தியப்படைகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதை தவிர்த்து, இந்திய இலங்கை இராணுவங்கள் தனித்தனியாக தங்கியிருந்தன.

கைது செய்யப்பட்டுள்ளவர்கள் பத்திரமாக புலிகளிடமே ஒப்படைக்கப் படுவார்கள் என இந்திய அதிகாரிகள் ஏற்கனவே புலிகளிடம் வாக்குறுதி வழங்கியிருந்தனர். புலிகளுடனான இந்தியப்படையின் தொடர்பாளர் பிரிகேடியர் பெர்னாண்டஸ், படைத் தளபதிகள் ஹரிகிரத் சிங், திபெந்தர் சிங் உள்ளிட்டவர்களும் இதே வாக்குறுதியை புலிகளிடம் வழங்கியிருந்தனர். திபெந்தர் சிங் உடனடியாக ஜே.ஆரையும் சந்தித்து பேசினார். சுமுக முடிவு கிட்டவில்லை. இதற்குள் அன்ரன் பாலசிங்கம் இந்திய தூதர் டிக்சிற் உடன் பேசினார். போராளிகளை விடுவிக்கப்பட வேண்டும் என்று அழுத்திக் கூறினார். ஜே.ஆர் முரண்டு பிடிப்பதை தெளிவுபடுத்திய டிக்சிற், தனக்கு சிறிய கால அவகாசம் தரப்பட வேண்டுமென கேட்டுக்கொண்டார். அப்படியானால், போராளிகளை உடனே நாங்கள் நேரில் சந்திக்கவாவது ஏற்பாடு செய்யுமாறு அன்ரன் பாலசிங்கம் கேட்டார். ஜே.ஆருடன் பேசி அதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தார் டிக்சிற்.

ஒக்ரோபர் 04ம் திகதி அன்ரன் பாலசிங்கமும், மாத்தையாவும் பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை வந்தித்து பேச சென்றனர். போராளிகள் பல நாள் சரியான சாப்பாடு இல்லாமல் சிரமப்பட்டிருப்பார்கள் என கருதியோ என்னவோ, தடல்புடலான விருந்து சாப்பாடுகளுடன் சென்றனர். அத்துடன், சயனைட் குப்பிகளையும் மறைவாக கொண்டு சென்றனர். மாத்தையாவே சயனைட் குப்பிகளை மறைத்து வைத்திருந்தார். சாப்பிட்டுக்கொண்டிருந்த சமயத்தில் கண்காணிப்பு படையினருக்கு தெரியாமல் சயனைட் குப்பிகளை சூட்சுமமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த போராளிகளிற்கு கொடுத்துவிட்டார்.

05ம் திகதி போராளிகளை பலவந்தமாக விமானத்தில் ஏற்ற முயன்றபோது, அவர்கள் சயனைட் அருந்தினார்கள். புலிகள் சயனைட் வைத்திருந்திருப்பார்கள் என்பதை இந்திய, இலங்கை படைகள் அறிந்திருக்கவில்லை.

புலிகளை கொழும்பிற்கு அனுப்பும் திட்டத்தை தடுக்க வேண்டாமென இந்திய உயர்மட்டத்தில் இருந்து பலாலியில் நிலைகொண்டிருந்த இந்தியப்படை தளபதிக்கும் தகவல் அனுப்பிவைக்கப் பட்டிருந்ததால், இந்திய படைகள் இதில் தலையிடவில்லை. ஏற்கனவே திலீபனின் மரணம், இப்பொழுது குமரப்பா, புலேந்திரன் மரணம் என்பவற்றால் அதிருப்தியடைந்த புலிகள், இந்தியாவுடன் மோதுவதென முடிவு செய்தனர்.

இந்தியப்படைகளுடன் மோதுவதென்ற முடிவை பிரபாகரன் எடுத்தபோது, அமைப்பிற்குள் கடுமையான சலசலப்பு எழுந்தது. இந்தியாவுடன் போரிட முடியாதென கணிசமான போராளிகள் நினைத்தார்கள். போராளிகளின் குழப்பம் பிரபாகரனிற்கும் தெரியப்படுத்தப்பட, முல்லைத்தீவு மணலாற்றில் ஒருநாள் முக்கிய தளபதிகள், மூத்த உறுப்பினர்களை அழைத்து சந்தித்தார். இந்தியாவுடனான மோதல் பற்றி அதில் பேசப்பட்டது எல்லோரும் கருத்துக்களை சொல்லிக்கொண்டிருந்தனர். அனைத்தையும் பிரபாகரன் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார். தீர்மானகரமான தருணங்களில் அவர் முகம் இறுக்கமாகி, கண்களை இலேசாக சுருக்கி கொள்வார். அன்றும் அப்படித்தான் கேட்டுக் கொண்டிருந்தார். எல்லோரும் அபிப்பிராயம் சொல்லி முடிய, மிக தீர்மானகரமாக சொன்னார் "இந்தியாவுடன் நாம் போரிடப் போகிறோம். இந்தியாவுடன் நம்மால் போரிட முடியாதென நினைப்பவர்கள் யாரும் அமைப்பிலிருந்து ஒதுங்கிக்கொள்ளலாம். அதற்கு எந்த தடையுமில்லை" என.

இதற்குள் 9ம் திகதி இரவு லங்காபுவத் செய்தி, நிலைமையின் தீவிரத்தை மக்களிற்கு புரிய வைத்தது. புலிகளை நிராயுதபாணியாக்கும் படைநடவடிக்கையை இந்தியா ஆரம்பிப்பதாகவும், பிரபாகரனின் தலைக்கு ஒரு மில்லியன் ரூபா நிர்ணயித்துள்ளதாகவும் செய்தி வெளியிட்டது.

அண்மையில் பாகிஸ்தான் எல்லைக்குள் நுழைந்து "சேர்ஜிகல் ஒப்ரேசன்" என்ற பெயரில் ஒரு படைநடவடிக்கை செய்திருந்தது நினைவிருக்கலாம். பிரச்சனைக்குரிய பகுதியை அழிப்பதே இந்தியர்களின் உத்தி. விடுதலைப்புலிகளின் தலைமையை அழித்தால், பிரச்சனையை தீர்த்து விடலாமென இந்தியர்கள் நினைத்தார்கள். அப்பொழுது பிரபாகரன் கொக்குவில் பிரம்படி வீதியில் இருப்பதாக இந்திய புலனாய்வாளர்கள் தகவல் திரட்டியிருந்தனர்.

குமரப்பா புலேந்திரன் விவகாரம் சிக்கலாகுவதற்கு முன்னரே பிரபாகரனின் இருப்பிடத்தை அறிந்து, அவரை கொல்லும் திட்டத்தை வகுத்து, ஒத்திகையும் பார்த்துவிட்டனர் இந்திய படைகள். 09ம் திகதி 100 பேரை கொண்ட சீக்கிய காலாட்படை பிரிவொன்று இரகசிய நகர்வை மேற்கொண்டு திருநெல்வேலி சந்திக்கு அண்மையாக வந்தனர். பிரம்படி வீதி பற்றி மக்களிடம் விசாரித்து விட்டு சென்றனர்.

ஒக்ரோபர் 12ம் திகதி. அதிகாலை 12 மணிக்கு பரா கொமாண்டோக்கள் தரையிறக்கப்பட்டார்கள். அவர்கள் தரையிறங்கி, பிரபாகரனை பிடித்து வரும்வரை மருத்துவபீட பிரதேசத்தை கட்டுப்படுத்தும் பொறுப்பு 13வது சீக்கிய ரெஜிமென்டிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. இந்த திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர், திபெந்தர் சிங் பலாலியில் இந்தியப்படையினர் மத்தியில் உரையாற்றியபோது, இரண்டு நாளில் புலிகளை அழித்து விட வேண்டுமென உத்தரவிட்டிருந்தார்.

திருநெல்வேலி வீதியும், பிறவுண் வீதியும் இணையும் சந்திக்கு அருகில் உள்ள கிராமசபைக்கு எதிரில் உள்ள பொட்டல்வெளியில் கொமாண்டோக்கள் தரையிறக்கப்பட்டார்கள். அவர்கள் புலிகளின் கடுமையான எதிர்ப்பை சந்தித்தனர். இதனால் முழுமையான தரையிறக்கத்தை இந்தியர்களால் செய்ய முடியவில்லை. அங்கு மோதல்கள்




தொடர்ச்சி அடுத்தபக்கம்...

# பொதுச் சட்டத்தில் இலங்கையில் மகவேற்பு

ரமணன் llb

மகவேற்பு (தத்தெடுத்தல்) என்பது பெற்றோர் பிள்ளை ஆகியோருக் கிடையில் உயிரியல் ரீதியாக அல்லது செயற்கை பொறிமுறையின் மூலம் உருவாக்கப்படுகின்ற உறவுமுறை ஆகும். ஆரம்பத்தில் மகவேற்புத் தொடர்பான பொதுச்சட்ட ஏற்பாடுகள் காணப்படாத காலப்பகுதியில் உரோமன் டச்சுச் சட்டத்தின் ஏற்பாடுகளே காணப்பட்டது. உரோமன் டச்சுச் சட்டத்தில் பராய மடையாத மற்றும் பராயமடைந்த பிள்ளைகளை மகவேற்பு செய்ய முடியும். 1941ம் ஆண்டு 24ம் இலக்க மகவேற்பு கட்டளைச் சட்டம் கொண்டு வரப்பட்டமையைத் தொடர்ந்து மகவேற்பு தொடர்பான உரோமன் டச்சுச் சட்ட ஏற்பாடுகள் மாற்றப்பட்டு பொதுச்சட்டத்தின் கீழ் இவ் விடயம் கொண்டுவரப்பட்டது.



இச் சட்டத்தின் பிரிவு 17 மகவேற்பு தொடர்பான விடயத்தில் பிள்ளை என்ற பதத்தினை வரைவிலக்கணம் செய்கின்றது. 14 வயதிற்கு குறைந்த எந்தவொருவரையும் பிள்ளை என்று கருதிக் கொள்ள முடியும். இச் சட்டம் 14 வயதிற்கு குறைந்த ஒரு பிள்ளையையே மகவேற்புச் செய்ய அனுமதிக்கின்றது. அதிலும் குறிப்பாகப் பத்து வயதிற்கு மேற்பட்ட பிள்ளை எனில் பிள்ளையின் சம்மதம் கட்டாயம் பெறப்படல் வேண்டும். பத்து வயதிற்கு மேற்பட்ட மகவேற்கப்படுகின்ற பிள்ளை யின் சம்மதம் இருப்பினும் குறித்த மகவேற்பு பிள்ளையின் நலனைப் பாதிக்குமாயின் மகவேற்பு கட்டளை வழங்கப்படமாட்டாது. பிரிவு 3(3) ன் படி பத்து வயதிற்கு குறைந்த பிள்ளை எனில் பெற்றோர் பாதுகாவலர் அல்லது பிள்ளையின் கட்டுக்காவலை வைத்திருக்கின்ற நபர் அல்லது பிள்ளையின் வாழ்வாதாரத்திற்கு பங்களிப்புச் செய்யக் கூடிய நபரின் சம்மதம் பெறப்படல் வேண்டும். இருப்பினும் பின்வரும் சந்தர்ப்பங்களில் சம்மதம் அவசியமில்லை.

1. பிள்ளை கைவிடப்பட்டுள்ள போது
2. பாதுகாவலரை கண்டுபிடிக்க முடியாத போது
3. பாதுகாவலர் மனநிலை பாதிக்கப்பட் டவர் என நீதிமன்றம் தீர்மானிக்கும் போது
4. பிள்ளைக்கு பராமரிப்பு வழங்க வேண்டிய நபர் வேண்டுமென்றே பராமரிப்பை மறுக்கும் போது
5. நீதிமன்றம் சம்மதம் தேவையில்லை என கருதும் போது

மகவேற்புக் கட்டளையினை வழங்கும் நியாயாதிக்கம் குடும்ப நீதிமன்றம் என்ற வகையில் மாவட்ட நீதிமன்றத்துக்கு காணப்படும். மகவேற்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2(1) ன் படி மகவேற்க விரும்பும் 25 வயதிற்கு மேலுள்ள எத்தகைய ஒரு நபரும் நீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்றை மேற்கொள்வதன் மூலம் பிள்ளை ஒன்றை மகவேற்;க முடியும். இருப்பினும் மகவேற்கின்ற பெற்றோருக்கும் மகவேற்கப்படுகின்ற பிள்ளைக்கும் இடையில் வயது வேறுபாடு 21 வருடங்களுக்குக் குறைவாகக் காணப்படக் கூடாது என்பதுடன் மகவேற்;கப்பட்ட பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் திருமணம் தடுக்கப்பட்டுள்ளதுடன் அவர் களுக்கிடையிலான பாலியல் உறவு குற்றவியல் குற்றமாகும்.

இருப்பினும் பின்வரும் சந்தர்ப்பங்களில் மகவேற்கின்ற பெற்றோருக்கும் மகவேற் கப்படுகின்ற பிள்ளைக்கும் இடையில் வயது வேறுபாடு பார்க்கப்பட மாட்டாது

1) மகவேற்கப்படுகின்ற பிள்ளை விண்ணப்பதாரிக்கு நேரடி பின் சந்ததி வழியாக உள்ள போது
2) மகவேற்கப்படுகின்ற பிள்ளை விண்ணப்பதாரியின் முழு அல்லது பாதி இரத்த வழி சகோதரர் அல்லது அவர்களின் பின் சந்ததியாக காணப்படும் போது
3) விண்ணப்பதாரியின் வேறோரு திருமணத்தின் மூலமான பிள்ளையாக இருக்கின்ற போது

இருப்பினும் விண்ணப்பதாரி ஆணா கவும் மகவேற்கப்படுகின்ற பிள்ளை பெண்ணாகவும் இருப்பின் மகவேற்புக் கட்டளை வழங்கப்பட மாட்டாது.

திருமணமான நபர் ஒருவர் பிள்ளையை மகவேற்பதாயின் வாழ்க்கைத் துணையின் சம்மதத்தினைப் பெறவேண்டும். மேலும் இணைந்த மகவேற்புக் கட்டளைக்கு விண்ணப்பிப்பவர்கள் சட்டரீதியான திருமணம் முடித்துள்ள சந்தர்ப்பத்தில் மட்டுமே இதற்கு விண்ணப்பிக்க முடியும். மில்டன் எதிர் பேபிநோநா என்ற வழக்கில் நீதிமன்றினால் வழங்கப் பட்ட மகவேற்புக் கட்டளை குறிப்பிட்ட பெற்றோருக்கிடையில் திருமணம் வெற்று வெறிதானது எனக் கூறப்பட்டபோது குறித்த மகவேற்புக் கட்டளையும் செல்லு படியற்றது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இச் சட்டத்தின் பிரிவு 8ன் படி இரண்டு வருடங்களுக்கு மேல் பிள்ளையின் பாதுகாவலை ஒருவர் வைத்திருப்பின் அவருக்கு நீதிமன்றம் பொருத்தமான தேவைப்பாடுகள் அனைத்தும் காணப்படும் போது மகவேற்புக் கட்டளையினை வழங்கும்.

இச் சட்டத்தில் 1979ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட திருத்தத்தினைத் தொடர்ந்து வெளிநாட்டவரும் இலங்கையில் பிள்ளைகளை மகவேற்புச் செய்ய முடியும். இவர்களுக்கு மகவேற்புக் கட்ட ளையை வழங்கும் முன்னர் நீதிமன்றம் பிள்ளை நலன்புரிசேவை ஆணை யாளரின் அறிக்கையினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன் பாது காவலரின் சம்மதம் உரியமுறையில் பெறப் பட்டுள்ளதா, குறிப்பிட்ட மகவேற்பு பிள்ளையின் நலனுக்காக மேற்கொள்ளப் படுகின்றதா, குறித்த மகவேற்புக்காக விண்ணப்பதாரியிடம் யாராவது நபர்கள் 'ஏதாவது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்களா என்பதை உன்னிப்பாக அவதானிக்க வேண்டும்.

மேலும் குறிப்பிட்ட விண்ணப்பதாரி வசித்து வருகின்ற நாட்டில் அங்கீகரிக் கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து குறிப்பிட்ட விண்ணப்பதாரியுடைய மனநிலை, சமூக மதச்சார்பான பின்னணி, நிதி நிலமை, மகவேற்புக்கு பொருத்தமான தன்மை என்பன பற்றிய அறிக்கை மற்றும் குறித்த விண்ணப்பதாரி வசிக்கும் பிரதேச பொலிஸ் நிலையத்திலிருந்து அவரின் நடத்தை தொடர்பான அறிக்கை ஆகியன குறித்த நாட்டிலுள்ள இலங்கை குடியரசின் உத்தரவு பெற்ற பிரதிநிதியினால் அத்தாட்சிப்படுத்தப் பட்டு சமர்பிக்கப்படல் வேண்டும். இதற்கு மேலதிகமாகத் தேவைப்படின் நீதிமன்றம் விண்ணப்பதாரியை ஒரு பிணை உடன்படிக்கை செய்யவும் கோர முடியும்.

குறித்த மகவேற்பு விடயத்தில் கட்டளை வழங்க நீதிமன்றத்தினால் காலதாமதம் ஏற்படும் போது நீதிமன்றம் இரண்டு வருட காலப்பகுதிக்கு விண்ணப்பதாரிக்கு பாதுகாவலை வழங்கும் தற்;காலிக கட்டளையை விண்ணப்பதாரிக்கு வழங்கும். நீதிமன்றத்தால் மகவேற்பு கட்டளை வழங்கப்பட்ட பின்னர் அதன் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படும். மகவேற்பு மூலம் பெறப்பட்ட பிள்ளை சட்டரீதியான திருமணம் மூலம் பிறந்த பிள்ளைக்குரிய அந்தஸ்தைப் பெறு கின்றது. ●

---

நடந்து கொண்டிருக்க, திருநெல்வேலி மருத்துவபீடத்தில் சீக்கிய ரெஜி மென்டை இரகசியமாக தரையிறக்க திட்டமிடப்பட்டிருந்தது. பரா ரெஜிமென்டுடன் மோதிக்கொண்டி ருக்கும் புலிகளின் பிடரியில் அதிர்ச்சி அடி கொடுக்கதே இவர்களின் நோக்கம்.

ஆனால், பல்கலைகழகத்தில் ஒரு தரையிறக்கத்தை புலிகள் எதிர்பார்த் திருந்தனர். பொட்டம்மான் தலைமையில் ஒரு அணி அங்கு நிலையெடுத்து, தரையிறங்கிய இந்தியர்களை குருவி சுடுவதை போல சுட்டு வீழ்த்திக் கொண்டிருந்தனர். இந்த திட்டத்தை தலைமை தாங்கிய மேஜர் பீரேந்திர சிங், தொலைத்தொடர்பு இயக்குனர் ஆகியோரும் கொல்லப்பட்டனர்.

கும் இருட்டுக்குள் நடந்த இந்த முரட்டி அடியில் இந்தியர்களின் சித்தம் கலங்கிவிட்டது. களத்தில் இருந்தவர்களிற்கும் என்ன நடக்கிறதென தெரியவில்லை, பலாலியில் இருந்து வழிநடத்தியவர்களிற்கும் ஒன்றும் புரியவில்லை. பல்கலைகழகத்தில் தரையிறங்கிய 30 இந்திய சிப்பாய்களில் 29 பேர் கொல்லப்பட, ஒருவர் புலிகளிடம் சிக்கினார். 8 பராக்கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர்.

பரா கொமாண்டோக்கள் விடிந்த பின்னர், அந்த பகுதியில் இருந்த ராஜா, அவரது மருமகன் குலேந்திரன் ஆகியோரை பிடித்து பிரபாகரனின் இருப்பிடத்தை காட்டுமாறு கட்டளையிட்டுள்ளனர். இந்த சம்பவம் பற்றி பின்னாளில் தமது அனுபவங்களை எழுதிய லெப்.ஜெனரல் திபெந்தர் சிங், எம்.ஆர்.நாராயணசாமி போன்றவர்கள் புதிய கதையொன்றை அவிழ்த்து விட்டுள்ளனர். பிரபாகரனின் இருப்பிடத்தை காண்பிக்க அழைத்து செல்லப்பட்ட பொதுமக்கள் இருவரும் பிழையான வழியை காண்பித்ததாலேயே பிரபாகரனின் இருப்பிடத்தை அடைய முடியாமல் போனதாக சப்பைகட்டு கட்டியிருந்தார்கள். உண்மை என்ன வென்றால், இந்த சம்பவங்கள் நடப்பதற்கு முன்னரே பிரபாகரன் வடமராட்சிக்கு சென்றுவிட்டார். வடமராட்சி, தென் மராட்சியில் போராளிகளை சந்தித்து விட்டு, முல்லைத்தீவு செல்வது அவரது திட்டம்.

ஓப்ரேஷன் பவான் என பெயரிட்டு நடத்தப்பட்ட இந்த நடவடிக்கை அதன் பின்னரும் சிலநாட்கள் நீடித்தது. இதில் ஏராளம் பொதுமக்கள் கொல்லப் பட்டனர். அப்பொழுது இந்தியப் படைகள் ஆடிய மிருகவெறியாட்டம் வர்ணிக்க முடியாதது. புலிகளின் முற்றுகைக்குள் சிக்கிய பரா துருப்புக்களை மீட்க காங்கேசன்துறையில் இருந்து டாங்கிகளில் புறப்பட்டு, புலிகள் எதிர்பார்த்த பிரதான வீதியை தவிர்த்து, புகையிரத தண்டவாளத்திற்கு பக்கத்தால் வந்து பிரம்படி வீதிக்கு வந்து சேர்ந்தனர். பின்னர் பிரம்படியில் மக்களை டாங்கியால் ஏற்றியும் கொன்றனர்.

அமைதிப்படையாக வந்த இந்தியப் படையின் நிஜ முகம் புலிகளுடனான யுத்தம் தொடங்கிய முதலாவது நாளிலேயே தெரிந்தது. இந்த கறுப்பு ஒக்ரோபர் சம்பவங்களே பின்னாளில் பெரும் அழிவுகளையும், உயிரிழப்புக்களையும் நிகழ்த்தியுள்ளது.

இதில் இன்னொரு நகைமுரணும் உள்ளது. வடக்கு கிழக்கில் இவ்வளவு அழிவுகளை செய்த இந்தியப்படைகளிற்கு நினைவுத்தூபியமைக்க முயற்சி நடக்கிறதே தவிர, இந்தியப்படைகளால் கொல்லப்பட்ட தமிழர்களிற்கு நினைவுத்தூபி பற்றி யாரும் வாய் திறக்கவில்லை. இதுதான் இன்றைய தமிழர் அரசியல். இந்தியர்களும் வரலாற்றிற்கு வெள்ளையடித்து விட்டு, அகிம்சை விழா எடுக்கிறார்கள். நம்மவர்களும் அதில் பாடம் படிக்க முண்டியடிக்கிறார்கள். ●



# சிக்கன பட்ஜெட்டில் மட்டக்களப்பில் ஜாலி ட்ரிப்!

திலெக்ஸ்

விடுமுறை காலங்களில் இழுத்து போர்த்துக்கொண்டு, உச்சிவெயில் உடம்பில்படும் வரை நித்திரை கொள்வதுதான் தமிழனின் தனிக்குணமே. இந்த இயல்பை மாற்றி, அழகு கொட்டிக்கிடக்கும் இந்த உலகத்தை கொஞ்சம் சுற்றிப் பார்க்கலாமே?

சிறிய பட்ஜெட்டில் நிறைவான சுற்றுலா செல்வதற்கு மட்டக்களப்பை உங்களிற்கு பரிந்துரைக்கிறோம். மட்டக்களப்பு கோட்டை, மட்டக்களப்பு வாசல் மற்றும் வெளிச்சவீடு காணப்படுகின்றது. அதேபோன்று பிரசித்திபெற்ற கோவில்களாக மாமங்க பிள்ளையார் ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீச்சரம், மண்டூர் முருகன் ஆலயம், தாந்தாமலை முருகன் ஆலயம் போன்றனவும், பாசிக்குடா கடற்கரை மற்றும் கல்லடி கடற்கரை ஆகியனவும் காணப்படுகின்றது.







மட்டக்களப்பு கோட்டை 1628ம் ஆண்டு போர்த்துக்கீசர்களால் கட்டப்பட்டது. இந்த கோட்டையை பின்னர் வந்த ஆட்சியாளர்கள் கைப்பற்றி புனர்நிர்மானம் செய்ததாக கூறப்படுகின்றது. தற்பொழுது இந்த கோட்டையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் (கச்சேரி) இயங்குகின்றது. இதனை இரண்டு பக்கங்களால் மட்டுவாவி சூழ்ந்துள்ளது.

வெளிச்சவீடு 28 மீற்றர் உயரமானது. 1913ம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. இது மட்டக்களப்பு வாவியும், கடலும் சங்கமமாகின்ற முகத்துவாரத்துக்கு அண்மையில் உள்ளது. இதில் இருந்து படகுச்சவாரி மூலம் மட்டக்களப்பு வாவியினூடாக கல்லடி பாலத்தின் கீழாக கோட்டை வரைக்கும் வரலாம். வெளிச்ச வீட்டுக்கு அருகாமையில் சிறியதீவு ஒன்று உள்ளது. படகுசவாரி செய்பவர்கள் இங்கு ஓய்வெடுத்து கொள்ளலாம். படகுச் சவாரி கட்டணம் 3,500 ரூபா.

புழமையான கல்லடிப் பாலம் 1924ம் ஆண்டு ஆங்கிலேயரால் கட்டப்பட்டது. மட்டக்களப்பின் இரு கரைகளையும் இணைக்கின்ற பாலமாக அமைந்துள்ளது. இது 'லேடி மனிங்' (LADY MANNING) என ஆங்கிலேயரால் அழைக்கப்பட்டது. இதன் அருகாமையில் 2013ம் ஆண்டு புதிய பாலம் அமைக்கப்பட்டதன் பின்னர் இதனூடான பிரதான போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டுள்ளது. பழைய பயன்படுத்துகிறார்கள். இதனை LOVE BRIDGE என செல்லப்பெயர் கொண்டும் அழைப்பார்கள். காரணம் காதல் ஜோடிகள் பலர் இதில் இருந்து குதித்து தற்கொலை செய்த சம்பவங்கள் பல பதிவாகியுள்ளன.

மட்டக்களப்பு வாசல் (BATTICALOA GATE) காந்தி பூங்காவினுள் அமைந்துள்ளது. மட்டக்களப்புக்கு வந்த ஆங்கிலேயரான வில்லியம் ஓல்ட் என்பவர் இந்த இடத்தில்தான் கரைசேர்ந்தார். ஆகவே இதுதான் மட்டக்களப்பின் வாசலாக கருதினார். பின்னர் சிறிய படகுகளில் வருகின்ற சரக்குகளை இந்த இடத்தில் வைத்துதான் கரை சேர்த்துள்ளனர். அங்குள்ள துறைமுகத்தில் பாரம் தூக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட அமைப் பொன்று இப்பொழுதும் உள்ளது. சூரிய

தொடர்ச்சி அடுத்தபக்கம்...







# நரிக்குறவர்கள் அன்பு


ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** மீது ரசிகர்களும் அடித்தட்டு மக்களும் தங்கள் உயிரையே வைத்திருந்தனர். இது ஏதோ கண்மூடித்தனமான பக்தியால் திடீரென ஒரே நாளில் ஏற்பட்டது அல்ல. அந்த அளவுக்கு ரசிகர்களையும் சாதாரண மக்களையும் எம்.ஜி.ஆர் நேசித்தார். சில நேரங்களில் அவர்கள் தன்னிடம் வரம்பு மீறி நடந்து கொண்டாலும் அதை அவர்களின் அன்பின் வெளிப்பாடாகவே எடுத்துக் கொள்வார்.

எம்.ஜி.ஆர் நடித்த 'இதயக்கனி' படத்தின் கிளைமாக்ஸ் காட்சிகள் சிதம்பரம் அருகே உள்ள பிச்சாவரம் முகத் துவார பகுதியில் எடுக்கப்பட்டன. அதுவரை எந்தப் படங்களிலும் இடம்பெறாத அபூர்வ லொகேஷன் அது. அதேநேரம், மனித நடமாட்டத்தை அதிகம் பார்க்க முடியாத, மீனவர்களேகூட அப்போது போக அஞ்சிய இடம். எம்.ஜி.ஆர் வந்திருப்பதை அறிந்து அங்கும் மக்கள் வந்துவிட்டனர்.

அந்தக் காட்சியில் எம்.ஜி.ஆர் மாறு வேடத்தில் இருப்பார். படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தபோது, இரண்டு இளைஞர்கள் எம்.ஜி.ஆரை காண வேண்டும் என்ற ஆவலில் தண்ணீரில் குதித்து நீந்தி அவர் இருந்த இடத்துக்கு வந்துவிட்டனர். அந்த இளைஞர்களை அழைத்த எம்.ஜி.ஆர், அவர்களிடம் நலம் விசாரித்தார். அப்போது, ஒரு இளைஞர் எதிர்பாராமல் எம்.ஜி.ஆரை கட்டிக்கொண்டு முத்தமிட்டார். கொஞ்சம் கூட முகம் சுளிக்காமல் அந்த இளைஞரின் அன்பை எம்.ஜி.ஆர் ஏற்றுக்கொண்டார்.

அந்தப் புகைப்படம்தான் எத்தனை உணர்வுகளை வெளிப்படுத்துகிறது! எம்.ஜி.ஆரை முத்தமிடும் இளைஞரின் முகமே தெரியவில்லை. அந்த அளவுக்கு அன்பின் வெளிப்பாடாய் ஆழமாக தன் முத்தத்தை பதிக்கிறார். அருகில் நிற்கும் இளைஞர் எம்.ஜி.ஆரைப் பார்த்த பரவசத்தில் கும்பிட்ட கையை கீழிறக்காமல் சிரித்தபடி அவரை பார்த்துக் கொண்டே நிற்கிறார். நீரில் நீந்தி வந்ததன் அடையாளமாக அவர் அணிந்துள்ள டிராயர் தண்ணீரில் நனைந்து உடலோடு ஒட்டியுள்ளது. முத்தமிடும் ரசிகரை அணைத்தபடி அவரது அன்பு மழையில் திளைக்கும் எம்.ஜி.ஆரின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவம். அன்பு மனங்களின் சந்திப்பு, சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டுமின்றி; பார்ப்பவர்களுக்கும் உற்சாகத்தை ஏற்படுத்தும்.



நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக எழுப்பப்பட்ட கோரிக்கைகளைத் தொடர்ந்து சமீபத்தில்தான், நரிக்குறவர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. நரிக்குறவர் இன மக்கள் மீது எம்.ஜி.ஆர் மிகுந்த அன்பு கொண்டவர். 'ஒளி விளக்கு' படத்தில் 'நாங்க புதுசா கட்டிக்கிட்ட ஜோடி தானுங்கஞ்' பாடலில் எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் நரிக்குறவர்கள் வேடத்தில் ஆடிப் பாடுவர்.

ஏராளமான நரிக்குறவர்கள் எம்.ஜி.ஆரை காண, அவரது ராமாவரம் தோட்டத்துக்கு வந்தனர். எம்.ஜி.ஆரை கண்டதும் உற்சாகக் கூச்சலிட்டனர். அவர்களை அருகே வருமாறு அழைத்த எம்.ஜி.ஆர், கூட்டத்தில் இருந்த ஒவ்வொருவருக்கும் பணம் கொடுத்தார். அவற்றைப் பெற்றுக் கொண்டவர்கள், அவர் எவ்வளவோ தடுத்தும் அவரது காலில் விழுந்து வணங்கினர்.

நரிக்குறவர் இன மக்களை எந்தவித பேதமும் இல்லாமல் எம்.ஜி.ஆர் கட்டியணைத்து வாழ்த்து தெரிவித்தார். அவர்களது குழந்தைகளை வாங்கிக் கொஞ்சினார். சமூகத்தில் அடித்தளத்தில் இருக்கும் தங்கள் மீது அவர் காட்டிய பாசத்தையும் அன்பையும் பார்த்து வந்தவர்கள் கண்கலங்கினர்.

வயதில் மூத்த நரிக்குறவர் ஒருவர், எம்.ஜி.ஆர், அவர்களிடம் விசாரித்தார். முதல்நாள் அவரை முத்தமிட்ட அந்த நரிக் குறவர், "உங்க தயவால என் சபதம் நிறைவேறிடுச்சு சாமி" என்றார். "என்ன சபதம்?" என்று எம்.ஜி.ஆர் கேட்டதற்கு, "உங் களை யாரும் தொடமுடியாதுன்னு எங்க கூட்டத்தினர் சொன்னாங்க. அவர்களிடம் உங்களை முத்தமிட்டு காட்டுறேன்னு சபதம் செய்தேன். ஜெயிச்சுட்டேன். என்னை மன்னிச்சுடுங்க சாமி" என்று கூறினார்.

அதைக் கேட்டு சிரித்த எம்.ஜி.ஆர், "பரவாயில்லை. இனிமேல் இதுபோன்று வேறு யாரையும் முத்தமிடுவதாக சபதம் செய்யாதே. வம்பா போயிடும்" என்று சொல்லி, பணியாளர்களை அழைத்து, வந்திருந்த அனைவருக்கும் சாப்பாடு போடச் சொல்லிவிட்டு படப்பிடிப்புக்கு புறப்பட்டார்.




அந்தப் பாடலின்போது நடனத்தில் எம்.ஜி.ஆர் கலக்கியிருப்பார். தியேட்டரில் ஆடாதவர்கள் குறைவு. அந்தப் பாடல் காட்சியில் நடிப்பதற்காக நரிக்குறவர் இன மக்களை வரவழைத்து, அவர்களை ஆடச் சொல்லி கவனித்து எம்.ஜி.ஆர் பயிற்சி எடுத்துக் கொண்டார். 'நவரத்தினம்' படத்தில் 'குருவிக்கார மச்சானேஞ்' பாடல் காட்சியிலும் எம்.ஜி.ஆரின் மூவ்மென்ட்ஸ் அற்புதமாக இருக்கும்.

எம்.ஜி.ஆர் கொண்டாடிய ஒரே பண்டிகை தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை. அன்றைய தினம், கட்டுக் கட்டாக பணத்தை வைத்துக் கொண்டு, தன்னைக் காண வருவோருக்கெல்லாம் கைக்கு வரும் பணத்தைக் கொடுத்து மகிழ்வார். ஒருமுறை பொங்கல் நாளில் வெற்றிலை போட்ட வாயுடன் எம்.ஜி.ஆரை கட்டியணைத்து முத்தமிட்டார். அவரது உதடுகளின் அடையாளம் எம்.ஜி.ஆரின் கன்னத்தில் பதிந்துவிட்டது. இதை எதிர்பாராத எம்.ஜி.ஆரின் உதவியாளர்கள் வேகமாகப் பாய்ந்து அவரை விலக்க முற்பட்டனர். அவர்களைத் தடுத்த எம்.ஜி.ஆர் சிரித்துக் கொண்டே, "விடுங்கப்பா, அவங்க அன்பை இப்படிக் காட்டுறாங்க. இதில் தவறு ஒன்றுமில்லை" என்று சாதாரணமாகக் கூறினார். இதன் தொடர்ச்சியாக மறுநாள் நடந்ததுதான் வேடிக்கை.

முதல்நாள் எம்.ஜி.ஆரை பார்த்துவிட்டுச் சென்ற நரிக்குறவ சமூக மக்கள் மறுநாளும் கூட்டமாக வந்துவிட்டனர். படப்பிடிப்புக்கு கிளம்பிக் கொண்டிருந்த

மேற்கண்ட இரண்டு நிகழ்ச்சிகளின் போதும் எம்.ஜி.ஆர் முதல்வராகவில்லை. தமிழ்த் திரையுலகின் நம்பர் ஒன் 'ஹீரோ'வாக இருந்தார். என்றாலும் புகழ்மிக்க ஒரு நடிகரிடம் ரசிகர்களும் மக்களும் இந்த அளவுக்கு உரிமை எடுத்துக் கொள்ள முடியுமா? முதல்வரான பிறகும் அவரது இந்த எளிமையாக பழகும் குணம் மாறவில்லை என்பதுதான் எம்.ஜி.ஆரின் தனிச்சிறப்பு.

'சிரித்து வாழ வேண்டும்' படத்தில் எம்.ஜி.ஆர் பாடி நடிக்கும் பாடல் இது:

'உலகமெனும் நாடக மேடையில்
நானொரு நடிகன்;
உரிமையுடன் வாழ்ந்திடும் வாழ்க்கையில்
உங்களில் ஒருவன்!'

**தொடரும்...**

---

அஸ்தமனத்தை முழுமையாக ரசிப்பதற்கு மிகச்சிறந்த இடங்களில் ஒன்று.

மட்டக்களப்பில் பழமையான, பிரசித்தி பெற்ற பல இந்து ஆலயங்கள் உள்ளன. இவற்றுடன் தொடர்பான கர்ண பரம்பரைக் கதைகளும் பல உள்ளன. இவ்வாறான ஒரு ஆலயம் தான் மாமங்க பிள்ளையார் ஆலயம். இராமாயணக் கதையுடன் தொடர்புபட்ட ஆலயம். இங்குள்ள தீர்த்தக்குளம் பற்றிய பல கதைகள் உள்ளன. இராமபிரான் மண்ணினால் செய்த லிங்கத்திற்கு பூசை செய்வதற்காக தனது அம்மை ஊன்றி நீர் பெற்ற இடம், அனுமனின் வாலில் வைத்த தீயினை இந்த குளத்தில் வந்து அணைத்து சென்றதாகவும், ஆட்சி செய்த ஆடகசௌந்தரியின் குறை தீர்த்த இடமெனவும் கர்ணபரம்பரை கதைகள் உள்ளன. பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான கொக்கட்டிச்சோலை படுவான்கரையில் அமைந்துள்ளது.

மட்டக்களப்பின் மிக நீளமான அழகிய கடற்கரையாக கல்லடி விளங்குகின்றது. இங்கு விடுமுறை தினங்களிலும், போயா தினங்களிலும் அதிகளவிலான பயணிகள் வருவதை காணலாம். போயா தினங்களில் சந்திரனின் எழுகையை பார்வையிட மிக பொருத்தமான இடம் இது.

உலகளவில் மட்டக்களப்பிற்கு அடையாளம் கொடுத்த சுற்றுலா கடற்கரை பாசிக்குடா. இந்த கடற்கரையில் அலைகளே கிடையாதென்பதே சிறப்பு. உள்நாடு, வெளிநாட்டில் இருந்து எல்லாகாலத்திலும் பெருமளவான சுற்றுலா பயணிகள் இங்கு குவிகிறார்கள். படகு சவாரிக்கும் பெயர் பெற்ற இடம்.

அதிகளவான சுற்றுலா விடுதிகள் இங்கு அமைந்துள்ளன. பாசிக்குடா என்றதும், அதிக செலவாகுமென மிரள்பவர்கள்தான் அனேகர். உண்மையில் சிக்கன பட்ஜெட்டில் பாசிக்குடா வந்து செல்லலாம். பாசிக்குடாவில் 2,500 ரூபாவிலிருந்து அறைகள் பெறலாம். பாசிக்குடாவிற்கு வெளியில் 1,000 ரூபாவிற்கு குறைவாக அறைகள் பெறலாம். வெளியில் தங்கியிருந்துவிட்டு, பாசிக்குடாவை வந்து பார்த்துவிட்டு செல்லலாம்.

அண்மைக்காலத்தில் பெருமளவு பயணிகள் உன்னிச்சைகுளத்திற்கு வருகிறார்கள். அனேகமாக உள்நாட்டிலிருந்து தான் இங்கு வருகிறார்கள். குளக்கரையில் சமைத்து உண்டுவிட்டு செல்பவர்களும் உள்ளனர். நன்னீர் மீன்களை மலிவாக இங்கு வாங்கலாம். செங்கலடி சந்தியில் இருந்து 11 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கரடியனாறு சந்திக்கு சென்று, அங்கிருந்து 14 கிலோமீற்றர் சென்றால் உன்னிச்சைகுளம் வரும். மட்டு நகருக்கும் செங்கலடிக்குமான தூரம் 16 கிலோமீற்றர்களாகும். நீண்டநேரத்தை அறுதலாக செலவிட பொருத்தமான இடம்.

மட்டக்களப்பு நகரில் சுற்றுலா தகவல் மையம் அமைந்துள்ளது. சந்தேகங்களை தீர்த்துகொள்வதுடன், வாகனங்களையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம். சைக்கிள், மோட்டார் சைக்கிள், வான் என்பன இங்குள்ளன. சைக்கிள 600 ரூபா, மோட்டார்சைக்கிள் 2, 000 ரூபா நாளாந்த வாடகை அறவிடப்படுகிறது. மட்டக்களப்பு நகருக்குள் இடங்களை சுற்றிக்காட்ட வானுக்கு 3,000 ரூபா அறவிடப்படுகிறது.

## பொதுஅறிவு

உலகின் மிகப்பெரிய நாடு எது?
**ரஷ்யா**

உலகின் மிகச்சிறிய நாடு எது?
**வத்திக்கான்**

உலகின் மிகப்பெரிய வளைகுடா எது?
**மெக்சிக்கோ வளைகுடா**


உலகின் மிகப்பெரிய வளைகுடா எது?
**வங்காள வளைகுடா**
(Bay of Bengal)

உலகின் மிகப்பெரிய தீவு எது?
**கிரீன்லாந்து** (Green Land)

## கணக்கு புதிர் 3

1. 2 = 2
   3 = 6
   4 = 12
   5 = 20
   6 = 30
   8 =?

2. படத்தில் எத்தனை முக்கோணங்கள் உள்ளன?



**கடந்தவார விடைகள்**
1. 400
2. 12

## சிந்தனை துளிகள்

அழகை பற்றி கனவு காணாதீர்கள், அது உங்கள் கடமையை பாழாக்கிவிடும். கடமையை பற்றி கனவு காணுங்கள் அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்.
- அப்துல் கலாம்.

நல்ல முடிவுகள் அனுபவத்திலிருந்து பிறக்கின்றன. ஆனால் அனுபவமோ தவறான முடிவுகளில் இருந்து கிடைக்கின்றது - பில்கேட்ஸ்.


## இலங்கை பற்றிய பொது அறிவுகள்

1. இலங்கையின் மிக நீளமான ஆறு - மகாவலிகங்கை 335 கிலோமீட்டர்
2. இலங்கையின் மிக உயர்ந்த மலை - பீதுறுதாலகால மலை கடல்மட்டத்திலிருந்து 2524 மீட்டர்.
3. இலங்கையின் பெரிய நீர்வீழ்ச்சி - பம்பரகந்த
4. இலங்கை எத்தனை மாகாணங்களாக பிரிக்கப் பட்டுள்ளது - 9 மாகாணங்கள்
5. இலங்கையில் எத்தனை தேர்தல் மாவட்டங்கள் உள்ளது - 22 தேர்தல் மாவட்டங்கள்.

## உலகப் பொது அறிவுகள்

1. உலகின் மிகப் பெரிய நாடு - ரஷ்யா
2. உலகின் மிகச் சிறிய நாடு - வத்திக்கான்
3. உலகின் மிகப் பெரிய வளைகுடா - மெக்சிக்கோ வளைகுடா
4. உலகின் மிகச் சிறிய வளைகுடா - வங்காள விரிகுடா
5. உலகின் மிகப் பெரிய தீவு - கீரீன்லாந்து.

மாணவர் பூங்கா



# எங்கு பார்த்தாலும் மின்காந்த அலைகள்

## (Electro magnetic Waves)

நம்மைச் சுற்றி எவ்வளவோ நடைபெறுகின்றது. சிலவிஷயங்கள் நமது கண்களுக்குத் தெரிந்தும்நமதுவாழ்க்கைக்கு உபயோகமானவைஇல்லை,ஆனால்வேறுசில விஷயங்கள் நமது கண்களுக்குத்தெரியாமலே நமது அன்றாட வாழ்க்கைக்கு மிகவும் உபயோகமாக இருக்கின்றன. அப்படி ஒன்றானதுதான் electro magnetic waves என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் மின்காந்த அலைகளும் கூட. இந்த மின்காந்த அலைகள் நம்மைச் சுற்றி எப்போதுமே இருக்கின்றன. உண்மை சொல்லப்போனால், இந்த அலைகள் இல்லாமல் நமது இன்றைய நவீன உலகமும், வாழ்க்கையும் இருக்கமுடியாது. இவ்வாறுமுக்கிய இந்த அலைகள் பற்றி சிலசுவாரசியமான விஷயங்களை அறியப்போகின்றீர்களா?

வானொலிப்பெட்டி, செல்லிடத் தொலைபேசி (Mobile Phone), WiFi, புவியிடங் காட்டி (GPS Navigation) போன்றபலவற்றை இந்த மின்காந்த அலைகள் இல்லாமல் செயல்படாது. இந்த மின்காந்த அலைகளின் wavelength என்று கூறப்படும் அலை நீளம் பொறுத்து, இவைவெவ்வேறு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அந்தவகைகளில்ஒன்று தான் ஒளி (light). ஒளியைத்தவிர்த்து மேலும் வானொலி அலைகள் (radio waves), நுண்ணலைகள் (micro waves), அகச்சிவப்புக்கதிர்கள் (infrared waves), புறஊதாகதிர்கள் (ultraviolet waves), ஊடுகதிர் அலைகள் (x-ray) மேலும்காமா அலைகள் (gamma waves) என்கிறவகைகள் காணப்படுகின்றன. நமது நவீன உலகில் இந்த அனைத்துவகையான மின்காந்த அலைகளும் ஒவ்வொருவிதமாக உபயோகிக்கப்படுகின்றன. இதற்கு சில உதாரணங்களைத்தருகிறேன்.

வானொலி அலைகள் இருப்பதால்தான் வானொலிப் பெட்டியில் தினமும் பாடல்களைக் கேட்க முடிகின்றது. நுண்ணலைகளின் உதவியுடன் செல்லிடத் தொலைபேசி யூடாகதூரத்தில் இருக்கும் நண்பனுடன் பேசமுடிகின்றது. அகச்சிவப்புக் கதிர்கள் இருப்பதால் தொலைக்கட்டுப்படுத்தி யின் (remote control) உதவியுடன் தொலைக் காட்சிப் பெட்டியில் சேனல்களை மாற்ற முடிகின்றது. புற ஊதாகதிர்கள் மருத்துவத்தில் சில பாக்டீரியாக்களைக் கொல்ல உபயோகிக்கப்படுகின்றது. ஊடு கதிர் அலைகள் உங்களுக்குநன்றாகவே தெரியும். டாக்டரிடம் சென்று எக்ஸ்ரேய் (X-Ray) படம் எடுப்பதற்கு ஊடுகதிர் அலைகள் தேவைப்படுகின்றன. மற்றும் காம்மா அலைகளும் மருத்துவத்தில் சிலவிதமான புற்று நோயைக் குணப்படுத்த உதவுகின்றது.

மின்காந்த அலைகளில் உள்ள விசேஷம் என்ன தெரியுமா? இந்த அலைகள் ஒரு பொருளில்படும் போது, அதன் அலை நீளம் பொறுத்து ஏற்படும் விளைவு மூன்று விதமாக இருக்கக்கூடும். ஒன்று அந்த அலை அந்தப் பொருளில் பட்டுத் தெறிக்கின்றது, இல்லை என்றால் அந்தப் பொருளை ஊடுருவிச் செல்கின்றது அல்லது அவ்வலை உறிஞ்சி எடுக்கப்படுகின்றது. இந்தக் காரணத்தால் தான் உதாரணத்திற்கு ஒளி ஒரு வீட்டுச் சுவரில் பட்டுத் தெறிக்கின்றது, ஆனால் வானொலி அலைகள் அந்தச்சுவரை ஊடுருவிச்செல்கின்றன. அப்படி ஊடுருவிச் செல்வதால் தான் வீட்டுக்கதவும், ஜன்னல்களும் மூடி இருந்தும், நம்மால்வானொலிப் பெட்டியில் பாடல்களைக் கேட்க முடிகின்றது. மேலும்இதே காரணத்தால்தான் நாம் வீட்டில் ஒரு அறைக்குள் இருந்தும் செல்லிடத் தொலைபேசியில் பேச முடிகின்றது.

சரி, கடைசியாகமின்காந்த அலைகள் பற்றி இன்னும் ஒருசுவாரசியமான விஷயம் ஒன்றைக் கூறுகின்றேன். 100 வருடங்களுக்கு முன்பு வானொலிப் பெட்டி கண்டுபிடித்து உபயோகித்தபோது அனுப்பப்பட்ட வானொலிஅலைகள்இன்றுகூடவிண்வெளியில்பறந்துசெல்கின்றன. இதற்கு என்ன அர்த்தம் தெரியுமா, நண்பர்களே? விண்வெளியில் ஏதாவது வேற்றுலக உயிரிகள் (aliens) உள்ளன என்று எடுத்துக் கொள்வோம். அந்த உயிரிகள் நமது பூமியிலிருந்து அனுப்பப்பட்ட அந்த வானொலி அலைகளை தமது வானொலிப் பெட்டியில் பெற்றுக் கொண்டால், அதில் 100 வருடங்களுக்கு முன்பு புவியில் ஒலித்த பாடலைதான் கேட்ப்பார்கல்.

## அறிந்து கொள்வோம்

1) அமெரிக்காவின் ஒரு டொலர் (One Doller) இல் உள்ள இலட்சனை ஒரு முக்கோணியினுள் ஒற்றைக்கண் இருப்பதாகும். இது ஒரு சாதாரண விடயம் போலத்தான் தோன்றும். ஆனால் இதுதான் இரகசியம். ஏனெனில் இலுமினாட்டிகளின் இலட்சனை கூட இதுவே. அமெரிக்காவே இலுமினாட்டிகளை மறைமுகமாக வளர்த்து வருவதாகவும் கூறப்படுகிறது.

2) தற்போதுஉலகின் உயரமான கட்டடம் BurjKhalifa. ஆனால் இதைவிட உயரமான Kingdom Tower என்ற கட்டிடத்தை சவுதி இளவரசர் தன் நாட்டில் உருவாக்கி வருகிறார். இதனை கட்டும் நிறுவனம் Saudi BinLadin Group. இது அமெரிக்காவால் சுடப்பட்டு கொல்லப்பட்ட பின்லேடனின் குடும்ப நிறுவனம். இது உலகிலுள்ள மிகப்பெரிய கட்டுமான நிறுவனங்களில் ஒன்று. இவர்கள் தொழில் அமெரிக்காவிலும் விரிந்துள்ளது.

3) 2014ம் ஆண்டு நியூயோர்க்கிலுள்ள University of Rochester பல்கலைக்கழக விஞ்ஞானிகள் எலிகளின் உடலில் மனித மூளையின் செல்லை (Brain cell) செலுத்தினர். சிறிது நாட்களில் அந்த எலிகள் ஏனைய எலிகளை பார்க்கிலும் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டன. மேலும் மனிதசெல்லை (Brain cell) கொண்டு அறிவுத்திறன் கொண்ட எலிகளை உருவாக்க முயன்று வருகின்றனர்.



ஒரு ஸ்மார்ட் போன் கொண்ட மனிதன் : 1937 ஓவியம் எதிர்கால கணிப்பு?

1937 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இத்தாலியக் கலைஞரான உம்பர்டோ ரோமனோவினால் வரையப் பட்ட இந்த ஓவியம் எதிர்காலத்தை எதிர்வுகூறும் வகையில் காணப்பட்டது. ஓவியத்தின் கீழ் வலதுபுறத்தில் ஒருவர் ஸ்மார்ட் கையடக்க தொலைபேசியை இன்றைய தலைமுறையினர் உபயோகப்படுத்தும் பாணியில் வரைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது



## இந்த வார பாடசாலை

கொக்குவில்
இந்துக் கல்லூரி (1AB)
மாணவர்கள்: 2183
ஆசிரியர்கள்: 87
அதிபர் மகாலிங்கம் ஞானசம்பந்தன்
மொழிமூலம்: தமிழ், ஆங்கிலம்.
ஆரம்பம்: 1910
பணிக்கூற்று: கற்றதொழுகு
வகுப்புக்கள்:
தரம் 1 - 13 வரை
வகை: கலவன் பாடசாலை.

# எந்தெந்த நாடுகளில் என்ன படிக்கலாம்?

ரமணன்

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள LIVERPOOL JOHN MOORES UNIVERSITY, BSc(Hons) Architecture, BSc(Hons) Quantity Surveying, BBA(Hons) Business Administration போன்ற கற்கைநெறிகளை இலங்கை மாணவர்களுக்கு வழங்குகின்றது.

குறைந்தபட்சம் க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி அல்லது அதற்கு சமனான தகைமைகளை கொண்டிருப்பது இக் கற்கைநெறிகளை தொடர்வதற்கான ஆரம்ப தகுதியாக வேண்டப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டு உயர்தர பாறிட்சை பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் மாணவர்களும் இக் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

கற்கைநெறிகள் 3 வருட கல்வியாண்டுகளை கொண்டது. 2017 செப்டம்பர் மாதத்திற்கான மாணவர் ஆட்சேர்ப்பிற்கான பதிவுகள் இடம்பெறுகின்றது.

O/Levels அல்லது A/Levels க்கு பிறகு மாணவர்கள், அவுஸ்திரேலியா மற்றும் மலேசியா MONASH COLLEGE DIPLOMO PROGRAMME இணை இலங்கையில் தொடங்குவதற்கான சந்தர்ப்பத்தை University College Lanka வழங்குகின்றது.

O/Levels க்கு பிறகு Monash University foundation year பூர்த்தி செய்ய வேண்டும். பல்கலைக்கழகத்தின் 10 பீடங்களில் இதனை பூர்த்தி செய்யலாம். அவுஸ்திரேலிய பல்கலைக்கழகங்களால் அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறியாகும். A/Levels க்கு பிறகு Monash college Diploma வினை பூர்த்தி செய்ய முடியும். இது பல்கலைக்கழகத்தின் முதலாம் வருடத்திற்கு சமமானதாக உள்ளது.

Engineering துறையில் Business Information Systems, Computer Network and Security, Games Development, Multimedia Development, Software Development, Advanced Computer Science, Data Scienceகற்கைநெறிகளையும்

IT துறையில் Business Information Systems, Computer Network and Security, Games Development, Multimedia Development, Software Development, Advanced Computer Science, Data Science கற்கைநெறிகளையும்

வியாபாரத் துறையில் Accounting, Actuarial Studies, Banking and Finance, Behavioural Commerce, Business Law, Business Management, Economics, International Business, Marketing கற்கைநெறிகளையும் இங்கு கற்கலாம்.

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் உள்ள Manipal University 5 வருட MBBS பட்டப்படிப்பினை வழங்குகின்றது. இதில் முதல் இரண்டரை வருடங்கள் இந்தியாவில் உள்ள மனிபால் வளாகத்தில் ஆரம்ப சிகிச்சை கற்கை கற்பிக்கப்படுகின்றது. பின்னர் இறுதி இரண்டரை வருடங்கள் மலேசியாவில் உள்ள மேலகா வளாகத்தில் சிகிச்சைக்கான பயிற்சி கொடுக்கப்படுகின்றது.

மாணவர்களுக்கு விளையாட்டு, பொழுதுபோக்கு, விடுதிவசதிகள் செய்துகொடுக்கப்படுகின்றது. க.பொ.த உயர்தர தகைமை கொண்ட மாணவர்கள் அனுமதிகளுக்காக விண்ணப்பிக்க முடியும்.

Quantity Surveying, Civil Engineering, Law, Business Management, Bio Medeical Science, IT இக் கற்கைநெறிகளை University of Wolverhampton UK, University of Canberra Australia ஆகிய பல்கலைக்கழகங்களில் நம் நாட்டு மாணவர்கள் கற்பதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளது. இக் கற்கைநெறிகள் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாக உள்ளன. இலங்கை மூன்றாம் நிலை தொழில்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றது.

க.பொ.த உயர்தரம் சித்தியடைந்த மாணவர்களுக்கு இவ் வெளிநாட்டு கற்கைநெறிகளை தொடர்வதற்கு சந்தர்ப்பங்கள் உள்ளது. கற்கைநெறிகளில் உயர்டிப்ளோமா, பட்டப்படிப்பு, முதுநிலை மட்டங்களை பூர்த்தி செய்யலாம்.

அனைத்து கற்கைநெறிகளுக்கும் 7 - 10 லட்சம் ரூபாய் செலவாகின்றது. 3 வருடக் கற்கைநெறிகளாக உள்ளன. பதிவுகளை BCAS Jaffna Campus இல் மேற்கொள்ளலாம்.

Diplomas – English, Information Technology, Marketing and Management

Degrees – Computing, Computer Networking, Business Management, Civil Engineering, Quantity Surveying

Masters – MBA, MSc IT ஆகிய கற்கைநெறிகளை ஐக்கிய இராச்சியத்திலுள்ள Cardiff Metropolitan University, Birmingham City University, Liverpool John Moors University, University of Sunderland ஆகிய பல்கலைக்கழகங்கள் இலங்கை மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புக்களை வழங்குகின்றன. இக் கற்கைநெறி தொடர்பான மேலும் விபரங்களை அறிவதற்கு Jaffna ICBT Campus உடன் தொடர்பு கொள்ள முடியும்.

Pearson Edexcel University இல் HND in Computing & System Development, HND Quantity Surveying, HND in Business Management ஆகிய கற்கைநெறிகள் உள்ளன. இக் கற்கைநெறிகளை இலங்கை மாணவர்களும் கற்கலாம். இவை 02 வருட கற்கைகளாக உள்ளன. இக் கற்கைநெறிக்களுக்கு இலங்கையில் க.பொ.த உயர்தர பாறிட்சையில் அல்லது இலண்டன் உயர்தர பாறிட்சையில் குறைந்தது ஏதாவது துறையின் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருந்தால் போதுமானது. அல்லது அதற்கு சமனான வேறு அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

02 வருடங்களைக் கொண்ட HND in Civil Engineering கற்கைநெறியும் Pearson Edexcel University இனால் வழங்கப்படுகின்றது. இக் கற்கைநெறிக்கு இலங்கையில் க.பொ.த உயர்தர பாறிட்சையில் அல்லது இலண்டன் உயர்தர பாறிட்சையில் குறைந்தது கணித துறையின் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருந்தால் போதுமானது. அல்லது அதற்கு சமனான வேறு தகைமைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

01 வருட BSc. IT Bachelor of Science in Information Technology (Top up degree), BBA Bachelor of Business Administration (Top up degree) கற்கைநெறிகள் பிலிப்பைன்ஸிலுள்ள Aldersgate University இனால் வழங்கப்படுகின்றது. இக் கற்கைநெறிகளுக்கு குறித்த பாடத் துறைகளில் உயர்தேசிய டிப்ளோமா அல்லது வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பட்டம் அல்லது அதற்கு சமனான தகைமை ஆகியவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட



சான்றிதழ் வேண்டப்படுகின்றது.

02 வருட BSCE Bachelor of Science in Civil Engineering (Top up degree) கற்கைநெறியும் பிலிப்பைன்ஸிலுள்ள Aldersgate University இனால் வழங்கப்படுகின்றது. இக் கற்கைநெறிக்கு குறித்த Business Administration பாடத் துறையில் உயர்தேசிய டிப்ளோமா அல்லது வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பட்டம் அல்லது அதற்கு சமனான தகைமை ஆகியவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் வேண்டப்படுகின்றது.

01 வருட MBA Masters of Business Administration கற்கைநெறியும் பிலிப்பைன்ஸிலுள்ள Aldersgate University இனால் வழங்கப்படுகின்றது. இக் கற்கைநெறியை கற்பதற்கு Business, Management or Administration துறைகளில் பெற்றுக் கொண்ட பட்டம் அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏதாவது பட்டம் கல்வித் தகுதியாக இருக்கவேண்டும்;. வாண்மைசார்ந்த அனுபவமாக 03 வருட முழுநேர வேலை செய்த அனுபவத்தை குறித்த துறையில் கொண்டிருக்க வேண்டும்.

பிலிப்பைன்ஸிலுள்ள Aldersgate University மற்றும் Pearson Edexcel University களின் கற்கைநெறகளை

தொடர்ச்சி 25-ம் பக்கம்...



அமெரிக்கர்களிடம் கொமாண்டோ பயிற்சி பெறும் உக்ரேனியர்கள்

# சிம்பாவே எறிகணைகளுடன் புறப்பட்ட கப்பல் எங்கே போனது?

## புலிகளின் மெகா ஆயுதக்கடத்தல் இதுதான்!




பீஷ்மர்

**1992**ஆம் ஆண்டே புலிகளிடம் sam 7 strela 2 ஏவுகணை கிடைத்து விட்டது. இந்த ஏவுகணையை வைத்து அதுவரை என்ன செய்தார்கள் என்று நீங்கள் ஆச்சரியமடையலாம். உண்மைதான். இந்த இடத்தில்தான் பிரபாகரனின் இயல்பொன்றை குறிப்பிட வேண்டும்.

பிரபாகரன் எதிலும் அவசரக்குடுக்கை யானவர் கிடையாது. 1970களின் பிற்பகுதியில் ஆயுத இயக்கமொன்றை கட்டியெழுப்பினாலும் அதை விளம் பரப்படுத்த அவர் விரும்பவில்லை. மற்றைய இயக்கங்கள் தங்களின் பெயர்களை அறிக்கைகளால் பகிரங்கப்படுத்திக் கொண்டிருக்க, பிரபாகரன் தனது இயக் கத்தை ஆயுத, ஆள் பலத்தால் பலப்படுத்திக் கொண்டிருந்தார்.

1972இல் புதிய தமிழ் புலிகளை ஆரம் பித்தாலும், (இடையில் 1975 விடுதலைப் புலிகளாக மாறியது) 1981இல்தான் முதலாவது தாக்குதலை நடத்தினார். கவிஞர் காசியானந்தன் ஒரு குறுங்கவிதை எழுதியிருந்தார். சிறகு விரி, பிறகு சிரி என. அதுதான் பிரபாகரனின் உத்தி.

1992இல் ஏவுகணை வாங்கப்பட்டாலும் 1995இல்தான் முதலாவது தாக்குதல் நடத்தினார்கள். அதை பாவிக்க வேண் டிய இராணுவச்சூழல் வரும் போது பாவிப்பதுதான் சிறந்தது என நினைத் தார்கள். இயக்கங்களிடம் ஏவுகணை செல்வதைதடுக்கும்முயற்சியைவல்லரசுகள் அப்பொழுது ஆரம்பித்திருந்தார்கள். எடுத்த எடுப்பிலேயே ஏவுகணையை பாவித்து, புலிகளிடம் ஏவுகணை இருக்கிறதென்ற சந்தேகத்தை ஏற்படுத்தி, புலிகளின் ஆயுத வலையமைப்பின் மீது சர்வதேச புலனாய்வு அமைப்புக்களின் கவனத்தை குவிக்க புலிகள் விரும்பவில்லை.

1992இன் இறுதிக்காலத்திலேயே உக்ரேனில் வாங்கிய ஏவுகணைகள் யாழ்ப் பாணத்திற்கு வந்து சேர்ந்துவிட்டன. இந்த ஏவுகணைகளை வாங்கியபோது அதற்கான பயிற்சியை வழங்க, உக்ரேனிய கொமாண்டோக்கள் இருவரை அனுப்புவதாகத்தான் பேச்சு.

உக்ரேனிய ஆயுததொழிற்சாலைகள் அந்த நாட்டு இராணுவ தளபதிகளின் கட்டுப்பாட்டில் இருந்ததை முன்னரே சொல்லியிருந்தேன். 90களின் முதல் சில ஆண்டுகள் உக்ரேனிய இராணுவமும் சின்னாபின்னமாகியிருந்தது. தளபதிகள் நினைத்தபடி இராணுவ வீரர்களை கையா ண்டனர். பல வீரர்களை இராணுவ சேவை யிலிருந்து விலக்கி, தமது தொழிற் சாலைகளில் பணிபுரிய வைத்திருந்தார்கள்.

முன்னாள் சோவியத் ஒன்றிய காலத்தில் இராணுவ கொமாண்டோ பயிற்சியெடுத்த இருவரை புலிகளிடம் அனுப்பினார் ஏவுகணைகளை விற்ற உக்ரேனிய அதிகாரி. அவர்கள் ஏவுகணைகளை கையாள்வதில் சமர்த்தர்கள். கடல்வழியாக யாழ்ப்பாணம் வந்த அவர்கள்தான் ஏவுகணை பயிற்சியை வழங்கினார்கள். அப்பொழுது பளையில் இருந்த இம்ரான் பாண்டியன் படையணியின் லீமா 7 பயிற்சி முகாமில் தங்கியிருந்துதான் பயிற்சியளித்தனர். ஏவுகணை பயிற்சி மற்றும் கொமாண்டோ அணிக்கான பயிற்சி அங்கு நடந்தது.

உக்ரேனியர்களின் திட்டத்தில் அந்த பயிற்சி முகாம் அமைக்கப்பட்டது. இராணுவ, தற்காப்பு, மல்யுத்த, கடல் பயிற்சிகள் அனைத்தும் வழங்கப்பட்ட ஒரு பயிற்சிமுகாமாக அது அமைந்தது. தற்காப்பு, மல்யுத்த போட்டிகளிற்காக சர்வதேசபோட்டிகள் நடத்தும் அளவிற்கு சிறப்பான அரங்குகளும் அங்கு அமைக்கப்பட்டிருந்தன. இது 1993 இலேயே அமைக்கப்பட்டு விட்டது!

1994 வரை உக்ரேனியவர்கள் அங்கு பயிற்சியளித்துக் கொண்டிருந்தனர். திட்டத்தட்ட இரண்டு வருடங்கள் நாட்டைவிட்டு வெளியில் வாழ்ந்த உக்ரேனியர்களும் சராசரி மனிதர்கள் தானே. அவர்கள் மனித உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி வாழ்ந்தவர்கள் அல்ல. புலிகளுடன் பணியாற்ற வந்தபின் சில கட்டுப்பாடுகளுடன்தான் வாழலாம். அது உக்ரேனியர்களால் முடியவில்லை. திடீரென ஒருநாள் குண்டைந் தூக்கிப் போட்டார்கள் அவர்கள்.

தாங்கள் தனித்து வாழ்வதால் தொடர்ந்து இங்கு இருக்க முடியாது, தொடர்ந்து தங்கி பயிற்சி வழங்குவதெனில் தமக்கு சில பெண்களின் தொடர்பு தேவையென்றார்கள். அதாவது அவர் களிற்குரிய பாலியல் உறவு ஏற்பாட்டையும் புலிகள் செய்து கொடுக்க வேண்டுமாம். இதெல்லாம் புலிகளிற்கு சரிப்பட்டு வராதே. அவர்களை மூட்டை கட்டி உக்ரேனுக்கே அனுப்பி விட்டார்கள்.

இந்த சமயத்தில் உதிரியாக இன்னொரு தகவலையும் குறிப்பிட்டு விடுகிறேன்.

சிம்பாவேயில் இருந்து 1997 மே மாத இறுதியில் சிம்பாவேயில் இருந்து இலங்கையரசு கொள்வனவு செய்த 32,400 82 மி.மீ எறிகணைகளை ஏற்றி யபடி புறப்பட்ட கப்பல் திடீரென காணாமல் போய்விட்டது. கப்பல் இலங்கைக்கும் வந்து சேரவில்லை. எந்த சர்வதேச துறைமுகங்களிலும் பின்னர் காணக்கிடைக்கவில்லை. கப்பலிற்கு என்ன நடந்தது? மூழ்கியதா... யாரும் கடத்தினார்களா என இலங்கையரசு தலையை பிய்த்துக் கொண்டிருக்க.

வன்னியில் ஒரு மாற்றம் தெரிந்தது. அப்பொழுதுதான் இலங்கை ராணுவம் வன்னியில் ஜெயசிக்குறு படை நடவடிக் கையை ஆரம்பித்திருந்தனர். புலிகளை சுலபமாக வீழ்த்தலாமென நினைத்துக் கொண்டு படையினர், முன்னேற ஆரம்பிக்க, அவர்களின் மீது மழைபோல 81 மி.மீ எறிகணைகள் விழத் தொடங்கின.

அதன் பின்னர்தான் அரசுக்கு பொறி தட்டியது. அரசுக்கு பொறி தட்டிய சமயத்தில், கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கு ஒரு தொலைநகல் வந்தது. 'சிம்பாவேயில் இருந்து புறப்பட்ட ஆயுதக்கப்பலை நாங்கள்தான் கடத்தி னோம்' என்பதே செய்தியின் சாரம்.

எப்படி புலிகள் கடத்தினார்கள்? சோமாலியா கடற்கொள்ளையர்கள் பாணியில், கறுப்பு துணிகளால் முகத்தை மூடிக்கட்டிக்கொண்டு ஆயுதக்கப்பலை நடுக்கடலில் மறித்து எறிகணைகளை கடத்திக்கொண்டு சென்றார்களா?


இதெல்லாம் எம்.ஜி.ஆர் பட கால கடத்தல் முறை. புலிகள் கையாண்டது பக்கா கடத்தல். இது பற்றிய விபரங்களை குறிப்பிடுகிறேன்.

1997இல் இராணுவம் வன்னி நடவடிக் கையை மேற்கொண்டது. நீண்டதூர ஆட்லறிகளை விட, களத்தில் உடனடியாக நகர்த்தி செல்லும் சிறிய மோட்டார்கள்தான் காட்டு சண்டைக்கு உகந்தது என இராணுவம் நினைத்தது. வன்னி சண்டையை விரைவில் முடிக்க பெருமளவு பணத்தை ஒதுக்க அரசும் தயாராக இருந்தது. பாதுகாப்பு அமைச்சு 81 மி.மீ எறிகணைகளிற்கு கேள்விகோரல் செய்தது.


சிம்பாவேயில் Zimbabwe Defence Industries (ZDI) என்ஸீறாரு ஆயுத தயாரிப்பு நிறுவனம் இருக்கிறது. சிம்பாவே அரசு இயக்கும் நிறுவனம் இது. இந்த நிறுவனத்தின் விலைப்பட்டியல் மற்றைய விலைப்பட்டியல்களை விட குறைவாக இருந்தது. இந்த நிறுவனத்திடமே எறி கணைகளை வாங்குவதென அரசு தீர்மானித்தது.

3 மில்லியன் அமெரிக்க டொலர் (அப்போதைய இலங்கை பெறுமதி 177 மில்லியன்) பெறுமதியான ஆயுத ஒப்பந்தம் அது. 1997 ஆரம்பத்தில் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த பெறுமதி தனியே எறிகணைகளிற்குரியதல்ல. ஆயுதங்களை இலங்கையில் சேர்ப்பதும் இதில்தான் அடக்கம். இலங்கைக்கு வந்த நிறுவன தலைவர் கேணல் டுட் ஒப்பந்தம் செய்துவிட்டு திரும்பினார். ஒரு மாதத்தில் இலங்கைக்கு ஆயுதம் அனுப்ப வேண்டுமென்பது ஒப்பந்த விதி.

சிம்பாவேயில் இருந்து இலங்கைக்கு ஆயுதங்களை கொண்டு செல்ல, கப்பல் நிறுவனமொன்றை குத்தகைக்கு



81 மி.மீ மோட்டார்களுடன் புலிகள்



அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த

தொடர்ச்சி அடுத்தபக்கம்...



**www.facebook.com/jayamathan**

தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கின்றோம் என்ற பெயரில் அவர்களுக்கு cloak hat எல்லாம் அணிவித்து அதனை குரூப் போட்டோ எடுத்து பத்திரிகைகளில் பிரசுரிப்பதை காண முடிகின்றது.
இது பிஞ்சுகளின் மனத்தில் தாழ்வு மனப்பான்மையையும் ஏற்ற தாழ்வுகளையும் ஏற்படுத்தும் என்பது 100 % உண்மை .ஒரு வகுப்பில் கிட்டத்தட்ட 30 தொடக்கம் நாற்பது மாணவர்கள் படித்திருப்பார்கள் .ஆனால் புலமை பரீட்சையில் சித்தியடைந்தது வெறும் 5 தொடக்கம் 10 வரையிலான மாணவர்கள் மட்டுமே.
அதிபர்களே ஆசிரியர்களே நீங்கள் செய்யும் இந்த கேலி கூத்தினால் சித்தியடையாத 30 பிஞ்சுகளின் மனங்களில் தாழ்வுமனப்பான்மையை விதைகிண்றீர்கள் என்பதனை மறந்து விடாதீர்கள்.
இவ்வாறான செயல்களை செய்யும் அதிபர் ஆசிரியர்களிடம் ஒரு கேள்வி ஏன் மற்றைய 30 மாணவர்களையும் உங்களால் சித்தியடைய செய்ய முடியவில்லை?
அனைத்து மாணவர்களையும் சித்தியடைய செய்து விட்டு அவர்களுக்கு cloak hat அணிவித்து போட்டோ எடுத்தால் அது சாதனை தான். வெறும் பத்து வயது பிள்ளைக்கு இரவு எட்டு ஒன்பது மணிவரை பாடம் கற்பித்து அவர்களை கசக்கி பிழிந்து அவர்களுடைய சிறுபராயத்தை விழுங்கி அவர்களை சித்தியடைய செய்தது தான் உங்கள் சாதனை என்றால் உங்களின் அறிவு மட்டம் ஐந்தாம் ஆண்டுக்கு பிறகு வளரவில்லை என்றே கூறுவேன். நீங்கள் இன்று தாழ்வு மனப்பான்மையை விதைக்கும் அந்த சித்தியடையாத மாணவர்களில் பல பொறியலாளர்கள் வைத்தியர்கள் கணக்காளர்கள் விரிவுரையர்கள்,நாட்டிய மேதைகள், விளையாட்டு வீரர்கள்,திரைப்பட இயக்குனர்கள், Etc ஒளிந்திருக்கின்றார்கள் என்பதனை மறந்து விடாதீர்கள்.
நீங்கள் இன்று பாராட்டி போட்டோ போடும் மாணவர்கள் அனைவரும் நாளை பிரகாசிக்க போவதில்லை. காரணம் பிரகாசிக்க வேண்டிய வயது வரும் போது அவர்கள் சோர்ந்து விடுவார்கள்.ஏனெனில் நீங்கள் அந்த அளவு அவர்களை வாட்டி வதைக்கிறீர்கள்.
அவர்கள் சாதிக்க வேண்டிய வயதினை அடையும் பருவத்தில் அவர்களுக்கு சரியான வழிகாட்டுதல் கிடைப்பதில்லை.வழிகாட்ட வேண்டிய வயது வரும் போது பெற்றோரும் சோர்ந்து போகின்றார்கள்.இதனை ஒரு போதும் மறுத்து விட முடியாது.



**www.facebook.com/ratnasingam.sharveswara**

வடக்கில் 92 % சித்தியடையவில்லை என்பதற்கு அப்பால் பல்கலைக்கழகத்தில் கற்றவர்களில் 80% க்கு மேல் புலமைப்பரிசில் சித்தியடையவில்லை



**www.facebook.com/theva.thasan**

ஐந்தாம் வகுப்புக்குரிய புலமை பரிசில் தேர்வுக்கான பரீட்சை அவசியமா?
இதனால் ஏற்படும் நன்மை தீமை என்ன
என்பது பற்றிய சரியான ஆய்வு அவசியம்....
என்னைபொறுத்தவரை தீமைகளே அதிகம்...
மாணவர்களுக்கான சமத்துவ உணர்வு அழிகிறது .
பெற்றோர்களுக்கான உறவில் விரிசல் ஏற்படுகிறது...
பெற்றோர்களால் படிக்கும்படி கொடுக்கும் அழுத்தம் பிள்ளைகளுக்கு கல்விமீதே வெறுப்பை ஏற்படுத்தும் அபாயம்.
பிள்ளைகள் அந்த வயதில் அனுபவிக்க வேண்டிய அனுபவங்களை இழத்தல்..
பள்ளிக்கூடங்களுக்கான ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தல்.....
இன்னும் பல....



**www.facebook.com/Thangarajah.Thavaruban**

இந்த புலமைப்பரிசில் கோஸ்டியால ஒரே தொல்லையா கிடக்கு. பாவம்டா அவங்கள் ஏண்டா சின்னஞ்சிறுசுகளின்ர மனதை இப்படி வதைக்கிறியள். இனி பாராட்டு விழா தங்கப்பதக்கம், என்று ஒரு ஆறுமாசத்திற்கு வதைப்பாங்கள் . வங்கிகள் கூட விடமாட்டாங்கள் வைச்சு வைச்சு செய்வாங்கள்.
ஊரில ஒரே ஒருத்தன் பாஸ் பண்ணியிருந்தன் ஒரு பாராட்டு விழா கூட செய்யலையே!

## இணைய கலாட்டா

நாய் நன்றியுள்ளது என்பது ஒன்னும் பெரிய அதிசயம் இல்லை...




இத்தனை காலம் மனிதர்களோடு இருந்தும் அது நன்றியோடு இருப்பது தான் அதிசயமா இருக்குது..!

பையனுக்கு என்ன சார் பேர் வெச்சிருக்கீங்க..?
லோராண்டி – னு வச்சிருக்கேன்...!
என்னய்யா பேர் இரு, கேள்விப்பட்டதே இல்லையே..?
என்ன இப்படிச் சொல்லிட்டீங்க, சித்தர் பாடல்களில் இடம் பெற்ற பேர் சார் இது...!
அது என்ன பாடல்?
நந்தவனத்தி லோராண்டி...!
f/alwzsmle
-போதனா

ஏன் ஸ்கூட்டரை திருடினே...?




டிராபிக் போலீஸ்காரர்தாங்க சீக்கிரம் வண்டிய எடு ... வண்டிய எடுன்னு அவசரப்படுத்தினாரு எசமான்..

வளர்ந்து படிச்சு பெரிய ஆளாகி நல்ல பேரு வாங்கறதுக்கு...




பொறக்கும்போதே நல்ல பேரா வச்சா என்னாவாம்..

அதிகமா கவலை பட்டா முடி கொட்டுமாம்...



இங்கு முடி கொட்டுதுனு தான் கவலையே படுறாங்க...

தீப்பெட்டிய கையிலே வச்சுக்கிட்டு எதுக்கு டாக்டர் என் வாயைத் திறக்கச் சொல்றீங்க?




டார்ச் லைட் ரிப்பேருய்யா..

ஆளாளுக்கு ரெண்டு மூணு மொபைல் நம்பர் வச்சிருக்காய்ங்க...அதை அவங்க ரிலேடிவ்ஸ் சேவ் பண்ணி வச்சிருக்கிற பேர்களைப் பார்த்தா... டெர்ரரா இருக்கு...
எக்ஸாம்பில் பார்த்தோம்னா...
"Mummy new"
"Appa 2"
"Wife new"
"Wife 2"
"Mother in Law Jio"
அதுல இது லேடஸ்ட்...
" Husband temporary "
இதுல ஹைலைட்...
" Husband1"
" Husband 2 "
" Husband 3 "
f/alwzsmle
-யாரோ




குடித்து விட்டு வாகனம் ஓட்டுவது மனித வெடிகுண்டுக்கு சமம்

அப்போ அதை விற்கும் அரசாங்கம் தீவிரவாததுக்கு சமமா?

---

அமர்த்துவதற்காக சிம்பாவே நிறுவனம் கேள்வி கோரல் செய்தது.

இந்த இடத்தில் பொதுவான ஆயுத விநியோக நடைமுறையொன்றை சொல்ல வேண்டும். கப்பலில் ஆயுதங்களை ஏற்றியிறக்க வேண்டுமெனில், அதற்காக பதிவுசெய்யப்பட்ட கப்பல்களைதான் பாவிக்க வேண்டும். ஆயுதம் ஏற்றும் கப்பல்கள் காப்புறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும். அந்த காப்புறுதியின் ஒரு குறிப்பிட்ட வீத பணம், ஒவ்வொரு பயணத்தின்போதும் கட்டணத்துடன் மேலதிகமாக இணைக்கப்படும். சாதாரண சரக்கை ஒரு இடத்திலிருந்து கொண்டு வருவதற்கு ஆகும் செலவை விட, ஆயுதங்களை கொண்டு வருவதற்கு ஆகும் செலவு அதிகம். விபத்துக்களால் கப்பலிற்கோ, பணியாளர்களிற்கோ ஆபத்து நேரலாம் என்பதால்தான் இந்த காப்புறுதி திட்டம்.

கிரேகத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றும் விலைமனு சமர்ப்பித்தது. அவர்கள் குறிப்பிட்டிருந்தது மிக குறைந்த பெறுமதி. சிம்பாவே நிறுவனம் அதிக இலாபம் வைப்பதற்காக அந்த நிறுவனத்தை ஒப்பந்தம் செய்தது. அந்த நிறுவனத்தின் Stillus Limmasul என்ற கப்பல்தான் ஆயுதம் ஏற்ற வந்தது.

சிம்பாவேயில் இருந்து பாரிய லொறிகளில் மொசாம்பிக் எல்லையிலுள்ள Port of Beira துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டன. 12 கொள்களன்களில் 32,400 எறிகணைகள் Stillus Limmasul கப்பலில் ஏற்றப்பட்டன. மே 24ம் திகதி அந்த துறைமுகத்தை விட்டு கப்பல் புறப்பட்டது. புறப்படும்போது சிம்பாவேகாரர்களை பார்த்து கப்பலில் இருந்தவர்கள் நன்றாக கைகாட்டியிருக்க வேண்டும். நல்லவேளையாக காதில் ஏதாவது பூவை வைக்கவில்லை. அப்படி வைத்திருந்தாலும் சிம்பாவேகாரர்கள் கோபித்திருக்க தேவையில்லை. ஏனெனில் செய்தவேலையே அதுதானே.

ஏதோ ஒரு நிறுவனத்தின் பெயரில் விண்ணப்பித்து அந்த எறிகணைகளை ஏற்றியது விடுதலைப்புலிகள்! புறப்பட்ட கப்பல் ஒன்றரை மாதத்தில் முல்லைத்தீவில் ஆயுதங்களை இறக்கிவிட்டு சென்று விட்டது.

ஒரு மாதமாகியும் பொருட்கள் வரவில்லையென்றதும், இலங்கையிலிருந்து சிம்பாவே ஆயுத நிறுவனத்தை தொடர்பு கொள்ள, "புறப்பட்டு விட்டார்கள். வந்துவிடுவார்கள்" என்ற பாணியில் பதிலளித்து கொண்டிருந்தார்கள். இரண்டு மாதமாகியும் காணவில்லையென்ற பின்னர்தான், இலங்கை அரசு எச்சரிக்கையாகி விழித்துக்கொண்டது. என்ன நடந்ததென விசாரிக்க... அதற்குள் அத்தனை எறிகணையும் புலிகளிடம் சென்று சேர்ந்து விட்டது. (தொடரும்)

# உலகம் சுற்றி பார்ப்போம்



# "இதுதான் ரோடோஸ்... இங்கே குதி பார்க்கலாம்!"

புதிய தொடர்

உலகத்தின் தலைசிறந்த சுற்றுலா மையங்களிற்கு உங்களை அழைத்து செல்லும் புதிய தொடர். இலங்கை தமிழ் ஊடகங்களில் இந்த முயற்சி புதியது. தீபம் வாசகர்களிற்காக சாள்ஸ் ஜே போர்மன் எழுதுகிறார். யாழ்ப்பாணம் புலோலியை சேர்ந்த இவர் கடந்த முப்பது வருடங்களாக புலம்பெயர்ந்து வாழ்கிறார். உலகத்தின் தலைசிறந்த சுற்றலா மையங்களிற்கு வாராவாரம் இனி உங்களை அழைத்து செல்வார்.

**சாள்ஸ் ஜே போர்மன்**

"ιδού η ρόδος,
ιδού και το πήδημα" = "Hic Rhodus, hic salta!"

"இதுதான் ரோடோஸ் என்று எண்ணிக்கொள் எங்கே பாய்ந்து காட்டு பார்க்கலாம்!"

உங்களில் எத்தனை பேர் "தற்பெருமை கொண்ட விளையாட்டு வீரன்" கதை கேட்டிருக்கிறீர்களோ, தெரியாது, ஆனால், இக்கதையில் குறிப்பிடப்படுகிறவனைப் போன்றவர்களை நிச்சயம் சந்தித்திருப்பீர்கள்.

ஆரம்ப வரிகளில் கொடுக்கப்பட்டிருக்கும் கிரேக்க பழமொழியைத் தத்துவ ஞானி ஹேகல் குறிப்பிட்டிருக்கிறார். மேலுமொரு சமயத்தில் கார்ல் மார்க்ஸ் இதையே டொச் மொழியில் "Hier ist die Rose, hier tanze"குறிப்பிட்டிருக்கிறார். "இதோ தருகிறேன் ரோஜாவை, இங்கேயே நடனமாடு," என்று மாற்றிச் சொல்கிறார் மார்க்ஸ்.

அங்கிருந்துதான் நான் ரோடோஸ் என்ற இடத்தைப் பற்றி அறிந்திருந்தேன். அதே ரோடோஸ் மிகப் பிரபலமான சுற்றுலா ஸ்தலம் என்பது தெரிந்து கொண்டு அதற்கும் குறிப்பிட்ட விகடத் துணுக்குக்கும் என்ன சம்பந்தம் என்று தேடியபோதுதான் அத்துணுக்கு பற்றிய பாட்டி சொன்ன கதையும் தெரியவந்தது.

அதைப் பின்பு சொல்கிறேன், அதற்கு முன் என்னைப் பற்றியும் எனது பிரயாண ஆர்வம் பற்றியும் சில வார்த்தைகளுடன் எனது பயணத் தொடரைச் சொல்ல ஆரம்பிக்கிறேன்.


சுவீடன் வாழ்வில் விரைவில் மூன்று தசம் போடப்போகும் எனது சொந்த ஊர் புலோலி. பலர் சுவீடனையும் சுவிஸையும் ஒன்றுடனொன்று போட்டுக் குழப்பிக்கொள்வதால் சுவீடன் வட ஐரோப்பாவில் ஸ்கண்டினேவிய நாடுகளில் ஒன்று. இது நோர்வே, பின்லாந்து, டென்மார்க் நாடுகளிடையே இருக்கும் நாடு என்பதையும் குறிப்பிடுகிறேன்.

பல நாடுகளுக்கும், ஏகப்பட்ட ஆர்வக்கோளாறுகளுடன் பயணம் செய்யும் என்னுடன் பெரும்பாலும் 2008 இல் பிறந்த எனது மகன் கதிரும் பிரயாணம் செய்வதுண்டு. அவனது தாயும் நானும் விவாகரத்துச் செய்து கொண்டவர்கள், அவன் என்னுடன்தான் பெரும்பாலும் வாழ்கிறான். தான் பிறந்த மூன்றாவது மாதத்திலேயே நோர்வேயின் பனிமலைகளின் பரிசுத்தமான காற்றைச் சுவாசிக்க என்னுடன் ஏறிய அவன் எனது பயணங்களில் ஒன்றையும் தவறவிட விரும்புவதில்லை.

2016 இன் கோடை விடுமுறையின்போது இரண்டு பயணங்கள் செய்திருந்தோம். ஏற்கனவே காரில் இரண்டு வாரங்கள் எத்தனை தடவைகள் சுற்றினாலும் எனக்கு அலுக்காத நோர்வேயின் சில பகுதிகளில் பயணம் செய்துவிட்டுத் திரும்பி வந்திருந்தோம். அதன்பின் கதிர் ஒரு வாரம் தனது தாயாருடன் தங்கியிருந்தபின் இரண்டாவது பிரயாணமான ரோடோஸ் சுற்றுலாவுக்குத் தயாராகினோம்.

ஒரு பிள்ளைக்கு இரண்டு பெற்றோருடைய அன்பும் அரவணைப்பும் அவசியமானது. எனது வீட்டுக்கருகிலேயே பாடசாலைக்குப் போகும் அவன் வார இறுதிகளில் மட்டுமே தனது தாயாரைச் சந்திக்கப் போவது வழக்கம். எனவே இந்த நாட்டின் நீண்ட விடுமுறையான கோடை விடுமுறையில் ஓரிரு வாரங்களாகவது அவனை அவனது தாயாருடன் செலவழிக்க ஒழுங்குசெய்வது எங்கள் வழக்கம். குழந்தைகளுக்காகத்தான் பெற்றோரே தவிர பெற்றோருக்காக அல்ல பிள்ளைகள் என்பது எனது திடமான கருத்து.

நாங்கள் வாழும் நகரம் சுவீடனின் தலைநகரமான ஸ்டொக்ஹோமிலிருந்து சுமார் 250 கி.மீ தூரத்திலிருக்கிறது. அதிக போக்குவரத்தில்லாத, ஒழுங்காக அமைக்கப்பட்ட தரமான அவ்வீதிகளில் இரண்டரை மணிகளுக்குள் அத்தூரத்தைக் கடந்துவிடலாம். கிரேக்க நாட்டில் இருக்கும் ரோடோஸ் தீவில் எங்கள் பிரயாணத் திட்டம் இரண்டு வாரங்கள்.




விமானத்தில் போகும் நேரம், திரும்பும் நேரமெல்லாம் ரயிலிலோ பேருந்திலோ போய்த் திரும்பி வர வசதியில்லாமல் இருந்ததால், ஒரு ஞாயிறன்று மதியம் ஸ்டொக்ஹோம் ஆர்லாண்டா விமான நிலையத்திற்குப் புறப்பட்டோம் எங்கள் காரில். விமான நிலையத்துக்குச் சில கி.மீ தூரத்திலேயே காரைப் பாதுகாப்பாக நிறுத்தி வாடகையைச் செலுத்திவிட்டு அங்கிருந்து விமான நிலையத்துக்குப் போக இலவசமான பேருந்து சேவைகள் இருக்கின்றன.

சுவீடன் மற்றும் ஸ்கண்டிநேவியரிடையே கோடைகாலத்துச் சுற்றுலாவுக்கு மிகப் பிரபலமான ரோடோஸுக்கு அனேகமாக எல்லா விமான நிறுவனங்களிலிருந்தும் அடிக்கடி விமானங்கள் போவதை விமான நிலைய பயண அட்டவணை காட்டியது. ஸ்டொக் ஹோமிலிருந்து நேரடியாக ரோடோஸுக்குப் போகும் எங்கள் "நோர்வீஜியன்" விமானம் மாலையில் புறப்பட்டு நடு நிசியளவில் ரோடோஸின் டயாகொராஸ் விமான நிலையத்தை அடையவிருந்தது.

இப்படியான கோடை வாசஸ்தலங்களுக்குப் பல மலிவு விலை விமான நிறுவனங்களும் பறக்கின்றன. அவைகளின் வியாபாரப் போட்டியில் இப்போதெல்லாம் பெரும்பாலான விமான நிறுவனங்கள் விமானச் சீட்டை மட்டுமே விற்கின்றன. விமானத்துள் நீர் உட்பட எது வேண்டுமானாலும் நிறைய விலை போட்டு விற்கிறார்கள். காரணம் விமானச் சீட்டின் விலை குறைப்பதில்தானே போட்டி.

நாங்கள் எங்களுடன் கொண்டுவந்திருந்த உணவை ஸ்டொக்ஹோம் விமான நிலையத்திலேயே சாப்பிட்டுவிட்டு விமானமேறினோம். பிரயாணங்களின் போது எதை உண்பது, குடிப்பது என்பதில் பிரத்தியேக கவனம் செலுத்தவேண்டும். அதனால் முடிந்தவரை எங்களுடைய உணவுகளை நானே தயார்செய்துகொள்வது வழக்கம். உற்சாக பிரயாணத்துக்கு உடல் ஆரோக்கியம் முக்கியம். நாளாந்த ஆரோக்கியத்தைத் தீர்மானிக்கும் முக்கிய விடயங்களில் ஒன்று உட்கொள்ளும் உணவு. நான்கு மணி நேரப் பயணத்தின் பின்பு இறங்கிய பின்பு பசித்தால் அங்கேயே எதையாவது வாங்கிக்கொள்ளலாம் என்று ஏற்கனவே திட்டமிட்டிருந்தோம்.

பொதுவாக மலிவுக் கட்டண விமானங்கள் நேர அட்டவணை, வசதிகள் நம்பகரமானவை அல்ல என்ற அபிப்பிராயத்துக்கு வித்தியாசமானது

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

21-ம் பக்க தொடர்ச்சி...


தொடர்வதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள IIS City Campus இல் தொடர்புகளை மேற்கொள்ள முடியும்.

மலேசியாவிலுள்ள Monash University, Melaka–Manipal Medical College (MMMC)/ Manipal International University, International Medical University (IMU), Swinburne University of Science & Technology, Sarawak Campus, INTI International University & Colleges, Taylor's University, Curtin University, Sarawak Campus Mfpad Architecture, Quantity Surveying & Construction, Business, Accounting, Marketing & and Finance, Computer Science, Software Engineering & IT, Engineering, Hospitality Tourism and Culinary Arts, Medical Study போன்ற கற்கைநெறிகளை உயர்கல்வியில் வழங்கிவருகின்றன. இக் கற்கைநெறிகளை இலங்கையை சேர்ந்த மாணவர்களும் கற்பதற்கு சந்தர்ப்பங்கள் உள்ளது.

நியூசிலாந்திலுள்ள University of Auckland, University of Otago, University of Waikato, Unitec Institute of Technology, Southern Institute of Technology, Queens Academic Group, Nelson Marlborough Institute of Technology, New Zealand Tertiary College, Waikato Insitute of Technology என்பன இலங்கை மாணவர்களுக்கு உயர்கல்வி கற்கைநெறிகளை வழங்குகின்றன.

இப் பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவர்கள் Bio – Medical Science, Humanities, Science, Business, Health Science, Medicine, Engineering, IT, Electronics, Tourism, Early childhood Education, Hospitality, Viticulture, Aquaculture, Nursing, Maritime, Adventure Tourism, Creative Industries, Business and Computing, Early Childhood Education, Applied Science, Primary Industries, Education, Engineering & Built Environment, Trade, Sport Science & Human Performance, Hair & Beauty, Media Arts, Health & Social Practices போன்ற கற்கைநெறிகளை கற்கலாம்.

அவுஸ்திரேலியாவிலுள்ள Group 08 பல்கலைக்கழகங்கள் என்று சொல்லப்படும் Canberra வில் உள்ள Australian National University, victoria வில் உள்ள University of Melbourne, New South Wales இல் உள்ள University of Sydney , University of New South Wales, Queensland இல் உள்ள University of Queensland, South Australia இல் உள்ள University of Adelaide, Western Australia வில் உள்ள University of Western Australia இவற்றை விடவும் மேலும் 17 பல்கலைக்கழகங்கள் இலங்கை மாணவர்களுக்கு உயர்கல்விக்கான சந்தர்ப்பத்தினை வழங்கி வருகின்றன.



இங்கு Agriculture, Arts, Biomedicine, Commerce, Fine Arts, Oral Health Science, Engineering, Medicine, Law, Dentistry, Clinical Audiology, Architecture, Speech pathology, Physiotherapy medicine, Engineering, veterinary medicine, Social Work, Optometry, Urban Planning, Research, Nursing, Journalism, Food Science, Music Theropy, Teaching, Psychology, Business & Economic Law, Health and Behavioral Sciences, Flight Training போன்ற பல்வேறு துறைகளில் கற்கைநெறிகளை தொடரமுடியும்.

இப் பல்கலைக்கழகங்களில் கல்வியை தொடர்வதற்கு அடிப்படைத் தகுதியாக இலங்கையில் க.பொ.உயர்தரத்தில் 03 பாடங்களில் சித்தியை பெற்றிருக்க வேண்டும். பட்டப்பின் கற்கையை தொடர்வதற்கு குறித்த துறையில் இளமாணிபட்டத்தைபூர்த்திசெய்யதிருக்க வேண்டும். IELTS கட்டாயம் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

Malasia, New Zealand, Australia பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியைத் தொடர்வதற்கு யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பில் உள்ள Edlocate நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

இவ்வாறான வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் உயர்கல்வியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் உள்நாட்டில் குறிப்பிட்ட கற்கை துறைகளில் சிறந்த வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் படிக்கின்ற நாடுகளிலேயே வேலையுடன் நிரந்தரமாக வாழ்வதற்கான சந்தர்ப்பங்களும் உண்டு.







▶ மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா நுவரெலியா மாநகரில் நடைபெற்றது. மத்திய மாகாண ஆளுநர் மற்றும் அமைச்சர், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச செயலாளர், ஊர முக்கியஸ்தர்கள் கல்வி அதிகாரிகள், எனப் பலர் கலந்து கொண்டனர். இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற இந்த விழாவிற்கு மத்திய மாகாண விவசாய மற்றும் இந்து கலாசார, தமிழ் கல்வி அமைச்சர் ரமேஷ் தலைமைதாங்கினார்.

---

"நோர்வீஜியன்" நிறுவனம். 1993 இல் ஆரம்பிக்கப்பட்டு மிக வேகமாக வளர்ந்து வருவதுடன் பொதுவாக நல்ல பெயரை எடுத்து 2000 ம் ஆண்டுகளில் பல தடவைகள் விமானப்பயணிகளுக்கான பல பரிசுகளையும் பெற்றுவரும் நிறுவனம் "நோர்வீஜியன்."

குறிப்பிட்ட நேரத்திலேயே பறக்க ஆரம்பித்து குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னரே ரோடோஸை அடைந்துவிட்டது. ரோடோஸ் மூக்கு முட்டக் குடித்துவிட்டு டிஸ்கோஸ்தலங்களில் ஆட வரும் இளவயது காளைகள், கன்னியருக்கு மட்டுமன்றி, குடும்பத்தினருடன் வருபவர்களுக்கும் விடுமுறை எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வாசஸ்தலம் என்பதால் விமானத்துக்குள் சகல வயதினர்களையும் காணமுடிந்தது.

விமான நிலையத்திலிருந்து நாங்கள் தங்க ஒழுங்குசெய்திருந்த ஹோட்டல் சுமார் 15 கி.மீற்றர் தூரத்தில் இருந்தது. விமானத்தில் வந்தபெரும்பாலான பயணிகள் குழுக்களாக ஏற்கனவே பயண நிறுவனங்களின் ஒழுங்குகளுடன் வந்தவர்கள். வாழ்வில் எல்லாவற்றையும் முன்னரே வகைப்படுத்தி ஒழுங்குசெய்துகொண்டால் எல்லாம் ஒழுங்காக நடக்கும், எவ்வித திடீர் அதிர்ச்சிகளும் ஏற்படாது என்ற வாழ்க்கைக் கோட்பாடு கொண்டவர்கள் சுவீடிஷ் மக்கள். விடுமுறைகளில் நிறுவனங்களால் ஒழுங்குசெய்யப்பட்ட உல்லாசப் பயணங்களில் தான் வழக்கமாக அவர்கள் ஈடுபடுவார்கள். அவர்களுக்கான பேருந்து வண்டிகள் விமானத்துக்கு வெளியே காத்திருந்தன.

எவ்வித திருப்பங்களுமில்லாமல், அடுக்கடுக்காகத் திட்டமிடப்பட்ட விடயங்களால், அரச இயந்திரம் என்ற இயந்திரம் பின்னணியில் செயற்பட நாட்கள் உருண்டுகொண்டிருக்கும் சுவிடனில் வாழும் எனக்கோ பயணங்கள் முழுக்க முழுக்க ஒழுங்குசெய்யப்படுவதில் இஷ்டமில்லை.

அதே காரணத்தால் பயணம் செய்யும் பிரதேசத்தைப் பற்றி மட்டுமன்றி அங்குள்ள நாளாந்த நடைமுறைகள் பற்றியும் முடிந்தவரை தெரிந்துகொள்வது அவசியம். இன்று புத்தகங்களை மட்டுமல்ல உலகத்தையே கைவிரல் நுனிகளால் புரட்டி எவ்வளவோ விபரங்களைத் தெரிந்து கொள்ளமுடியுமென்பது பயணங் களுக்கு மிகவும் உதவியாக இருக்கிறது.

டயாகொராஸ் விமான நிலையத் திலிருந்து நகருக்குப் போவதற்கு நாள் முழுவதும் பல அரச, தனியார் பேருந் துகள், சாதாரணமான பணப்பைகளுக்குப் பொருத்தமான கட்டணத்துடன் ஓடு கின்றன. ஆனால், நடுநிசிக்கு முன்பு அவைகளின் சேவை நிறுத்தப்பட்டு, அதிகாலையில் மீண்டும் ஆரம்பிக்கப் படுகின்றன. எங்களுக்கு இருந்த ஒரே வழி வாடகைக்கட்டண கார்கள் மட்டுமே. அவைகளிலும் பேரம் பேச ஏதுமில்லை. நிர்ணயிக்கப்பட்ட விமான நிலையம் நகரம் கட்டணத்தையே கேட்டார் சாரதி.

பொதுவாகவே சுற்றுலாப் பயணிகள் சம்பந்தப்பட்ட சேவை யில் இருப்பவர்களுக்கு ஆங்கிலம் தெரி கிறது. சாரதியுடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது அன்று நடந்த ஐரோப்பிய கால்பந்துப் போட்டியொன்று பற்றிப் பேச்சுத் திரும்பியது. கால்பந்து விளையாட்டில் மிகவும் ஆர்வமான மகன் கதிருக்கு அது சுவாரஸ்யமாக இருக்கவே அவர்களிருவரும் அதுபற்றிக் கதைத்துக்கொண்டிருந்தார்கள் நாங்கள் ஹோட்டலுக்கு வரும்வரை.

ரோடோஸ் நகரத்துக்கு வெளியே ஒரு அமைதியான வீதியில் அமைந்திருந்தது அவ்விடுதி. இரவு ஒரு மணியாகிவிட்ட அமைதி சூழலில் தெரிந்தது. ஹோட்டல் வரவேற்பு அறையில் இருந்தவர் எங்களை வரவேற்று அங்குள்ள நடைமுறைகளைச் சுருக்கமாகச் சொன்னார். நாங்களிருவரும் நன்றாகக் களைத்துப் போயிருந்தோம். எதையும் காலையில் எழுந்தபின் பார்த்துக் கொள்ளலாம், இப்போது 'தூங்குவதற்கு எங்கே கட்டில்?" என்ற எண்ணமே முழுவதுமாக ஆக்கிரமித்திருந்தது.

ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருந்த அந்த துணுக்குக் கதை என்னவென்று ஆர்வத்துடனிருக்கிறீர்களா ?

அதைச் சொல்லிவிட்டுத் தூங்கப்போகிறேன்!

முன்னொரு காலத்தில் ஒரு சவடாலடிக்கும் விளையாட்டு வீரன் அதிக கெட்டித்தனமில்லாத ஒருவன் இருந்தான். அவன் ஒரு சமயம் வெளி நாடுகளுக்கெல்லாம் பயணம் செய்துவிட்டுத் திரும்பி வந்து தனது வண்டவாளங்களை ஒரு கூட்டத்தினரிடையே அளந்தான். தனது பிரயாணத்தில் பல நாடுகளில் தான் விளையாட்டுப் போட்டிகளில் சாதனைகளெல்லாம் செய்ததாகப் பிரதாபித்தான். அவற்றிலொன்றாக தான் ரோடோஸுக்குப் போயிருந்தபோது அங்கு நடந்த போட்டியொன்றில் தான் மிகவும் நீண்ட பாய்ச்சலொன்று பாய்ந்து



எல்லாரையும் அசத்தி வென்று பாராட்டுப் பெற்றதாக அளந்தான்.

அப்போது கூட்டத்துக்குள்ளிருந்து வந்த குரல் ஒன்று;

"இதுதான் ரோடோஸ் என்று எண்ணிக்கொள் எங்கே பாய்ந்து காட்டு பார்க்கலாம்!"

இதன் கருத்து ஒரு மனிதன் தனது பெருமைகளை அளந்துகொண்டிருப்பதை விட அதைச்செய்து காட்டவேண்டுமென்று சொல்கிறது.

தொடரும்...

# 4வது இன்னிங்ஸ் மாஸ்ரர்


அபுதாபியில் ரங்கன ஹேரத்தின் விரல்கள் செய்த மாயத்தில் நீண்டகாலத்தின் பின் இலங்கைக்கு ஒரு டெஸ்ட் வெற்றி கிடைத்தது. இந்த போட்டியில் 6 விக்கெட்டுக்களை கொய்த ஹேரத், பாகிஸ்தானிற்கு எதிராக 100 விக்கெட் என்ற சாதனையையும், டெஸ்டில் 400 விக்கெட் என்ற சாதனையையும் படைத்தார். இதுதவிர, இன்னொருமைல்கல் லையும் எட்டியுள்ளார். நான்காவது இன்னிங்சில் 100 விக்கெட்டுக்கள் என்ற இலக்கே அது.

ஷேன் வோர்ன் (138), முரளிதரன் (106), கிளன் மெக்ராத் (103) ஆகியோரே இந்த பட்டியலில் ஹேரத்திற்கு முன்னால் உள்ளவர்கள். முரளிதரன் 35 இன்னிங்சில் 106 விக்கெட்டுக்களை எடுத்தார். வோர்ன், மெக்ராத் இருவருக்கும் 53 இன்னிங்ஸ் தேவையாக இருந்தது. ஹேரத் 36 இன்னிங்ஸ்தான் எடுத்துக்கொண்டார். மற்ற மூவரையும் விட ஹேரத்தின் சராசரிதான் (18.38) உச்சத்தில் உள்ளது. 5 விக்கெட்டுக்களை 11 முறை வீழ்த்தி யுள்ளார். இதிலும் ஹேரத்தான் முதலிடம். முரளி, வோர்ன் தலா 7 முறை வீழ்த்தி யுள்ளனர்.


நான்காவது இன்னிங்சில் விக்கெட் வேட்டை நடத்துவது மிக கடினமானது. ஆடுகளத்திற்கு துடுப்பாட்டக்காரர்கள் பழக்கப்பட்டு விடுவது, பந்துவீச்சாளர்கள் களைப்படைவது, போட்டிகள் நீண்டு கொண்டே செல்வதென பந்துவீச்சாளர்கள் விரும்பாத இன்னிங்ஸ் அது. ஒட்டுமொத்த டெஸ்ட் கிரிக்கெட்டில் வீழ்த்தப்பட்ட விக்கெட்டுக்களில் வெறும் 12.5% விக்கெட்டுக்கள்தான் நான்காவது இன்னிங்சில் வீழ்த்தப்பட்டுள்ளது. கடந்த பத்தாண்டு முடிவுகளின்படி முதலிரு இன்னிங்சில் வீழ்த்தப்பட்ட விக்கெட்டுக்கள் 31%. இந்தக்காலப்பகுதியில் டெஸ்ட் ஆட்டங்களின் முடிவு தெரியும் போக்கு அதிகரித்துள்ளதால், நான்காவது இன்னிங்சில் விழும் விக்கெட் வீதம் சிறிது அதிகரித்துள்ளது. என்றாலும் அது 15.4% தான்.

முதல் மூன்று இன்னிங்சை விட, நான்காவது இன்னிங்ஸ்தான் ஹேரத்திற்கு நன்றாக வாய்க்கிறது. வோர்ன், முரளி, மெக்ராத் மற்ற மூன்று இன்னிங்சிலும் 100 விக்கெட்டை வீழ்த்திய பின்பே நான்காவது இன்னிங்சில் அந்த மைல்கல்லை எட்டினர். ஆனால் ஹேரத் முதல் இன்னிங்சில் 85, மூன்றாவது இன்னிங்சில் 92 விக்கெட்தான் வீழ்த்தியுள்ளார்.

300 விக்கெட்டுக்கு மேல் வீழ்த்திய வீரர்களில், மொத்த விக்கெட்டில் 4ம் இன்னிங்ஸ் விக்கெட் வீதம் அதிகமுள்ளவர் (25% ) ஹேரத். மொத்தத்தில் நான்காம் இன்னிங்ஸ் மாஸ்ரர் நமது ஹேரத் தான்!




# காட்டப் போகிறாராம் அண்டர்சன்!




ஆஷஸ் அலப்பறைகள் ஆரம்பித்து விட்டன. இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன் சிலபல வார்த்தைகளை விட்டிருக்கிறார். அவுஸ்திரேலிய பக்கத்தில் எப்படி பட்டு தெறிக்கப்போகிறதோ தெரியவில்லை. அவுஸ்திரேலியர்கள் சும்மாவே தெறிக்க விடுபவர்கள், இம்முறை தொடர் அவுஸ்திரேலியாவில் என்றால் விடுவார்களா?

இரவு விடுதிக்கு வெளியே குஸ்தியிட்ட சிக்கலில் மாட்டியுள்ள ஸ்ரோக்ஸ் அணிக்கு திரும்புவாரா இல்லையா என்பது நிச்சயமற்றநிலையில் இருக்கும்போது, அண்டர்சன் கூறியிருக்கிறார் ஸ்ரோக்ஸ் மீள வரலாம். அப்படி நிகழ்ந்தால் இங்கிலாந்தின் திட்டங்களை சுபமாக நிறைவேற்றலாம். அவர் வரமுடியாவிட்டாலும், அந்த திட்டங்களை நிறைவேற்ற மற்ற வீரர்கள் முயல்வோம்" என.

அண்டர்சனிற்கு இது நான்காவது அஷஸ் தொடர். அனேகமாக இறுதியாக கூட இருக்கலாம். கடந்த இரண்டு வருடங்களில் எட்டு டெஸ்ட் போட்டிகளை காயத்தால் அவர் இழந்திருந்தார். ஆனால் இந்த கோடை காலத்தில் தென்னாபிரிக்க, மேற்கிந்தியத்தீவுகளிற்கு எதிராக நடந்த ஏழு போட்டிகளில் 39 விக்கெட்டுகளை அள்ளியிருக்கிறார்.


"அவுஸ்திரேலியாவில் ஆஷஸ் விளையாடி வெற்றிபெறுவதுதான் ஒவ்வொரு இங்கிலாந்து வீரனின் கனவும். சரியான வழியில் சென்றால் அதை அடையலாம். இம்முறை நாம் அதை செய்து காட்டுவோம்" என்றுள்ளார்.

# வித்தியாச முச்சதம்!

ஒரு வருடத்தில் 3 டெஸ்ட் சதங்களை எடுத்த இலங்கை தொடக்க வீரர் பட்டியலில் திமுத் கருணாரத்னவும் இணைந்துள்ளார். முன்னார் 2012 இல் டில்சான் 3 சதங்களை பெற்றிருந்தார். இந்த வருடத்தில் 5 சதங்களை அடித்து, வருடத்தில் அதிக சதமடித்த தொடங்க வீரர் பட்டியலில் தென்னாபிரிக்காவின் டீன் எல்கர் முதலிடத்தில் உள்ளார். இதுதவிர, கருணாரத்ன கடந்த 3 வருடங்களில் நான்கு முறை 300 இற்கும் அதிக பந்துகளை ஒரு இன்னிங்சில் சந்தித்திருக்கிறார். இந்தகாலப்பகுதியில் விளையாடிய அனைத்து நாட்டு தொடக்க வீரர்களையும் விட சிறந்த பெறுபேறு இது. இங்கிலாந்தின் அலிஸ்டர் குக், பாகிஸ்தானின் அசார் அலி ஆகியோர் 3 முறை 300இற்கும் அதிக பந்துகளை இன்னிங்சொன்றில் சந்தித்துள்ளனர். பாகிஸ்தானுடனான இரண்டாவது டெஸ்டில் முதல் இன்னிங்சில் இலங்கை பெற்றது 482 ஓட்டங்கள். இரண்டாவது இன்னிங்சில் 96 ஓட்டங்கள். இரண்டிற்குமிடையிலான ஓட்ட வித்தியாசம் 386 ஓட்டங்கள். இலங்கை டெஸ்ட் வரலாற்றில் இரண்டு



இன்னிங்ஸ் ஓட்டங்களிற்கிடையில் பெரிய ஓட்ட வித்தியாசம் ஏற்பட்டுள்ளது இந்த போட்டியில்தான். முன்னதாக 1992 இல் அவுஸ்திரேலியாவுடனான போட்டியில் 383 ஓட்டங்கள் வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. கடந்த சில மாதங்களாக கடுமையான விமர்சனங்களை சந்தித்து வந்த கருணாரத்னவின் அண்மைக்கால ஆட்டத்தில் மெருகேறியிருப்பது குறிப்பிடத்தக்கது.




# சப்பாட்டு பிரியரா?

பாகிஸ்தானின் இளம் துடுப்பாட்ட வீரர் பாபம் ஆஸாம் மீது மிகப்பெரிய எதிர்பார்ப்பை அந்தநாட்டு கிரிக்கெட் சபை வைத்துள்ளது. இந்தியாவிற்கு விராட் கோலி மாதிரி எங்களிற்கு பாபர் என இன்ஸமாம் இவரை தலையில் தூக்கிவைத்து கொண்டாடுகிறார். அதற்கேற்ப திறமை அவரிடம் உள்ளதுதான். அவர் ஆட்டமிழப்பதில் உள்ள ஒரு வினோததன்மைதான் பாகிஸ்தான் அணிக்கு பெரிய தலையிடியாக உள்ளது. இதுவரை 12 டெஸ்ட்தான் பாபர் ஆஸாம் விளையாடியுள்ளார். 19 இன்னிங்ஸ் ஆடியுள்ளார். அதில் 15 முறை ஆட்டமிழந்தது எப்படி தெரியுமா? தேனீர், உணவு இடைவேளைக்கு முன்பின்னாக மிக நெருக்கமாக ஆட்டமிழந்துள்ளார். தேனீர் இடைவேளைக்கு ஒரு சில பந்துகள் இருக்கும்போது அல்லது இடைவேளையின் பின் ஆட்டம் தொடங்கிய ஒருசில பந்துகளில் அவர் ஆட்டமிழந்துள்ளார்.

பாபர் இளம்வீரராக இருப்பதால், கவனச்சிதைவை தடுக்க முடியாமல் இப்படி ஆட்டமிழக்கலாமென கருதப்படுகிறது. முதிர்ந்த டெஸ்ட் வீரர்கள் யாரும் இப்படி ஆட்டமிழக்கமாட்டார்கள். ஆனால் பாபருக்கு உணவு, தேனீர் இடைவேளை பெரிய பிரச்சனையாக இருக்கிறது.



# பூபாலசிங்கம் புத்தகசாலை
## POOBALASINGAM BOOK DEPOT

இல. 04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
No. 04, Hospital Road,
Jaffna.
T.P:- 021 222 6693

பாடசாலை உபகரண பொருட்கள்,
அலுவலக பொருட்கள் மற்றும்
தினசரி, வாரமலர் ஆகியவற்றை
பெற்றுக் கொள்ளலாம்.



# PSP Rent a Car
கார் வாடகைக்கு விடப்படும்



வருட, மாத, வார, நாள் அடிப்படையில்
கார் வாடகைக்கு வழங்கப்படுவதுடன்
திருமண மற்றும் சுபகாரியங்களுக்கும்
வாடகைக்கு வழங்கப்படும்.

180/8, Sir Pon Ramanathan Road,
(Opposite to Science Faculty)
(யாழ் பல்கலைக்கழகம் முன்பாக)
Thirunelvely.
Contact No :
**0773777502 / 0777852456**
E- Mail : psprawin25@gmail.com
Facebook : psprent a car

• AXIO - KL • PREMIO - KF • NISSAN 15 - KD • NISSAN16 - KD • ALTO - CAB • INDICA - KI • DAOO - 18

S.K Karan
Director
0777442846

கிளிநொச்சியில் சகல வசதிகளுடன்

# HOTEL SELLA Rest
A/C, Non A/c Rooms Conference
ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

அத்துடன் யாழ்ப்பாணம் - கொழும்பு
பயணத்திற்கான A/c, Non A/c பேருந்து
ஆசனப்பதிவுகளையும் மேற்கொள்ளலாம்.

No. 46, Uthayanagar West,
Kanagapuram Road,
Kilinochchi
021 228 5613
hotelsella@yahoo.com
021 492 5665, 021 228 5613

# TILKO
## JAFFNA CITY HOTEL

TILKO hotels

Address: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 5969, Fax: 021 222 7291
e-mail: tilko.tilak@gmail.com Web: www.cityhoteljaffna.com
Mob : 077 780 393, 0777 696 443



விளம்பரத் தொடர்புகளுக்கு 0768255563, 0214927561

# சசிகா லேணர்ஸ்
## THE SASIKA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
DS NO - 882




**முறைமையான சாரத்தியத்தை கற்றுக்கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்**
**சாரத்திய அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு தேவையான ஆவணங்கள்**

- ✓ தேசிய அடையாள அட்டை
- ✓ மருத்துவச்சான்றிதழ் (தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம்)
- ✓ பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (மூலப்பிரதி)
- ✓ திருமண அத்தாட்சிப் பத்திரம் (மூலப் பிரதிபெண்களுக்கு மட்டும்)
- ✓ சாரதி அனுமதிப்பத்திரம் (வைத்திருந்தால்)

**வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும், (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)**

- ✓ விண்ணப்பதாரி, கட்டணங்களை தவணை முறை அடிப்படையில் செலுத்த முடியும்.
- ✓ எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புக்களும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.
- ✓ எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- ✓ எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.
- ✓ விரைவில் எழுத்துப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.

## தலைமைக் காரியாலயம்

இல. 57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HOTLINE 0777226247
☎ 0212217678 / 0776140361
sasikadrivingSchool@gmail.com
sasikalearners.com

## கிளை நிறுவனங்கள்

**வேலணை**
வங்களாவடிச் சந்தி, வேலணை
☎ 0212215472 / 0703013012

**மல்லாகம்**
கே.கே.எஸ் வீதி
☎ 0212243393 / 0703013014

**சங்கானை**
ஓடக்கரை வீதி, சங்கானை
☎ 0212251664 / 0703013016

**யாழ்ப்பாணம்**
இல.281,மணிக்கூட்டுக் கோபுரவீதி,
யாழ்ப்பாணம்.
☎ 0212228004


இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 15.10.2017 அன்று வெளியிடப்பட்டது.